


சென்னைக்கு வந்த
'மழை மேகம்'!
KALKI 27.9.98
கல்கி
ரூ. 4.50
பி.எம். மீன்
பி.எம்!


A Treasure
Full of
Beautiful
Dreams
Ashika Sarees
ASHIKA
SWATEE
ASHIKA
SAREES
MUMBAI-400 002
வாங்கும் முன்பு தலைப்பில் ஆஷிகா அடையாளம் உள்ளதா என கவனித்து வாங்குவீர்
ஆஷிகா ஸாரீஸ்
அனைத்து எல்லா ஷோரூம்களிலும் கிடைக்கிறது
DENSONS-98

கல்கி இன்டர்நெட்
முகவரி :
www.kalkiweekly.com
ஈ மெயில் :
kalki@md2.vsnl.net.in



'மேகனா' என்றால் மழைமேகம்!

"**நா**ன் பிறந்தபோது என் பெற்றோர் எனக்கு 'நமாமி' என்று பெயர் வைக்கத்தான் விரும்பினார்கள். ஆனால், ஒரு பண்டிதரின் ஆலோசனைப்படி 'ம'வில் ஆரம்பிக்கிற பெயராய்த் தேடி 'மேகனா' என்று பெயரிட்டார்கள். எனக்கு விவரம் தெரிந்த நாளில் மேகனா மேத்தா, மேகனா கான் என்று நாலைந்து மேகனாக்கள். அதனால் 'எனக்கு இப்படி ஒரு சாதா ர ண ப் பெயரா' என்று என் பெயரை நானே வெறுத்ததும் உண்டு. ஆனால், நாளடைவில் என் பெயர் மீது எனக்குக் காதலே ஏற்பட்டு விட்டது! மேகனா என்றால் மழை கொண்டு வரும் மேகம் என்று அர்த்தமில்லையா? அதற்கேற்ப எனக்குத் தண்ணீர் என்றால் ரொம்ப இஷ்டம். (தண்ணீர்தான்! 'தண்ணி' அல்ல!)

"பீச்சில் நேரம் போவது தெரியாமல் நீச்சலடிக்கப் பிடிக்கும். அலை ஓசையினைக்

கேட்டபடி பீச் மணலில் படுத்துக் கிடக்கப் பிடிக்கும். மழை தூற ஆரம்பித்து விட்டால், நான் தொப்பலாக மழையில் நனைவதை, இந்த உலகில் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. இதைவிட ஒருபடி மேலாக இன்னும் ஒரு விஷயம் சொல்லட்டுமா? பாத்ரூமில் 'நான் செய்த பாவங்களை எல்லாம் கரைத் தருள்வாய் கடவுளே!' என்கிறாற்போல இரு கைகளையும் அகல விரித்தபடி, ஷவரின் கீழே நனையப் பிடிக்கும்! இப்படிச் சொல்வது தமாஷுக்குத்தான்! நான் பாவ காரியங்கள் எதையும் செய்வதில்லை; பாவ மன்னிப்பும் கோருவதில்லை'' என்று சொல்லி ஒரு குழந்தை மாதிரிச் சிரிக்கிறார் மேகனா ரெட்டி. சானல் 'வீ'யின் பாபுலரான அழகிகளுள் ஒருவர்.



சமீபத்தில் சென்னை வந்திருந்தவரைச் சந்தித்தபோது மிக இயல்பாகப் பேசினார். நாலு வரிக்கொருதரம் சிரிப்பு. அகன்று குவியும் உதடுகள். பேசும் கண்கள். ஸ்லிம்மான உடம்பு. இருபத்து மூன்று வயதாவதாக அவரே ஒப்புக் கொள்கிறார். ஆனாலும், ''எனக்கு முப்பத்தி இரண்டு வயதுக்குரிய மென்டல் மெச்சூரிடியும் உண்டு. பனிரெண்டு வயதுக்குரிய குழந்தைத்தனமும் உண்டு. எனக்கு அப்படி இருப்பது ரொம்பப் பிடித்திருக்கிறது'' என்கிறார்.

அப்பா தெலுங்கு. அம்மா கன்னடம். காதல் திருமணம். பிறந்து, வளர்ந்ததெல்லாம் மும்பையில். நன்றாகப் படித்தால்தான் நல்ல வாழ்க்கை அமையும் என்று சொல்லி வளர்க்கப்பட்ட குழந்தைகள். மூவரில் இவர்தான் கடைசி! காலேஜில் சயின்ஸ் குரூப் சேர்ந்த ஒரே மாதத்தில் சரிப்பட்டு வராது என்று சொல்லி, காமர்ஸ் படிக்கப் போய் விட்டார். முதல் வருடப் படிப்பின் போதே மாடலிங் செய்ய ஆரம்பித்து, மூன்றாவது வருடத்தில் பல வாய்ப்புகள் வந்து, ரொம்ப பிஸியாகி விட்டார்!

“சின்னத் திரைக்கு வந்தது எப்படி?''

“பன்னிரண்டு பேர் ஆடிஷன் (வீடியோ) டெஸ்டுக்கு அழைக்கப்பட்டிருந்தோம். ஆளுக்கு ஒரு ஸ்கிரிப்டைக் கொடுத்துப் பேசிக் காட்டச் சொன்னார்கள். அந்த ஸ்கிரிப்ட்டைப் படித்தபோது, 'இதெல்லாம் ஒரு ஸ்கிரிப்டா? நான்சென்ஸ்' என்று தோன்றியது. நானே சொந்தமாய்ப் பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு, எனக்குத் தோன்றியதை நான்பேசினேன்; செலக்ட் ஆனேன்! அதையேதான் நான் இன்றைக்கும் கடைபிடித்து வருகிறேன். மற்றவர்கள் ஸ்கிரிப்ட் எழுதிக் கொடுத்தால், வேண்டாம் என்று சொல்லி விடுவேன். நானே எனக்கு ஸ்கிரிப்ட் எழுதிக் கொள்ளும் வழக்கமும் கிடையாது. கேமரா முன் நின்று, பேச ஆரம்பித்தால் சரளமாகப் பேசிக் கொண்டேயிருப்பேன்! என் மூளை யோசிக்கற வேகத்துக்கு, என் வாய் பேச முடியாது சில சமயம் திணறிப் போவேன். அப்போது சிரிப்பு என்னையும் அறியாமல் வந்து விடும். அது ரொம்ப நேச்சுரலாக இருக்கும் என்பதால் அப்படியே விட்டு விடுவேன்!''

மேகனா பேசுகிறபோது, முற்றிலும் எதிர்பாராமல் பகவத்கீதை கொடேஷன்கள் சில வந்துவிடுகின்றன! நமது ஆச்சரியத்தைப் புரிந்து கொண்டவர் போல, ''எனக்குப் பஞ்சதந்திரக் கதைகள் முதல் உபநிஷத்கள்

வரை எல்லாவற்றிலும் ஆர்வம் உண்டு. நிறையப் படிப்பேன். எத்தனை படித்தாலும், என் படிக்கிற தாகம் மட்டும் தீரவே மாட்டேன் என்கிறது" என்கிறார்.

பேசுகிறபோதே, சில விநாடிகள் கண்கள் மூடிக் கொள்கின்றன. கைகள், தியானம் செய்வதுபோல இணைகின்றன.

"மேகனா! தியானம் செய்வீர்களா?"

"ஆமாம்! விபாசனா மெடிடேஷன்! தினம் ஐந்து நிமிடமோ, அரை மணி நேரமோ! மெடிடேஷன் ஈஸ் எ மஸ்ட்! கண்களை மூடி தியானத்தில் அமர்ந்துவிட்டு, மறுபடி எழுந்திருக்கிறபோது உடம்பும், மனசும் லேசாகிப் போனதுபோல உணருவேன்."

"உடம்பு ஸ்லிம்மாய் இருப்பதன் ரகசியம் உணவுக் கட்டுப்பாடா?"

"உணவில் கட்டுப்பாடா? இல்லவே இல்லை! எனக்கு ஆவக்காயில் ஆரம்பிக்கும் ஆந்திர உணவானாலும் சரி, காண்டினென்டல் உணவாலும் சரி, நன்றாய், ரசித்து, ருசித்துச் சாப்பிட வேண்டும். சாப்பிடுகிறபோது அரட்டை, படிப்பு, மூவி என்று ஒரு இடையூறும் கூடாது. சிறு வயது முதலே அதுதான் பழக்கம். அப்படி இருந்தும் நான் யானைக் குட்டி போல இல்லாமல் இருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் நான் கடைபிடிக்கும் 'வென்னீர் தெரபி'தான்! தினமும் வெது வெதுப்பான தண்ணீரைக் கணிசமாய் அருந்துவதன் மூலம் அதிகப்படியான கொழுப்பு கரைந்து உடல் பருமனாகாமல் பாதுகாக்கலாம். தவிர, ஓட்டமும் என் ஃபேவரிட் உடற்பயிற்சி!"

"உங்கள் பெற்றோர் போலவே, நீங்களும் காதல் திருமணம்தான் செய்து கொள்ளுவீர்களா?"

"அப்பாவுக்கு அறுபத்து மூணு வயசாகிறது. அம்மாவுக்கு ஐம்பத்து மூணு. இன்னமும் ஆக்டிவ் ஆன லைஃப். இருவருக்கும் இடையிலான தோழமை உணர்வுடன் கூடிய தாம்பத்தியத்தைக் கண்டு நான் பிரமிக்கிறேன். ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் உணர்வினைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். இவர்களுக்கு மகளாய்ப் பிறந்தோமே என்று நினைத்து பெருமைப் படுகிறேன். தாலி கட்டி, கல்யாணம் செய்து கொண்டுவிட்ட ஒரே காரணத்துக்காக, கணவன் குடிகாரன், சோம்பேறி எப்படியானாலும், அவன் கொடுமைகளையெல்லாம் மனைவி சகித்துக் கொண்டே தீர வேண்டும் என்கிற காலம் மலையேறிப் போய், அதன் எதிர் துருவம் போன்ற நிலைமை இன்று இருக்கிறது! இரண்டு முறை சினிமாவுக்குப் போய், ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு, நாலு தரம் கோக் குடித்து விட்டு, ஆணும், பெண்ணும் காதல் வயப்பட்டுக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தீர்மானிக்கிறார்கள். திருமணம் ஆனதும், காதலித்த காலத்தை விடக் குறுகிய நாட்களிலேயே, ஒருவரோடு ஒருவர் ஒத்துப் போகாமல், விவாகரத்துதான் தீர்வு என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள். இந்த இரண்டையுமே நான் ஆட்சேபிக்கிறேன், வெறுக்கிறேன். நான், என் உணர்வுகளுக்கு மதிப்பு தரக்கூடிய, சுய சிந்தனையுடன் கூடிய ஆண்மகன் கிடைக்கும்வரை காத்திருக்கத் தயார்! அவரைக் கண்டபின், முழுமையாகப் புரிந்து கொள்ளுகிறவரை கல்யாணத்துக்கு அவசரப்படமாட்டேன். காரணம், என் அப்பா, அம்மாவுடையதைப் போல என் திருமணமும் நீண்ட காலம் நீடிக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை, லட்சியம்."

"இன்னுமொரு பத்து வருடங்கள் கழித்து எப்படி இருப்பீர்கள் மேகனா?"

"பத்தாண்டுகளில், திருமணம் முடிந்து, ஒரு பெண் குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்பது என்னுடைய ஆசை! நிறைவேறுமா என்று எனக்குத் தெரியாது."

"சினிமாவில் நடிக்க விருப்பமா?"

"வாய்ப்புகள் வந்தன. மறுத்து விட்டேன். காரணம் சினிமாவில் எல்லாமே டூ மச்! பணம்... பப்ளிசிடி.... இத்யாதி... இத்யாதி..." அதில் எனக்கு ஆர்வமில்லை."

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**

"நம்ம தலைவர் பலே ஆள்! கட்சி வளர்ச்சிக்கு யூரியா, சல்பேட், பொட்டாஷ் உரம் வாங்கியதாகச் செலவு எழுதியிருக்கார்!"

– நாஞ்சில் சு. நாகராஜன்





• வாரிசு



• விழுதுகள்

ராமானந்த் சாகரின் ராமாயணம், ஸ்ரீ கிருஷ்ணா, பி.ஆர். சோப்ராவின் மகாபாரதம் ஆகியவை மெகா சீரியல்களாகத்தான் அமையும் என்பது எதிர்பார்த்த ஒன்றுதான். 'ஹம்லோக்', 'புனியாத்' போன்றவற்றின் வெற்றியைத் தொடர்ந்து, இரண்டாவது சானலில் துவங்கப்பட்ட முதல் சீரியலான 'ஜுனூன்' நான்கு வருடங்களாகியும் இன்னமும் கன்னித்தீவாய்த் தொடர்ந்து கொண்டிருக்கிறது. நிஜமாகவே ஒரு பெண்மணிக்கு பத்து மாதங்களில் பிரசவமாகிவிடும் என்றாலும் இந்தத் தொடரில் வந்த மினி என்ற பாத்திரம் ஒன்றரை வருடங்கள் கர்ப்பமாகவே வளையவந்தாள்! (அதாவது அவ்வளவு எபிஸோடுகளுக்கு).

இவற்றையெல்லாம் தூக்கியடிக்கும் விதத்தில் தினந்தோறும் தொடரும் சீரியலாக 'சாந்தி', 'ஸ்வாபிமான்' ஆகியவை வரத் தொடங்கின. 262 எபிஸோடுகள்!

தமிழுக்கும் இந்த ஜுரம் பிடித்துக் கொண்டு இன்று ஏராளமாய் அனுமார் வால் தொடர்கள்!

தமிழைப் பொறுத்தவரை முதல் தினசரி மெகா சீரியல் என்று 'ரகுவம்ச'த்தைக் குறிப்பிடலாம். சீரியலின் துவக்கத்தில் "இது ஒரு வருடம் வரும். அதற்கு மேலும் வரக்கூடும்"என்று இயக்குநர் பாலசந்தர் அறிவித்தார். 520 எபிஸோடுகளுக்கு திட்டமிட்டதாகக் கேள்வி. ஆனால் 123 உடன் ஒரு முடிவுக்கு வந்தது.

அடுத்த மெகா சீரியல் தூர்தர்ஷனில் வெளியான 'விழுதுகள்'.

"ஹன்ஸா விஷன் நிறுவனத்திற்கு, தினசரி சீரியலுக்கான நேரம் கிடைத்ததும், அதை என் பொறுப்பில் விட முன் வந்தார்கள். வேண்டிய பணத்தைத் தந்தார்கள். எந்த விதத்திலும் அவர்கள் தலையிடவில்லை" என்கிறார் பாலசந்திரன். இப்போது டீவி. தயாரிப்பாளராகிவிட்டார். என்றாலும் நாடக உலகில் 'பாலா'வாக வேரூன்றியவர் இவர்.

"தூர்தர்ஷனில் 12:30லிருந்து 1:00 மணி வரை ஸ்லாட் கிடைத்தது. அந்த மதிய நேரத்தில் அப்போது எந்தத் தமிழ் நிகழ்ச்சியும் ஒளிபரப்பானதில்லை. அதனால் அந்த நேரத்தில் 'விழுதுகள்' ஒளிபரப்பாகிறது என்பது மக்களிடம் ரீச்சாகி, ஓரளவு சுதாரித்துக் கொள்ளவே மூன்றரை மாதங்கள் பிடித்தது. அதற்குப் பிறகு நிகழ்ச்சிக்கு கமர்ஷியல் மதிப்பும் கிடைத்தது. 'ப்ரைம் டைம்' எனப்படும் பின்மாலை நேர நிகழ்ச்சி அளவுக்கு எங்கள் நிகழ்ச்சியும் பிரபலமாகி, பார்வையாளர்கள் எண்ணிக்கை பெருகியது. ஒரு சராசரி பிரைம் டைம் நிகழ்ச்சி பார்வையாளர்களைக் காட்டிலும் எங்கள் நிகழ்ச்சிக்கு அதிகம் பெண் பார்வையாளர்கள் கிடைத்தார்கள்."

"ஒரு மெகா சீரியல் எப்படி வெற்றி

Eat சீரியல்! Sleep சீரியல்!

அடைகிறது...?" கேட்டோம்.

"நிறைய திட்டமிட வேண்டும். நாங்கள் 35 எபிஸோடுகள் முன்னமேயே எடுத்துத் தயார் நிலையிலேயே தொடர்ந்து இருந்தோம். இதனால்தான் இடையே திரையுலக வேலை நிறுத்தத்தின்போது தொழிற் கலைஞர்களும் அதில் பங்கு கொண்டபோது தாக்குப் பிடிக்க முடிந்தது. தயாரிப்பாளர், இயக்குனர் யாருடைய சிபாரிசின் காரணமாகவும் ஒரு நடிகரைத் தேர்வு செய்யக் கூடாது; அப்படித் தேர்வு செய்தால் ஏதோ ஒரு கால கட்டத்தில் குழுவுக்குள் கசப்பு ஏற்படலாம் என்பதை உணர்ந்ததால் அந்தத் தவறை நாங்கள் செய்யவில்லை. பங்கு கொள்ளும் கலைஞர்களுக்கு நிறைய சம்பளம் கொடுக்கவில்லை என்றாலும் நிறைவாகக் கொடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட கலைஞர்களில் மிகப் பெரும்பாலானோர் அன்றைய வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள். விழுதுகள் சீரியலின் கடைசி நாள் ஷூட்டிங் நடந்து முடிந்தபோது கேமிராவுக்கும் அவுட்டோர் யூனிட்டுக்கும் மட்டும்தான் பணம் பாக்கி. ஒரு சில விஷயங்களில் 'பட்டுத் தெரிந்து' கொண்டோம். சில நாடக நடிகர்களின் திறமையை மனத்தில் கொண்டு புக் செய்தோம். ஆனால் அவர்களுக்கு வயதாகிவிட்டது என்பதையும், உச்சரிப்புத் தெளிவு குறைந்து விட்டது என்பதையும் மறந்து விட்டோம். எனவே அவர்களை நீக்கும்படியானது. அவர்கள் கொஞ்சம் அப்ஸெட் ஆனார்கள். 'ஈட் கிரிக்கெட், ஸ்லீப் கிரிக்கெட்' என்று விளம்பரம் வருகிறதே அதுபோல, 24 மணி நேரமும் மெகா சீரியல் சம்பந்தமான சிந்தனையுடனேயே இருக்க வேண்டும். இப்படியெல்லாம் இருந்ததால்தான் 'வாரிசு' தொடங்குவதற்குமுன் வெறும் எட்டு சதவிகிதம் மட்டுமே பார்வையாளர்களைப் பெற்றிருந்த அந்த மதிய சன் டீவி. ஸ்லாட்டுக்கு இன்று 43 சதவீதம் பார்வையாளர்கள்!

"ஒரு மெகா சீரியலுக்கு உண்மையான கதாநாயகன் திரைக்கதை-வசனம் எழுதுபவர்தான். 261 எபிஸோடுகளுக்காவது திறமையாக வசனம் எழுதுவதென்றால் சும்மாவா?" என்றார் பாலா.


அந்த விதத்தில் விழுதுகள், வாரிசு ஆகிய தொடர்களின் 'ஹீரோ' ரமணீயன் தான். தானாக எழுதி மாளாமல் ஸ்டெனோக்கள் வைத்துக் கொண்டு, இரண்டு கம்ப்யூட்டர் டெர்மினல்கள் போதாத நிலையில் மூன்றாவதாக ஒன்றை நிறுவிக் கொண்டிருக்கிறார். அந்த அளவுக்கு ஒரு ராட்சஸ வேகம் தேவைப்படுகிறது மெகா சீரியல்களுக்கு. "சும்மாவா? ஒரு நாளைக்கு இரண்டு எபிஸோடாவது எழுத வேண்டியிருக்கிறதே!" என்றார். ஒரு எபிஸோடுக்கு 30 பக்கம் எழுத வேண்டுமாம்.

"பார்வையாளர்களை 'Addict' ஆக்குவதில்தான் ஒரு மெகா ஸீரியலின் வெற்றி இருக்கிறது. மெகா ஸீரியல்களில் தொடக்க காலத்தில் ஓர் அதீத சுவாரஸ்யத்தை பார்வையாளர்களிடையே ஏற்படுத்தி விட்டால், அதைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பார்கள்" என்கிறார்.

அதற்காக ஜவ்வு மாதிரி ஒரே கதையை வருடக் கணக்கில் இழுத்தடிப்பது நியாயமா? 'முக்கிய கதையை விட்டு, காட்சிகள் எங்கெங்கோ மேய்கிறது' என்ற குற்றச்சாட்டு சில மெகா சீரியல்கள் குறித்து எழுந்துள்ளதே!



• பாலா



• ரமணீயன்

"கிளைக் கதைகள் என்பது ஜவ்வு அல்ல. மைய இழையை மெருகு படுத்தும், அழகு சேர்க்கும் ஆபரணங்கள் என்று சொல்லலாம். தவிர விழுதுகள், வாரிசு இரண்டிலுமே ஒன்றுக்கு மேற்பட்ட மையக் கதைகளே இருப்பதுபோல்தான் உருவாக்கினோம். இவற்றை ஓர் இழை இணைக்கும். 'கோயில் மூலவர் போதுமே, பிராகாரம் எதற்கு? முன் மண்டபம் எதற்கு' என்றெல்லாம் கேட்கலாமா? அது போலத்தான் இதுவும்.

சினிமா நட்சத்திரங்களை மெகா

			ரூ.
ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ்	–	4	லட்சம்
கல்பனாத் ராய்	–	1.8	லட்சம்
ராஜ் பாப்பர்	–	7	லட்சம்
விஜயராஜே சிந்தியா	–	8	லட்சம்
ஜெய்பால் ரெட்டி	–	4.5	லட்சம்
ஆர். ஜனார்தனம்	–	11.00	லட்சம்
கானிகான் சவுத்திரி	–	42	லட்சம்
சுனில் தத்	–	2	லட்சம்
சதிஷ் சர்மா	–	1.5	லட்சம்

அரசியல்வாதிகளின் பெயர்களும் – சில லட்சங்களும் கொண்ட இந்த பட்டியல் என்னவென்று பார்க்கிறீர்களா? மேற்கண்டவர்களின் கட்டப்படாத தொலைபேசி பில் தொகைதான்! வருடத்திற்கு எம்.பி.க்கள் ஒரு லட்சம் கால்கள் இலவசமாகச் செய்யலாம். மேற்கண்ட தொகை அந்த இலவச கால்களுக்கு மேல்!

இப்படிப்பட்ட பொறுப்பற்ற தலைவர்கள் தான் பொது மக்கள் மட்டும் டெலிஃபோன் பில்லைத் தாமதமின்றிக் கட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்!

ஆதாரம்: 'அவுட் லுக்'

– கலா

சீரியல்களில் பயன்படுத்துவது அவசியமில்லாத ஒன்று என்று ரமணியன் கருதினாலும், 'மங்கை' தொடருக்கு கே.ஆர். விஜயாவும், 'சக்தி'க்கு பானுப்ரியாவும் தேவைப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தொடர்களை தொடக்க காலத்தில் பேசவைப்பதற்கு இந்தத் திறமைசாலிகளின் சினிமாக் கவர்ச்சியும் உதவியது உண்மை.

ஆனால் 'சக்தி'யின் இயக்குனர் முனீரைத் தொடர்பு கொண்டபோது "சினிமா நட்சத்திரங்களைப் போடுவதால் ஒரு தொடர் பிரபலமாகும் என்று சொல்லமுடியாது. நாலு எபிஸோடுகள் பார்ப்பார்கள். பிடிக்கவில்லை என்றால் தொடர்ந்து பார்க்க மாட்டார்கள். மங்கை தொடரில் பானுப்ரியாவின் நடிப்புக்குத் தீனிபோடும் வகையில் நல்ல பாத்திரம் அவருக்கு உருவானதால்தான் வெற்றி கிடைத்தது" என்கிறார்.

பொதுவாகவே டீ.வி.சீரியல் தயாரிப்பாளர்களுக்கு, குறிப்பாக மெகா சீரியல் தயாரிப்பாளர்களுக்கு எதிர்கொள்ள வேண்டிய அவஸ்தைகளை ஒரு டீ.வி. தயாரிப்பாளர் விளக்கினார்.

"சன் டீ.வி.யில் ப்ரைம் டைமில் ஒரு ஸ்லாட் (அரைமணி நேரம்) வாங்க 65,000 ரூபாய் கொடுக்க வேண்டும். இதற்கு 240 நொடிகள் விளம்பரங்களுக்கான அனுமதி உண்டு. அதாவது 10 நொடி ஓடும் 24 விளம்பரங்கள். ஒரு விளம்பரத்துக்கு மிகக் குறைந்த கட்டணமான 5000 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும், 1,20,000 ரூபாய் சம்பாதிக்கலாம். இதில் சன் டீ.வி.க்கான 65,000 மற்றும் தயாரிப்புச் செலவு போக மீதி எல்லாம் லாபம்தான். இந்த வகையில் டீ.வி. சீரியல்கள் பொன் முட்டையிடும் வாத்து என்றுதான் தோன்றும். ஆனால் இதற்குப் பல தடைக் கற்களைத் தாண்ட வேண்டும்.

விளம்பரதாரர் ஒப்புக் கொண்டது ஐயாயிரத்துக்கு என்றாலும் மார்க்கெட்டிங் ஏஜெண்ட் அதில் பத்து சதவீதம் குறைத்துக் கொண்டுதான் பில் போடுவார். தவிர பதினைந்து சதவீதம் கமிஷன் வேறு அவருக்கு! ஆக 3500 ரூபாய்தான் தயாரிப்பாளர் கைக்கு வரும். அதுவும் உடனடியாக அல்ல, ஒளிபரப்பாகி 90 அல்லது 120 நாட்கள் கழித்து.

விளம்பரதாரர்கள் ரிலீஸ் ஆர்டர் என்ற ஒன்றை (ஒப்பந்தம் மாதிரி) அளித்த பிறகுதான், அந்த விளம்பரத்தை ஒளிபரப்பத் தொடரின் தயாரிப்பாளர் சம்மதிக்க வேண்டும். ஆனால் அவசரத்தில் சில சமயம் வாய்வழி ஒப்புதலோடு விளம்பரத்தை ஒளிபரப்பி விட்டு, பிறகு அதில் பாதித் தொகைக்குதான் ஒத்துக் கொண்டதாக சாதிக்கும் விளம்பரதாரர்களிடம் நொந்து போனவர்கள் உண்டு! இந்த வகையில் பல லட்சங்கள் தராமல் ஏமாற்றியவர்களில் சில வருடங்களுக்கு முன் தொடங்கப்பட்ட ஒரு மாதர் இதழும் உண்டு.

"இந்த விளம்பரம் குந்தகமின்றி ஒளிபரப்பானது" என்று டீ.வி. நிலையத்திலிருந்து ஒரு சான்றிதழ் அனுப்பி, மூன்று-நான்கு மாதங்கள் கழித்தே பணம் வரும். அதுவும் அந்தத் தொடர் பாதியில் நின்று விடாமல், தரம் குன்றாமல் தொடர்ந்து கொண்டிருந்தால்!

அரைகுறையாக நின்றுபோய், திரையையே எட்டிப் பார்க்காத தொடர்களில் மட்டும் சுமார் ஆறு கோடி ரூபாய் முடங்கியிருக்கிறது என்று சொன்னார்கள்.

மெகா சீரியல்களால் தயாரிப்பாளரைவிட நடிகர்களுக்குக் கொண்டாட்டம்! பிரச்னையே இல்லாமல் ஏராளமாகச் சம்பாதிக்கலாமே? ரிடையரான சினி முகங்களெல்லாம் டீ.வி.பக்கம் படையெடுப்பதன் காரணம் இதுதான். அதுவும் நடிகை என்றால் ஒருநாள் ஊதியமே இரண்டாயிரத்திலிருந்து நாலாயிரம் வரை என்பதைக் கேட்டபோது மயக்கம் வந்தது!

— ஜி.எஸ்.எஸ்.



சிறுசேமிப்பும் அதன் முக்கியத்துவமும்

வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாம், சேமிப்பு என்னும் நல்லபழக்கத்திலும் ஒற்றுமையோடு இருந்தால், பொருட் செல்வத்தை மிக எளிதாக ஈட்ட முடியும். சில காலம் உயிர் வாழும் எறும்புகள், தங்கள் வாழ்வின் பிற்காலத்திற்கு தேவையான உணவுப்பொருட்களை சிறிது சிறிதாக சேர்ப்பது போல், உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் உள்ளடக்கிய நாம், பிற்காலத்திற்கு சேர்த்து வைப்பதில் தவறேது மில்லையே. சாதாரண மனிதன் தனது வருமானத்தில், வீட்டிற்குத் தேவையான பொருட்களை அல்லது மனைவிக்குத் தேவையான நகைகளை ஒரே நேரத்தில் செலவழித்து வாங்க முடியாமல் போகிறது. இவைகளை நிவர்த்தி செய்ய ராம் காஷ்யப்பின் சீட்டு ஒரு சிறந்த வழியாகும்.

மனிதனுக்கு மனிதன் பொருளாதாரத் தேவை வேறுபடுகிறது. சமுதாயத்தோடு ஒத்துவாழ, ஒவ்வொருவரும் முயற்சி செய்கிறார்கள். ஆனால், ஒரே நேரத்தில் மிக அதிக பணம் கொடுத்து எதையும் வாங்க சிரமப் படுகிறார்கள். நண்பர் மூலம் ராம் காஷ்யப் நிறுவனத்தில் சீட்டில் சேர்ந்ததால், அதை தகுந்த நேரத்தில் எடுத்து குடும்பத்தினரையும், குழந்தைகளையும் திருப்தி செய்ய முடிந்தது. தற்போது நண்பர்களுக்கும் ராம் காஷ்யப் பற்றி கூறி வருகிறேன்.

ஒற்றுமையே உயர்வுக்கு வழி, கூட்டுறவே நாட்டுயர்வு எனதறிந்த நாம், ராம் காஷ்யப் சீட்டு நிறுவனம் மூலமும் அவர்களின் இனிய சேவை மூலமும் மேலும் நன்மை பெறுவோமாக.

திரு எம். நடராஜன், M.Sc.,
சென்னை-600 091.

கட்சிகள் மாநாடு



• எங்கே மதிப்பு...?!



● லீலா ராம், தக்கலை

? சென்னையில் பூமியுள் புதையுண்ட அடுக்குமாடிக் கட்டடம் குறித்து...?

! மாநகராட்சி, எம்எம்டிஏ போன்ற அமைப்புகள் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி தந்தால் மட்டும் போதாது. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் அதற்கு உத்தரவாதமும் தருகிற அமைப்புகளாக இருக்க வேண்டியது அவசியம். அதற்கேற்ப விதி முறைகள் கடுமையாவது மட்டுமின்றி விதி முறைகளை மீறுபவர்களுக்குத் தண்டனையும் கடுமையாக்கப்பட வேண்டும்.

● பா. ராஜாமுஹம்மது, திருத்துறைப்பூண்டி.

? மதச் சார்புடைய கட்சி மதச்சார்பற்ற நம் நாட்டை ஆட்சி புரிவது முரண்பாடானது தானே?

! நிச்சயமாக முரண்பாடுதான். அதனால்தான் கருணாநிதியும் சொல்கிறார்: 'அவர்கள் ஹிந்துத்வா கொள்கையை விட்டு விடட்டும், நான் அவர்களை ஆதரிக்கிறேன்' என்று தெளிவாக இருக்கிறார். ஆனால் மத்திய ஆட்சி அல்பாயுளில் முடிந்து விடக் கூடாது என்பதற்காக அதை ஆதரிப்பது வேறு; கட்சியை – அதன் கொள்கைகளை ஆதரிப்பது வேறு என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள் குட்டையைக் குழப்புகிறார்கள் – மீன் பிடிக்கத்தான்!

• தெளிவு....



● ராஜி, கமுதி.

? கட்சிகள் மாநாடு நடத்துவது யாருக்காக? பேரணிகள் நடத்துவது எதற்காக? இவை இரண்டும் நடத்துவதால் பலன் உண்டா?

! மாநாடு நடத்துவது தொண்டர்கள் மீது தலைவர்கள் தங்கள் ஆளுமையைப் புதுப்பித்துக் கொள்வதற்காக; பேரணிகள் நடத்துவது பொது மக்களை மயக்க. பலன்...? – அது ஒரு பங்கு என்றால் இடைஞ்சல் ஒன்பது பங்கு! ராஜ்பவன் வளாகத்தில் பிரதமர் இறங்க ஹெலிகாப்டர் தளம் அமைக்க வனப்பகுதி மரங்கள் வெட்டப் பட்டுள்ளன! கடைசியில் அவர் இறங்கியது அண்ணா பல்கலைக் கழக வளாக தளத்தில்!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? கருணாநிதிக்கு சினிமா துறையினர் நடத்தும் பாராட்டு விழாவுக்கு பாட அழைத்தபோது டிஎம்எஸ் மறுத்து விட்டாராமே?

! அவருக்குப் பதிலாகத்தான் ஜெயலலிதாவே பாட ஆரம்பித்து விட்டாரே! 'நேரு ஸ்டேடியம் ஏகப்பட்ட செலவில் சர்வதேசத் தரத்தில் புதுப்பிக்கப்பட்டது; விளையாட்டுகள் நடைபெற வேண்டிய இடத்தில் சினிமா துறையினர் நடத்தும் பாராட்டு விழா அதனைப் பாழடிக்கும்' என்ற கருத்தை உள்ளடக்கிய ஜெயலலிதாவின் பாட்டு சுருதி சுத்தமாக ஒலிக்கிறது. (பார்த்தீர்களா, ஜெயலலிதா சரியான கருத்தைக் கூறினால் கல்கி பாராட்டவும் செய்யும்!) கருணாநிதிக்கான பாராட்டு விழா வள்ளுவர் கோட்டம், ஃபிலிம் சிடி போன்ற வேறு இடத்தில் நடத்தப்படலாம்.

• ஆந்திரா ⓒ அமெரிக்கா!



படம்: ஜீவன்

• மீண்டும் நினைப்பூட்டினார்

● கதா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? திடு திருவன மோசடிகளைத் தடுக்கவே முடியாதா...?

! இது தொடர்பாக தமிழக அரசின் புதிய சட்டம் முன்மாதிரியாகக்

யாருக்காக...?

நீங்கள் கேட்டவை – தராசு

கொள்ளப்பட்டு, அதே பாணியில் நாடு தழுவிய சட்டம் உருவாக்க மத்திய நிதி அமைச்சர் முடிவெடுத்துள்ளார். ஆயினும் மக்கள் பேராசைக்கு உள்ளாகி, சிந்திக்கும் ஆற்றலை இழந்து செயல்பட்டால் அவர்களை எந்த சட்டமும் காப்பாற்ற முடியாது. உதாரணம் – சமீப பாலு ஜுவல்லர்ஸ் சம்பவம்.

● கே.எஸ். நாராயணன், சென்னை – 78.

? தெலுங்கு தேசக் கட்சியின் ஆதரவு வாபஸ் பெறப்படலாம் என்ற சமீபத்திய அறிவிப்பு பற்றி...?

! ஆந்திர மாநிலத்தின் முன்னேற்றம் கருதி அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ள நாயுடு அப்படியொன்றும் அவசர முடிவு எடுக்க மாட்டார். வதந்திகளை நம்ப வேண்டாம்.

• ஆதாயம் தெரியும்!



● பி. பிரகாஷ், மதுரை – 16.

? 'கல்கி'யின் தபால் தலையை வெளியிட்டு மத்திய அரசு தன் கடமையைச் செய்து முடித்ததா...?

! அமரர் கல்கி நூற்றாண்டுத் தொடக்க விழாவில் மட்டுமின்றி, அடுத்து 'ஸ்பெனோகிராஃபர்ஸ்' கில்ட் விழாவுக்குச் சென்றால், அங்கேயும் மூப்பனார் இதே ஞாபகமாகப் பேசுகிறார்! விழாவுக்கு வந்திருந்த சென்னை பி.எம்.ஜியும் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம் என உத்தரவாதம் அளிக்கிறார். நடக்காமலா போகும்!

● என். பாலகிருஷ்ணன், மதுரை – 1.

? தாய்மையை விட அழகானது எது?

! அந்தத் தாயிடம் குழந்தை கொள்ளும் நேசம்.



• கருதி சுத்தம்!

● ஆர். ரமேஷ்பாபு, விருத்தாசலம் – 1.

? சன் டீ.வியில் யாகவா முனிவர் VS சிவசங்கர் பாபா பார்த்தீர்களா?

! சுய விளம்பரம் தேடிக் கொள்வதற்கு எத்தனையோ வழிகள்.. அதில் தெருச் சண்டையும் ஒரு வகையோ என்றுதான் தோன்றியது.

● கி. ஆத்தியடிமுத்து, கல்லிடைக்குறிச்சி.

? செப்டம்பர் 9, 1899, டிசம்பர் 5, 1954 – இவற்றின் ஒரு சிறப்பு அம்சம் என்ன?

! அமரர் கல்கி பிறந்த, மறைந்த இந்தத் தேதிகளின் சிறப்பில் ஆரம்பித்து அவரது ஒவ்வொரு சிறப்பாக பூவண்ணன் வரிசைப்படுத்தி பாரதி விழாவில் பேசக் கேட்டிருந்தால் தேதிகளின் மகத்துவம் உணர்ந்திருப்பீர்கள். அருமையாக முழங்கித் தள்ளினார். கல்கி பக்தியுடன் ஆராய்ச்சிக் கண்ணோட்டம், இலக்கிய ஆர்வம் யாவும் வெளிப்பட்டன.

● எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? 'ஜெ' தாயாக இருப்பதால் அரவணைப்பு அதிகம் என்கிறாரே டாக்டர் ராமதாஸ்...?

! அணைக்கிற கை அடிக்கவும் செய்யும் என்பதை ஜெ. கூட்டணி கட்சிகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை உணர்த்துகிறது. ராமதாஸுக்கு அதெல்லாம் தெரியும். இப்போதைக்கு அம்மா துதியே ஆதாயம் என்பதும் தெரியும்.

● இரா. சாலமோன், ஆலங்குளம் ❐

? சு. சுவாமியை அவரது கூட்டணியில் உள்ளவர்கள் யாருமே மதிக்காத நிலையில், அவர் கூட்டணியில் நிலைத்துக் கொண்டிருக்கிறாரே...?

! சகுனிகள் சில சமயம் தேவைப்படுவார்கள்; அவ்வப்போது பாராட்டும் பெறுவார்கள்; ஆனால் யாராலும் எப்போதும் மதிக்கப்பட மாட்டார்கள்.

❐ ரூ. 50 பரிசு பெறுபவர்:
இரா. சாலமோன், ஆலங்குளம்,
(முழு விலாசம் தேவை)

கொடி மகன்கள்!

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் இமயமலையில், பதினெட்டாயிரம் அடி உயரத்தில், சுதந்தர தினத்தன்று, தேசியக் கொடி ஏற்றினார்கள். இரண்டு சக்கர வாகனங்களில், கரடு முரடான இமய மலைப் பாதையில் பயணம் செய்து, வெற்றிக் கொடி நாட்டிய இக்குழுவில் இளம் வயதிலேயே போலியோ தாக்குதலால், இரண்டு கால்களும் சுவாதீனம் இழந்த இளைஞரும் ஒருவர்!

கிருஷ்ணமூர்த்தி என்ற ரயில்வே ஊழியர் தலைமையில் சென்ற அந்தக் குழுவினரின் அனுபவங்கள்:

● ஐவர் குழுவில், கிருஷ்ணமூர்த்தி, மணிவண்ணன், சங்கர் மூவரும் ரயில்வே ஊழியர்கள். வெங்கட்ராமன் கஸ்டம்ஸ் ஊழியர். உடல் ஊனமுற்றவர். வெங்கடேசன் மெக்கானிக். மற்ற நால்வரும் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வர, வெங்கட்ராமன் மட்டும், மூன்றாவது சக்கரம் பொருத்தப்பட்ட பஜாஜ் எம்-80 ல் வந்தார்.

● ரயிலில், டெல்லி சென்ற நாங்கள், ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி மாலை நாலு மணிக்கு, இந்தியா கேட் அருகிலிருந்து புறப்பட்டோம்.

● 'மணாலி'யைத் தாண்டியபின், கடல் மட்டத்திலிருந்து ஏழாயிரம் அடி உயரத்தில் 'ரொட்டாங் பாஸ்' என்று ஒரு பகுதி - 50 கி.மீ. தூரமுள்ள அந்தப் பகுதியினைக் கடக்க எங்களுக்கு ஐந்து மணி நேரம் ஆனது. அத்தனை கரடு முரடான, செங்குத்தான பாதை. அது மட்டுமின்றி, சுமார் முன்னூறு மீட்டர் தூரத்துக்கு, அரை அடி ஆழ சேறு. பைக்குகளைத் தள்ளிக் கொண்டு போகவே கஷ்டப்பட்டோம். மூன்றாம் சக்கரம் இணைக்கப்பட்ட ஸ்கூட்டர், சேற்றில் சிக்கிக் கொண்டுவிட, அதைத் தள்ளிக் கொண்டு, சேற்றைக் கடப்பதற்குள் வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது!

● இன்னோர் இடத்தில் வேகமாய் கொட்டும் அருவி. தண்ணீர் விழும் வேகத்தில் சாலை அரிக்கப்பட்டு, கூழாங்கற்கள் பரப்பினாற் போன்ற பாதை. மறுபடியும் மூன்று சக்கர ஸ்கூட்டர் சிக்கிக் கொண்டு திண்டாட்டம்.

● மலைப் பாதையில் சென்று கொண்டிருந்த ஒரு லாரி தவறி, பள்ளத்தாக்கில் விழுந்து விட, லாரியிலிருந்த எட்டு பேரும் பலி. அவர்களின் உடல்களை ராணுவ வீரர்கள் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டு, கிடத்தப்பட்டிருந்ததைப் பார்த்தோம். அதைத் தாண்டி சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரம் போனபோது, ஒரு ஜவான் தென்பட்டார். இன்னொரு சடலத்தை அவர் கண்டு பிடித்து விட்டதாகவும், அந்தத் தகவலை, முதலில் சடலங்களைப் பார்த்த இடத்தில்





உள்ள அதிகாரிக்கு உடனடியாகச் சொல்ல வேண்டும் என்று சொல்லி உதவி கோரினார். அவரை பைக்கில் அழைத்துக் கொண்டு, மறுபடி அந்த இடத்துக்குப் போக வேண்டியதாகி விட்டது. அதனால் எங்கள் பயணம் வெகுவாய்த் தாமதமானது.

● மலைப் பாதையில் ஓர் இடத்தில், டீக் கடையைக் கடந்தபோது, பிரட், பிஸ்கட் சாப்பிட்டோம். எங்களில் சோர்வாகியிருந்த இரண்டு பேர், அங்கேயே படுத்துத் தூங்க ஆரம்பிக்க, கடைக்காரர், "இது ஆக்சிஜன் குறைச்சலாய் உள்ள பகுதி. புதியவர்களுக்கு மூச்சுத் திணறல் வரும். இங்கே படுத்தீர்கள் என்றால், நிலைமை மோசமாகி, உயிருக்கே ஆபத்து நேரிடலாம். தாமதிக்காமல் புறப்படுங்கள்" என்று சொன்னதும், வாரிச்சுருட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

● நாங்கள் மேலே சென்று கொண்டிருந்த போது லாரிக்காரர் ஒருவர் எதிர்ப்பட்டார். ஆக்ஸிஜன் குறைவால் ஏற்படக்கூடிய மூச்சுத் திணறலுக்கான மாத்திரைகள் அவரிடமிருந்தன. 'இனி தனக்குத் தேவையில்லை' என்று எங்களிடம் கொடுத்து விட்டுப் போனார். அது வேறு ஒரு சந்தர்பத்தில் எங்களுக்கு ஆபத்பாந்தவனாய்க் கைகொடுத்தது.

● ஆக. 14ம் தேதி காலை நாங்கள் 'சர்சூ' என்ற இடத்தில் இருந்தோம். அங்கிருந்து நாங்கள், சுதந்தர தினத்தன்று கொடி ஏற்றத் திட்டமிட்டிருந்த 'லெக்' என்ற இடம் 251 கி.மீ.! எப்படியும், மாலைக்குள் அங்கு போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்ற லட்சியத்துடன் பயணத்தைத் தொடர்ந்தோம். 'லெக்'கை அடைந்த போது மாலை மணி ஆறரை.

● அங்கிருந்த மிலிட்டரி கேம்பில் போய் விஷயத்தைச் சொன்னபோது, அவர்களுடைய கொடியேற்று விழாவில் கலந்து கொள்ளலாம்; ஆனால் நாங்கள் கொடியேற்ற அனுமதி இல்லை! என்றார்கள். இவ்வளவு சிரமங்கள் பட்டு வந்து விட்டு, தேசியக் கொடியை நாங்கள் ஏற்றாமல், வேறு யாரோ ஏற்றுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க எங்களுக்கு விருப்பமில்லை.

● மிலிட்டரி கேம்பிற்கு வெளியே, தள்ளி அமைந்திருந்த கேந்திரிய வித்யாலயா பள்ளி வளாகத்தில், சுதந்தரப் பொன் விழா தினத்தன்று கொடியேற்றினோம்; பட்டொளி வீசிப் பறந்த தேசியக் கொடி கண்டு எங்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர். நாங்கள் பட்ட கஷ்டங்கள் எல்லாம் தூசு போல ஆயின. கூடியிருந்த உள்ளூர் மக்களுக்கும், குழந்தைகளுக்கும் சட்டையில் குத்திக் கொள்ள தேசியக் கொடி கொடுத்தபோது பலரும் வாங்கிக் கொண்டாலும், ஒருவராவது குத்திக் கொள்ளவில்லை என்பது புதிராக இருந்தது. அதற்குரிய சரியான காரணம் ஏதும் அவர்கள் சொல்லாததும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. சாக்லேட் மட்டும் வாங்கிச் சாப்பிட்டார்கள்!

● எங்கள் பயணத்தில் எந்த ஒரு இடத்திலும் வண்டியில் ஒரு பஞ்சர் கூட ஏற்படவில்லை. ○



தொகுப்பு :
கௌதம் ராம்

கய்ஷனர் ஆபீசுக்குச் சொல்லி ஏர் போர்ட் செல்லும்போதே ரேடியோவில் தகவல் கொடுத்து விட்டார்கள். சிங்கப்பூர் செல்லும் ப்ளைட்டை அவர்கள் வரும்வரை நிறுத்தி வைக்கும்படியாகவும் அது சாத் தியமில்லையெனில் சோனாலி கினி என்கிற பயணியை ஏர்போர்ட் பாதுகாப்பில் ஒப்படைக்கும்படியாகவும்.

புதிதாகத் துவங்கப்பட்ட பன்னாட்டு முனையத்தில் வசதிகள் குறைவாக இருந்தன. பயணிகள் உட்கார இருக்கைகள் போத வில்லை. பலபேர் நின்று கொண்டிருந் தார்கள். பாத்ரூம் சரியில்லை, காப்பி மெஷின் வேலை செய்யவில்லை, போன் வேலை செய்ய



வில்லை.

சோனாலி கண்ணாடி வழியாக வெளி யில் காத்திருந்த ஏர் பஸ் விமானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

முதலில் அவள் பெயரை அறிவித்ததை அவள் கவனிக்கவில்லை.

"மிஸ் சோனாலி கினி பாசஞ்சர் ட்ரா வலிங் டு சிங்கப்பூர் ஆன் இண்டியன் ஏர் லைன்ஸ் ப்ளைட் ப்ளீஸ் காண்டாக்ட் ட்ராஃபிக் கவுண்டர் ஃபார் என் அர்ஜெண்ட் மெஸேஜ்."

எனக்கு என்ன அர்ஜண்ட் மெஸேஜ் இருக்க முடியும்?

மெல்ல அவள் ஏர்லைன்ஸ் சிப்பந்தியை

சுஜாதா

அணுகியபோது அருகே ஒரு போலிஸ் அதி காரிணி நிற்பதைப் பார்த்து திடுக்கிட்டாள்.

"உங்க போர்டிங்கார்டு கொடுங்க."

"ஏன்?"

''திருப்பிக் கொடுத்துர்றோம் கொடுங்க'' என்று ஏறக்குறைய அவள் கையிலிருந்த அனு மதிச் சீட்டைப் பிடுங்கிக் கொண்டார் சிப்பந்தி.

''வாம்மா'' என்று காக்கி அணிந்த பெண்போலிஸ் அதிகாரி அழைத்தாள்.

"என்ன விஷயம் சொன்னிங்கன்னா..."

"உங்களை இருக்கச் சொல்லி மெஸேஜ் வந்திருக்கு. ப்ரபாகர்ராவ் கொடுத்திருக்கார்."

"எதுக்கு?"

"தெரியலையமா! எதுக்கும் உங்க பாஸ் போர்ட்டு கொடுங்க, எமிக்ரேஷன் கினி யரன்ஸ்ல ஏதாவது..."

''இதோ, எமிக்ரேஷன் கினியரன்ஸ் தேவையில்லைன்னு ரப்பர் ஸ்டாம்ப்கூட இருக்குது பாருங்க."



9

ஆர்யபட்டா

"அப்ப வேற ஏதாவது இருக்கும். ஏதோ கேசை விசாரிக்கறாங்கல்ல, அது சம்பந்தமா இருக்கலாம்."

"ஆனந்தா? அதான் எல்லாம் சொல்லியாச்சே."

"எனக்கு எதும் தெரியாதும்மா! என் கடமையை செய்யறேன்."

இதனிடையே 'திஸ் இஸ் த லாஸ்ட் அன் ஃபைனல் கால் டு ஆல் பாசஞ்சர்ஸ் டு சிங்கப்பூர்' என்ற அறிவிப்பு தொடர, அவள் பரபரப்பானாள்.

"பாருங்க, நாங்க ஒரு ட்ரூப்பா ஒரு குருப்பை அழைச்சுகிட்டுப் போறோம். எல்லா ஏற்பாடும் செய்து, அங்க டிக்கெட் வித்தாச்சு. கவர்மெண்ட் டு கவர்மெண்ட் இன்விட்டேஷன்."

"அதெல்லாம் அவர்கிட்ட சொல்லும்மா."

"என்னை மட்டும் விட்டுட்டு அந்தப் ப்ளேன் போச்சுன்னா போலீஸ் மேல கேஸ் போடுவேன்."

"போடுங்கம்மா" என்றாள் அவள் புன்னகையுடன்.

இதற்குள் ப்ரபாகர்ராவும் சங்கரும் நேராக எல்லா தடைகளையும் தாண்டி அவளருகே வந்தார்கள்.

"சோனாலி, உங்ககிட்ட என்ன சொன்னோம். எங்க அனுமதியில்லாம ஊரை விட்டுப் போகக் கூடாதுன்னுதானே?"

"எனக்கு பர்பாமன்ஸ் இருக்கு சார். சிங்கப்பூர் கவர்மெண்ட்ல கூப்ட்டிருக்காங்க."

"எங்ககிட்ட சொல்லவே இல்லையே."

"நீங்க கேக்கவே இல்லையே? ஆனந்தைப் பத்தித்தான் கேட்டீங்க."

"டோண்ட் பி கிளவர். என்ன அவசரம்? எதுக்காக இந்த அவசரப் பிரயாணம்?"

"சொன்னேனே ஒரு டான்ஸ் பர்பார்மன்ஸ்."

"சோனாலி நீங்க எதையாவது எங்ககிட்ட மறைக்கறீங்களான்னு தெரியணும்."

"நீங்க என்னைப் போக விடாம தடுக்கப் போறீங்களான்னு தெரியணும்."

"அடுத்த ப்ளைட் எப்ப?" என்று சிப்பந்தியைக் கேட்டார்.

"அது ராத்திரி மெட்ராஸ்ல பிடிக்கணும்."

ப்ரபாகர்ராவ் யோசித்தார்.

"சரி இப்ப எங்ககூட வாங்க."

டிராபிக் அதிகாரி "ஸார், அந்த பாசஞ்சரை செக்யூரிடிக்காக நிறுத்தப் போறீங்களா?"

"ஆமாம்."

"அப்ப உங்க பாகேஜ் சீட்டைக் கொடுங்கம்மா, உங்க லக்கேஜை எடுக்கணும்."

"பேஜாருப்பா போலீஸ்கூட!"

"எதுக்கு? நான் கொடுக்க மாட்டேன்" என்று பதறினாள் சோனாலி.

"இந்தக் கையெழுத்து உங்களுதா' என்று ஜெராக்ஸ் காகிதத்தைக் காட்டினார். சங்கர்... அவள் அலுவலகத்திலிருந்து பிரதியெடுத்தது.

"ஆமாம். அப்படித்தான் தெரியுது."

"அப்ப, நீங்க என்கூட வரணும்."

"எங்க?"

"பெங்களூர் ஆர்மரிக்கு."

"என் சிங்கப்பூர் பயணம் என்ன ஆவுது?"

''நீங்க சரியான விளக்கம் சொல்லலைன்னா உங்களைத் தடுக்க வேண்டி வரும். சொல்லிட்டா விட்டுருவோம். ஒரு ஜாமீன் பேரில எப்படியும் இந்த ப்ளைட்டில் போக முடியாது" சோனாலி அழ ஆரம்பித்தாள்.

அவளருகே இருந்த பெண்கள் கண்ணீருடன் "சோனாலி நீங்க வரலியா?"

"இவங்களுக்கு சிங்கப்பூர்ல யாரை காண்டாக்ட் பண்ணணும்னு விவரம் சொல்லிடுங்க. கூடிய விரைவில இவங்களை அனுப்பிச்சு வெக்கறோம்."

"இப்ப இந்தப் ப்ளைட்ல போறது முடியாத காரியம்" என்றார் சங்கர். சோனாலி கோபத்தில் வெடித்தாள்.

"என்ன சார்! என்ன ஆதாரத்தின் பேர்ல என்னை நீங்கத் தடுக்கலாம்? ஏதாவது வாரண்ட் வெச்சிருக்கிங்களா?"

"இப்படியெல்லாம் பேசினா உடனே உங்களை அரஸ்ட் பண்ணி கஸ்டடியில வெச்சுருவோம்."

"எதுக்கு? எதுக்கு?"

"ஆனந்தைக் கொன்னதுக்கு."

அவள் சிரித்தாள். ஆனால் அவள் கைகள் நடுங்குவதைக் கவனித்தார் ப்ரபாகர் ராவ்.

"அபத்தம்! போலீஸ் இத்தனை முட்டாள்தனமா இயங்கும்னு நான் நினைக்கலை" என்று அவள் சொன்னதைக் கேட்டு "ஹுக்" என்று துவங்கிய சங்கருக்கு கோபம் வந்ததை ப்ரபாகர் ராவ் சைகையால் அடக்கி, "யார் முட்டாள், யார் கெட்டிக்காரன்கிறதை அப்புறம் ஆராய்ச்சி செய்யலாம். நீங்க என்கூட வரிங்களா?"

எஸ்.ஐ.சிக்கே கௌடாவுக்கு நன்றி சொல்லிவிட்டு ப்ரபாகர்ராவ் அவளை அழைத்துக் கொண்டு ப்ரிகேடு ரோடு வந்தார்.

சோனாலி "உங்களுக்கு இதுக்கெல்லாம் உரிமை இருக்கான்னுகூட தெரியலை. எனக்கு லாயரைப் பார்க்கணும்."

"கம்முனு வாங்க" என்று சங்கர் அதட்டினார்.

பெங்களூர் ஆர்மரியில் தாத்தா அவளை கண்ணை இடுக்கிக் கொண்டுப் பார்த்தார். ''இந்தப் பொண்ணை எனக்கு ஞாபகம் இருக்குது. இவதாங்க என்கிட்டத் துப்பாக்கி வாங்கிட்டுப் போனது."

"அய்யோ! என்ன தாத்தா; இப்படி பொய் சொல்றே? அய்யோ என்ன சொல்றீங்க? என்னை மாட்டி விடறதுக்கு சதி!"

''இத்தனை வயசானவர் பொய் சொல்லணும்னு என்னம்மா அவசியம்?"

"தாத்தா சரியா சொல்லுங்க, நானா வந்து துப்பாக்கி வாங்கினேன், உங்ககிட்ட? - என்னை வெளிச்சத்தில் பார்த்து சொல்லுங்க.." என்று அவரருகில் சென்று முகத்துக்கு முகம் பார்த்துக் கேட்டாள்.

தாத்தா மீண்டும் அவளைப் பார்த்தபோது சற்று சந்தேகம் தென்பட்டது.

''உன் மாதிரித்தான் இருந்தது. பெண்ணுங்கள்ளாம் ஒரே மாதிரி இருக்காங்களா, எனக்கு இந்த வயசில..."

''தாத்தா நீங்க சொல்ற அடையாளத்தினால என்னைக் கொலைக்குற்றம் சாட்டி கைது பண்ணப் போறாங்க. சரியா சொல்லுங்க தாத்தா ப்ளீஸ்!"

"ஸாரி ஐம் நாட் ஷ்யூர்" என்றார் இப்போது.

"பாத்திங்களா?"

''உங்க கையெழுத்து அவர் ரிஜிஸ்தர்ல இருக்குதே?'

"காட்டுங்க."


காட்டியபோது அவள் தெளிவாகச் சொன்னாள்:

"இது என் கையெழுத்தே இல்லை; நான் 'ஜ'க்கு மேல புள்ளி வைக்கவே மாட்டேன். இது என் கையெழுத்தை யாரோ போர்ஜரி பண்ண முயற்சி."

"யாரு?"

''எனக்கென்ன தெரியும்? நீங்க கண்டு

பெற்ற தாயை வணங்கும்போது வயிற்றுக்கு நேராகக் கை கூப்பி வணங்க வேண்டும். தந்தையை, மார்புக்கு நேராய் கை கூப்பி வணங்க வேண்டும். குருநாதரை முகத்துக்கு நேராய் கை குவித்து வணங்க வேண்டும். இறைவனை மட்டும்தான் நம் இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி கை குவித்து வணங்க வேண்டும்.



(ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமியின் உரையில் கேட்டது.)

— பத்மா தேசிகன்

பிடிக்கணும்!"

ப்ரபாகர்ராவ் சங்கடத்துடன் பார்த்தார். "தாத்தா சரியாச் சொல்லுங்க, முதலில் அவ்வளவு ஷ்யூரா இருந்தீங்க."

"இல்லை! இப்ப ஐம் நாட் ஷ்யுர். எனக்கு வயசாயிருச்சு, என்னால ஒருத்தர் மேல தப்பா குற்றம் வர வேண்டாம்."

சங்கர் ஆயாசத்துடன், என்னங்க நீங்க என்றார்.

"நான் ஒரு லாயரைப் பார்த்தே ஆகணும்" என்றாள் சோனாலி.

"அப்ப நீங்க துப்பாக்கியைத் தொட்டதே இல்லை?"

"அது கருப்பா சிவப்பான்னுகூடத் தெரியாதுங்க!"

"அப்ப உங்க கைரேகை ஆனந்தை சுட்ட துப்பாக்கியில் இருக்காது."

"நிச்சயம் இருக்காது."

ப்ரபாகரராவ் சற்று யோசித்தார். அந்த இடைவெளியில் சோனாலி, "நான் புறப் படலாமா? என்மேல ஏதாவது குற்றச்சாட்டு இருக்குதா?"

"இல்லை" என்றார் சங்கர்.

"இப்போதைக்கு இல்லை" என்றார் ப்ரபாகர்ராவ்.

"என்னை ஜீப்ல கொண்டு விட்டுர் றீங்களா? ஏர்போர்ட்டில விட்டுட்டிங்கன்னா சாயங்காலம் சென்னை ப்ளைட்டை பிடிச்சு ராத்திரி சிங்கப்பூர், ஏர் இண்டியாவில போயிர்றேன். பங்களூர்லருந்து சுகமா, ப்ளேன் மாத்தாம போகலாம்னு நினைச்ச எனக்கு எல்லாம் நாசம்."

"உங்களுக்கு நேர்ந்த சங்கடத்துக்கு வருத்தம்" என்றார் ப்ரபாகர்ராவ்.

"உங்களால என்ன பெரிய குழப்பம்! தாத்தா, தாங்ஸ்! என் உயிரை காப்பாத்தினீங்க, உண்மை சொல்லி!"

"உம் பேர் என்னம்மா?"

"சோனாலி கினி, தாத்தா."

"சோனாலி! அதே பேர்தானே!"

"மறுபடி ஆரம்பிக்காதீங்க தாத்தா!"

அவள் போனதும் சங்கர் அலுத்துக் கொண்டார்: "என்ன வேஸ்ட், எல்லா முயற்சியும்!"

"கொலைக் குற்றத்தில இப்படித்தாம்பா. அந்த ஆஸ்டல் மாணவன் கேஸ் எத்தனை அலை அலைஞ்சோம்?"

"இப்ப என்ன? யார் மேல சந்தேகம் திரும்புது?"

"மீண்டும் ப்ரொபசர்தான். எப்படி இந்தப் பொண்ணு பெயரைப் பயன்படுத்திக் கிட்டு, கையெழுத்தைப் போட்டு மற்றொரு பெண்ணை அனுப்பிச்சு துப்பாக்கி வாங்கி... ஒண்ணு செய்யி சங்கர்... சோனாலியுடைய கையெழுத்து அவங்க ஆபீஸ்ல கிடைச் சுதில்லை..."

"ஆம். அதைத்தான் ஏர்போர்ட்ல அவகிட்டக் காட்டினேன்."

"கையெழுத்து அலசற எக்ஸ்பர்ட்கிட்டக் கொடுத்து அந்தக் கையெழுத்தும் தாத்தா வினுடைய ரிஜிஸ்தர் கையெழுத்தும் ஒண்ணு தானான்னு சைன்டிபிக்கா ஒப்பிட்டுருங்க. அதுக்கப்பறம் பொண்ணை நம் லிஸ்ட்லருந்து நீக்கிடலாம்!"

அதன்படி சிஐடியில் கன்சல்ட்டன்டான சம்பத் என்கிற கையெழுத்து நிபுணரிடம் காட்டி ரிப்போர்ட் கேட்டிருந்தார்கள்.

அந்த ரிப்போர்ட் இரண்டு தினங்களில் ப்ரபாகர்ராவின் மேசைக்கு வந்தது. அதைப் பார்த்த உடனே போன் செய்தார்.

"சம்பத், உங்க ரிப்போர்ட் பார்த்தேன். ஆர் யு ஷ்யுர்?"

"கையெழுத்து ரெண்டும் ஒரே நபருடையதுதான்" என்று சத்தியம் செய்தார் சம்பத். என் இருபத்தைந்து வருஷ அனுபவம் உத்தரவாதம் என்றார்.

"தாத்தா சற்று குழப்பி விட்டாலும் முதலில் உண்மைதான் சொல்லியிருக்கிறார். சோனாலிதான் துப்பாக்கி வாங்கியிருக்கிறாள். சே! பட்சி பறந்துருச்சா!" என்றார் ப்ரபாகர்ராவ்.

(தொடரும்)



"என்னை நீங்க உயிருக்கு உயிரா காதலிக்கிறது நிஜம்னா கல்யாணத்துக்கு வரதட்சணை கேட்கக் கூடாது..."

"எந்த பொண்ணு வீட்லேயோ கொடுக்கப் போறாங்க. உனக்கு ஏன் கஷ்டமா இருக்கு, கவிதா?"

— எஸ்.எஸ். பூங்கதிர்



திருடர்கள் ஜாக்கிரதை!

குடும்பத்தோடு வெளியூர் செல்கிறீர்கள். உல்லாச உலா என்று வைத்துக் கொள்ளுங்கள். மனத்தின் ஓரத்தில் "எவனாவது திருடன் வீட்டுக்குள்ளே புகுந்து பொருளை எல்லாம் சுருட்டிக் கொண்டு போய்விட்டால்?" என்ற திக் திக் எண்ணம் தோன்றலாம். இந்த ஆலோசனைகளைப் பின்பற்றிப் பாருங்களேன்.

● வீட்டு வாசற்படியில் பிரிக்கப்படாத செய்தித்தாள்கள் இருந்தால் அதுவே திருடர்களுக்கு ஒரு க்ளூதான் - வீட்டில் யாரும் இல்லை என்பதற்கு. வெளியூர் செல்வதற்கு முன் "திரும்பிவரும் நாள்வரை நியூஸ் பேப்பரைப் போட வேண்டாம்" என்பதை கடைக்காரரிடம் மறக்காமல் சொல்லி விடுங்கள்.

● தோட்டத்தில் ஏணி இருந்தால் அதை அப்புறப்படுத்தி விடுங்கள். அதே போல் தோட்ட வேலைக்கான கருவிகள் போன்றவற்றையும் உள்ளே பாதுகாப்பாக வைத்து விடுங்கள். திருடர்களை இவற்றையெல்லாம் பயன்படுத்த வைத்து நம் விரலைக் கொண்டே நம் கண்ணைக் குத்திக் கொள்வானேன்?

● வீட்டு கேட் திறக்கும் போதெல்லாம் நாராசமான சப்தத்தை எழுப்புகிறதென்றால் அதற்கு எண்ணெய், கிரீஸ் போட்டு சமாதானப்படுத்த வேண்டாம். திருடர்கள் நுழையும்போது இந்த சப்தமே அவர்களைக் காட்டிக் கொடுக்கக் கூடும்.

● ஜன்னல்கள் விஷயத்திலும் கவனம் தேவை. கதவுகளைப் பூட்டி ஒன்றுக்கு நாலு முறை அதை இழுத்துப் பார்ப்பவர்கள் கூட, ஜன்னல்களை உட்புறம் தாளிடுவதற்கு ஏனோ மறந்து விடுகிறார்கள்.

● வீட்டில் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருக்கட்டும். ஆனால் அது வராண்டாவில் உள்ள ஜீரோ வாட் பல்பாக இருக்க வேண்டாம். ஜன்னல்கள் திரையால் மூடப்பட்ட ஓர் அறை அல்லது கூடத்திற்குள் அந்த மின் விளக்கு எரியட்டும்.

● Burglar Alarm போன்ற எச்சரிக்கை செய்யும் கருவிகளைப் பொருத்தி வைப்பது நல்லது.

● அக்கம் பக்கத்தில் உள்ள ஓரிரு குடும்பங்களிலாவது நீங்கள் ஊருக்குப் போகும் விஷயத்தைத் தெரிவியுங்கள். அப்போதுதான் உங்கள் வீட்டுக்குள் ஏதாவது நடமாட்டம் என்றால் அவர்களுக்கு சந்தேகம் வந்து நடவடிக்கை எடுப்பார்கள்.

● வீட்டில் உள்ள நகைகளை வங்கி லாக்கரில் வைக்கத் தவற வேண்டாம். பீரோக்களின் சாவிகளை (பீரோவின் மேலேயே அல்லது கூடத்தில் தொங்கவிடப்பட்டுள்ள அலங்கார கீ ஸ்டாண்ட் போன்ற) சுலபமாக யூகிக்கக் கூடிய இடங்களில் வைக்காமல் வேறு இடங்களில் வைத்துவிட்டு ஊரிலிருந்து வந்ததும் அவற்றை எங்கே வைத்தோம் என்று மறதியில் நீங்களே முழி பிதுங்க வேண்டாம். வைத்த இடங்களை ஒரு தாளில் எழுதி பர்ஸில் எடுத்துச் செல்லவும்.

● "வீடு சில நாள் பூட்டியிருக்கும். கொஞ்சம் கண்காணிப்புத் தேவை" என்று உங்கள் பகுதியில் உள்ள காவல் நிலையத்தில் சொல்லிவைத்தால், அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். (நல்லபடியான அர்த்தத்தில் தான்).

● நீண்ட நாள் பயணம் என்றால், கிளம்புவதற்குக் கொஞ்ச நாட்களுக்கு முன் வீடு மற்றும் அதில் உள்ள பொருள்களை இன்ஷ்யூர் செய்யலாம். பொருள்கள் தொலைந்தாலும் நஷ்ட ஈடாவது கிடைக்கும்.

— ஜி.எஸ்.எஸ்.

பத்துக் கட்டளைகள்





1998 செப்டெம்பர் 27
வெகுதான்ய புரட்டாசி 11
மலர் : 57
இதழ் : 9

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

2001 இல் காமராஜ் ஆட்சி?

நவசக்தி என்று திரு.வி.க நடத்தி வந்த பத்திரிகை, சுதந்தரப் போராட்டக் காலத்தில் ஆதிக்கம் செலுத்தியது. தொழிலாளர் நலன், சமுதாய மேம்பாடு, சீர்திருத்தங்கள் எனப் பல உயர்ந்த விஷயங்களுக்கு அந்த ஏடு பாடுபட்டது. இன்றைக்கும், ஒலி நயத்தால் மட்டுமின்றி அதன் உயர்நோக்குகள் நினைவு வருவதாலும் மனக் கிளர்ச்சியை ஏற்படுத்தவல்ல சொல் 'நவசக்தி'.

தற்போது தமிழ் மாநில காங்கிரஸின் கட்சிப் பத்திரிகையாகப் புதுப் பிறவி எடுத்திருக்கிறது 'நவசக்தி'.

த.மா.காவுக்கும் அதன் தொண்டர்களுக்கும் இந்த நேரத்தில் வாழ்த்துகளைக் கூறுவோம்.


திரு.வி.கவின் நவசக்தி வெற்றியடைந்ததற்குக் காரணம், அது மக்கள் பத்திரிகையாகவே என்றும் விளங்கியது என்பதுதான்.

இன்றைய நவசக்தி இதழும் தலைவர்களின் பத்திரிகையாக அன்றி தொண்டர்களின் பத்திரிகையாக மலர்ந்து வெளி வந்தால் இரட்டிப்பு வெற்றி கிடைக்கும்.

முதல் வெற்றி - பத்திரிகைக்கு

இரண்டாவது வெற்றி - கட்சிக்கு!

ஒரு கட்சியின் பலமே அதன் தொண்டர் படைதான். அத்தொண்டர்களின் கருத்துப் பரிமாற்றத்துக்கும் எண்ணச் சிதறல்களுக்கும் நல்லதொரு வாகனமாக ஒரு கட்சிப் பத்திரிகை



அமையலாம். அடிமட்டத் தொண்டர்களின் எழுத்துக்கள் அச்சில் வரும்போது அவை அழுத்தமான வாக்குமூலமாக நிரந்தரம் பெறுகின்றன. தொண்டர்களின் பெருமிதத்தோடு பொறுப்புணர்வும் வளர்கிறது. இதனால் கட்சி பலப்படவும் விரிவடையவும் வாய்ப்புகள் பெருகுகின்றன.

இவ்வாறு கவனமாக வளர்ந்து, பலப்படுத்தி, படிப்படியாக முன்னேற்ற வேண்டிய இளம்பயிர் த.மா.கா.

ஆனால், அதன் தலைவர்கள் அதற்கு நிர்ணயித்துள்ள இலக்கு குருவித் தலைப் பனங்காயைப் போல் கனக்கிறது.

'தமிழ்நாட்டில், 2001ஆம் ஆண்டில் காமராஜர் ஆட்சி நிறுவுவோம்' என்பதே அந்த இலக்கு!


எந்தத் துறையானாலும் சரி, இலக்கு நிர்ணயித்து அதே நோக்கிப் பயணப்படுவது மிக அவசியம்தான். ஆனால், அதே சமயத்தில் அந்த இலக்கு மிகுந்த சிரமப்பட்டேனும் அடையக்கூடிய எல்லையாக இருக்க வேண்டும். நடைமுறையில் சாத்தியமில்லாத இலக்கை நிர்ணயித்துவிட்டு, அதற்காக இரவும் பகலும் உழைப்பதும்; சக்தியையும் பொருளையும் சளைக்காமல் செலவிடுவதும் பயனற்ற முயற்சிகளாக முடிவதோடு சோர்வை விலை கொடுத்து வாங்கும் நடவடிக்கையாகவும் அமையும்.

த.மா.காவின் '2001 இல் காமராஜர் ஆட்சி' என்கிற அவசரக் கனவு அத்தகைய ஓர் இலக்குதான்!

'96ல் அடைந்த முதல் வெற்றியின் மயக்கத்திலிருந்து மீண்டு வந்து நிலைமையைச் சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது.

ஆறு மாதங்களுக்கு முன் நடந்த பொதுத் தேர்தலில் த.மா.கா - தி.மு.க கூட்டணி அடைந்த அதிர்ச்சிகரமான பின்னடைவுக்குக் காரணம் என்ன...?

கோவை சம்பவங்கள் ஏற்படுத்திய ஆளுங்கட்சிக்கெதிரான உணர்வு ஓரளவு காரணம். அ.தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.கவும் பா.ம.கவும் இடம் பிடித்து வாக்குகளைப் பிரித்து விட்டது முக்கியமான காரணம்.



2001 இல் தேர்தல் நடக்கும்போது த.மா.கா தனித்து நின்று மும்முனைப் போட்டிக்கு வழி வகுக்குமானால் வாக்குகள் சிதறிப் போய் அ.தி.மு.க. அணியே பலம் பெறும். இதனால் தி.மு.க - த.மா.கா.வுக்கும் நல்லதல்ல; தமிழகத்துக்கும் நல்லதல்ல; ஏன்... நாட்டுக்கே கூட நல்லதல்ல!

தேசிய கட்சி கலாசாரத்தில் வந்த த.மா.கா தலைவர்கள் இது குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும்.

அண்ணா பிறந்தநாளையொட்டி திருச்சியில் ஜெயலலிதாவுக்காகக் கூடிய கூட்டமும் சென்னையில் வை.கோ.வுக்காகக் கூடிய கூட்டமும் அவசரப்படும் த.மா.காவுக்கு எச்சரிக்கை சமிக்ஞையாக அமையட்டும்.

'தி.மு.க.வுடனான உறவைத் துண்டித்துக் கொள்ளத் தயார்' என்கிற ரீதியில் சில மூத்த த.மா.கா தலைவர்கள் பேசுவது நல்லதற்கல்ல. 2001 ஆம் ஆண்டில் ஆட்சியைப் பிடிப்பதற்கான பலம் தங்கள் கட்சிக்கு உள்ளதா என்பதை அவர்கள் விருப்பு வெறுப்பின்றி ஆராய்வார்களேயானால் அவசரப்படமாட்டார்கள்.

தேர்தலில் வெற்றி பெற உதவிவிட்டு சட்டசபையில் எதிர்க் கட்சியிடத்தில் அமர்வதற்கு நிறைய நெஞ்சுரம் வேண்டும்.

அந்த நெஞ்சுரத்துடன் அரசியல் பாதையில் அடியெடுத்து வைத்த த.மா.கா அதே பலத்துடன் தொடர உறுதி கொள்ளட்டும். தேர்தலில் அதிக இடங்கள், ஆட்சியில் பங்கேற்பு என்று வாதாடிப் பெறலாம். படிப்படியாக முன்னேறி தனியாட்சி என்கிற இலக்கை உரிய காலத்தில் உரிய முயற்சியுடன் அடையலாம்.

தமிழகத் தேர்தல், அதர்மத்தை எதிர்க்கும் யுத்தம். அதில் ஜெயிக்க துணிவு மட்டும் இருந்தால் போதாது; சரியான வியூகமும் வேண்டும்.

நச்சுப் பாம்பை அடிக்க தி.மு.க என்னும் தடியின் துணையை ஏற்பதில் தவறில்லை. பாம்பின் கழுத்தைப் பிடிக்க முயற்சி செய்வது வீரமாக இருக்கலாம்; ஆனால் விவேகம் ஆகாது!

பெயர், ஊர், குலம், கோத்திரம் என எல்லாவற்றையும் கேட்டுக் குறித்துக் கொண்டு, "பேஜர், செல்போன் இருந்தால் இங்கேயே வைத்து விடுங்கள். கைப்பை, பாலிதின் பை என்று எந்த மாதிரியான பையாக இருந்தாலும் உள்ளே கொண்டு போகாதீர்கள்" என்றார் ஒரு செக்யூரிடி ஆபீசர். அரை மணி நேரத்தில் ஒரு கடை போடலாம் போல பேஜர்கள், செல் போன்கள் குவிந்தன ஒரு பெண் போலீசிடம்.

உச்சந்தலை முதல், உள்ளங் கால்வரை விரல்களை ஒட்டி ஒரு குவிக் ஸர்ச். பெண் பத்திரிகையாளர்களுக்குப் பெண் போலீஸ். டேப் ரெக்கார்டர் இருந்தால், அதை ஆன் பண்ணிப் பார்த்து குறைந்த பட்சம் மூன்று இடங்களில் பரிசோதித்தனர். மெட்டல் டிடெக்டர் நுழைவாயில். மறுபடி சில கேள்விகள், பரிசோதனை என்று முடிந்து, உள்ளே போனால், அன்ன பூர்ணா ஹால் நிரம்பி வழிந்தது. பிரதமர் வாஜ்பாயியின் முதல் சென்னை பிரஸ் மீட் என்பதால், ஏகக் கூட்டம். நாற்காலிகள் போதாமல், மூன்று புறமும் கிடைத்த இடத்தில் எல்லாம் பத்திரிகையாளர்கள்.

சுமார் ஒன்னரை அடி உயர மேடையில் ஒற்றை ஆசனம். எதிரிலிருந்த டீபாயில் ஒரு டஜன் மைக்குகள். ஓர் அதிகாரி, மேடையில் ஏற அமைக்கப்பட்டிருந்த படிகளை அழுத்திப் பார்த்துவிட்டுத் திருப்தியுடன் சென்றார்.

சிறிது நேரத்தில், வெடிகுண்டு ஸ்குவாடு, நாய் மற்றும் இதர உபகரணங்கள் சகிதம் வந்தது. இஞ்ச் பை இஞ்ச் ஆக, மேடையின் மேலே, கீழே, சைடில் என்று துப்புறவாய்ச் சோதனை நடத்தினார்கள். கூட வந்த நாய், பூந்தொட்டிகள் உள்பட அனைத்தையும் மோந்து பார்த்த படியே நகர்ந்தது. பிரதமர் அமரவிருந்த நாற்காலியை அழுத்திப் பார்த்து விட்டு, தலை கீழாய்த் திருப்பிப்போட, டார்ச் போன்ற உபகரணம், நாற்காலியைத் தடவிப் பார்த்தது. அவர்கள் ஸ்பாட்டை ஓ.கே. செய்துவிட்டு, இடத்தைக் காலி பண்ண, ஓர் அதிகாரி வாக்கி-டாக்கியில், மொத்தம் நூற்றி ஆறு பேர், பதினாலு வீடியோ கேமராக்கள், இருபத்தி இரண்டு புகைப்

ஏ.எம்.மீன்

படக் கேமராக்கள் என்று புள்ளி விவரம் ஒப்பித்தார் தமது மேலிடத்துக்கு.

தொடர்ந்து பிரதமரின் பத்திரிகைத் தொடர்புச் செயலாளர், வந்து பார்த்து விட்டுச் சென்றார். "இன்னும் சிறிது நேரத்தில் பிரதமர் வருவார்" என்று அறிவிக்கப்பட்டது. "சிறிது நேரம் என்றால்?" என்று ஒரு பெண் பத்திரிகையாளர் கேட்க, அந்த அதிகாரி 'இதெல்லாம் என்ன கேள்வி? பிரதமர் தங்கியுள்ள அறையிலிருந்து இங்கே வந்து சேர எனக்கு இரண்டு நிமிடம் ஆயிற்று. அவர் எத்தனை வேகமாய் நடப்பார் என்று யாருக்குத் தெரியும்?' என்று சன்னக் குரலில் கோபமாய்



• தீவிரப் பரிசோதனை



பதில் சொன்னது பக்கத்திலிருந்த ஒருவருக்கே கேட்டது.

ஒரு ராஜ் பவன் ஊழியர், பிரதமர் வரும் வழியில் போடப்பட்டிருந்த கார்ப் பெட்கள் சுருக்கம் இன்றி சரியாக இருக்கின்றதா என்று செக் பண்ணினார்.

"தண்ணீர் வைக்கப்படவில்லையா? என்று கேட்ட இரண்டாவது விநாடி ஒரு மினரல் வாட்டர் பாட்டிலும் கண்ணாடி கிளாஸும் வந்தன. இரண்டையும் எடுத்து ஆழமாய்ப் பார்த்து கண்ணாலேயே பரிசோதித்தார் அந்த செக்யூரிடி அதிகாரி.

குறிப்பிட்ட நேரத்துக்கு (எட்டரைமணி) அரை மணி நேரம் தாமதமாய்

ஏ.எம்!

(அதாவது பிரைம் மினிஸ்டரின் பிரஸ் மீட்)

பிரதமர் வந்து ஆசனத்தில் அமர, விடியோ கேமராக்கள் பளிரிட்டன.

"குட்மார்னிங்" என்ற பிரதமர், அதற்கு எதிர்பார்த்த ரெஸ்பான்ஸ் பத்திரிகையாளர்களிடமிருந்து வரவில்லை என்றதும் மறுபடி "வெரி குட் மார்னிங்" என்றதும் ஹாலில் சிரிப்பு அலை.

"ஒவ்வொருவராய்க் கேள்வி கேளுங்கள்!" என்று பிரஸ் செகரெட்டரி சொல்ல, கேள்விக் கணைகள் புறப்படத் தொடங்கின. முதல் கேள்வி: "இரவு நன்றாகத் தூங்கினீர்களா?"

ம.தி.மு.க.வின் சீரணி அரங்க மீட்டிங் கிலிருந்து வாஜ்பாய், ராஜ்பவன் திரும்பிய போது இரவு மணி ரெண்டு என்பது ஒரு புறமிருக்க, இருக்கிற பல்வேறு சூழ்நிலைகளால் அவரால் நிம்மதியாகத் தூங்க முடிகிறதா என்கிற மறைமுகக் கேள்வியும் அடக்கம்!

"ம்.. நீங்கள் எல்லாம் நன்கு தூங்கினீர்களா?" என்று பதில் கேள்வி பிரதமரிடமிருந்து.

அப்புறம் ஆளாளுக்கு ஏகப்பட்ட கேள்விகள் கேட்டார்கள். (அவற்றை எல்லாம் பேப்பரில் படித்து, மறந்துகூடப் போயிருப்பீர்கள்) எதிர்பார்த்தபடியே ஜெயலலிதா, காவேரிப் பிரச்னை, பொருளாதாரத் தடை, விலைவாசி உயர்வு என்று எல்லாவற்றையும் பற்றிய கேள்விகள்.

பிரதமர் டயர்டான மூடில் இருந்தாலும் வெற்றிகரமாகப் பேரணியை முடித்துவிட்ட சந்தோஷம் காரணமாக ரொம்ப ரொம்ப ஃப்ரெஷ்ஷாக இருந்தார் வைகோ. பிரதமர் அமர்ந்திருந்த மேடைக்குப் பின்னால் (போட்டோகிராபர்களின் லென்ஸுக்குத் தெரியாமல்) அமர்ந்து கொண்டு உற்சாகத்தோடு கவனித்துக் கொண்டிருந்தார். பத்திரிகையாளர்கள் பிரதமரைக் கேள்வி கேட்கும் போதெல்லாம், அந்தப் பத்திரிகையாளர் யார் என்பதை அவ்வப்போது லேசாக எழுந்து எழுந்து கூர்மையாகக் கவனித்துக் கொண்டும் இருந்தார்.

"பிரதமரானபின் முதல் முறையாய் சென்னை வந்திருக்கிறீர்கள். ஒரு கவிதை சொல்லுங்களேன்" என்றுகேட்டபோது, பிரதமருக்கு கவிதை சொல்லும் மூடு இல்லைபோலும். அடுத்தக் கேள்விக்குப் போய்விட்டார்.


எல்லாக் கேள்விகளையும் சாமர்த்தியமாய் சமாளித்தாலும், ஒரு கேள்விக்கு அவர் சொன்ன பதிலைக் கேட்கப் பரிதாபமாய் இருந்தது:

"நீங்கள் ஐந்தாண்டு காலம் முழுமையாகப் பிரதமராக இருப்பீர்களா?"

"எனக்குத் தெரியாது!" ○

— எஸ். சந்திரமௌலி

அட்டை வண்ணப்படம், படங்கள்: ஸ்ரீஹரி



• விமான நிலையத்தில் பிரதமர், கவர்னர், மு.க., வைகோ

ம.தி.மு.க. மாநாடு:

'வெயிட்'டான பரிசு!

திருச்சியில் அ.தி.மு.க., நெல்லையில் தி.மு.க., சென்னையில் ம.தி.மு.க. மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் என்று கட்சிகளெல்லாம் 'மாநாடு வாரம்' கொண்டாடி விட்டன. ஒரு 'ஸ்பெஷல்' போட வேண்டிய சமாசாரத்தை இங்கே சுருக்கித் தருகிறோம்:

பிரதமர், உள்துறை அமைச்சர், பாதுகாப்புத்துறை அமைச்சர், இரண்டு மாநில முதலமைச்சர்கள் மற்றும் வெவ்வேறு கட்சிகளின் தலைவர்களையும் பங்கேற்கச் செய்த பெருமை ம.தி.மு.க. மாநாட்டுக்கு உண்டு. கூட்டணிக் கட்சிகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிற அ.தி.மு.க. இதில் கலந்து கொள்ளாதது தொண்டர்கள் மத்தியில் சலிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. என்றாலும், நீண்ட நாட்களாக (ஐந்து ஆண்டுகள்) எதிரும் புதிருமாய் இருந்த முதல்வர் கருணாநிதியும், வைகோவும் பிரதமர் முன்னிலையில் சந்தித்து, கைகுலுக்கிக் கொண்டு சிரித்துப் பேசியது, கண்மணிகளுக்கு வியப்பையும் ரத்தத்தின் ரத்தங்களுக்குக் கொதிப்பையும் உண்டாக்கியிருக்கிறது.

• கட்சிக் கொடிகள், கரை வேட்டிகள், கட்சியின் சின்னத்துடன் கூடிய பேட்ஜுகள், கை அட்டைத் தட்டிகள், எல்லாம் இருந்தாலும் ம.தி.மு.க. பேரணியில் முக்கியமான ஒன்று மிஸ்ஸிங். அது உற்சாகம். வரிசை ஒழுங்கில்லாமல், கோஷங்கள் இல்லாமல் அவர்கள்பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். தலைவர்கள் பேரணியைப் பார்வையிடுகிற இடத்தில் மட்டும் கோஷம் காதைப் பிளந்தது.

• சுவாரஸ்யமில்லாத பேரணிக்குத் தெம்பு கொடுப்பதற்காகவே வழியில் ஒயின் ஷாப்புகள் திறந்து வைத்திருந்தார்கள் போலும். டாக்டர் நடேசன் சாலையில், ஒரு தொண்டர் கதியேற்றிக் கொண்டு, எதிரே சுவரில் ஒட்டி வைத்திருந்த மேயர் ஸ்டாலின் படத்தைக் கிழித்து எறிந்தார். அவர் அடுத்தக் கட்டத்திற்குத் தயாராவதற்குள் தொண்டர்கள் அவரைச் சமாதானப்படுத்தித் தள்ளிக் கொண்டு போனார்கள்.

• அண்ணா, பெரியார் இருவரின் பிறந்த நாளைக் கொண்டாடும் பேரணி என்பதால் இருவரின் படங்களையும் கட்சித் தொண்டர்கள் கையில் பிடித்துக் கொண்டு போனார்கள். அந்தப் படங்கள் பெரும்பாலும் தொண்டர்களுக்கு விசிறியாகவும், குச்சியில் தட்டி ஓசை எழுப்புவதற்கும் பயன்பட்டதுதான் பரிதாபம்.

• மெரீனா கடற்கரையில் பொதுக் கூட்டம். மேடையை, கோட்டை மாதிரி வடிவமைத்திருந்தார்கள். மேடைக்கு நடுவில் அண்ணாவின் உருவச்சிலை. ஆங்காங்கே பம்

பரம் சுற்றுகிற மாதிரி செட்டப். பெரியார், அண்ணா, வாஜ்பாய் கட்டவுட்டுகள், கோவில், மசூதி, குருத்வாரா, சபிள்டவர் (எதற்கு?) சீரியல் லைட்டுகள் என ஒரே அலங்கார அமர்க்களம்.

● கூட்டம் துவங்குவதற்கு முன்னால் நெல்லை அபுபக்கர் கலைக்குழுவும், பல்லவி இசைக்குழுவும் கட்சியின் கொள்கைப் பாடல் களைப் பாடினார்கள். ''இதாண்டா! இதாண்டா! பேரணின்னா இதாண்டா'', ''தோழர்களே! தோழர்களே!'' (முஸ்தபா... முஸ்தபா... மெட்டு) போன்ற பாடல்களைப் பாடினாலும், ''தலைவனே... அன்போட... தம்பி... நான்.. எழுதும்... லெட்டர்.. இல்ல கடுதாசி.. கடிதமே இருக்கட்டும்'' என்ற பாட்டுதான் ஹிட்.

• மேடையில் தலைவர்கள்



● இரவு ஒன்பது மணிக்கெல்லாம் மற்ற தலைவர்கள் மேடைக்கு வந்துவிட, பிரதமர் மேடைக்கு வரும்போது மணி ஒன்பது முப்பத் தைந்து. தலைவர்களுக்கு 'வெயிட்'டான நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. (ஒவ்வொரு பரிசையும் நான்கு பேர் தூக்கி வர வேண்டியிருந்தது).

● 'கூட்டணி நீடிக்கும்', 'வெற்றி நமதே' என்று தெரிவிக்கும் வண்ணம், மேடையில் தலைவர்கள் அனைவரும் கைகளைக் கோத்த படி உயர்த்திப் பிடிக்க, வாழப்பாடி ராமமூர்த்தி மட்டும் வெறுமனே நின்றார். (அம்மா பயம்?) பக்கத்திலிருந்த ஜார்ஜ் பெர்ணான்டஸ் கையை நீட்ட, வாழப்பாடி சைடிலிருந்து அதற்கும் மௌனம்!

● ''தேர்தலுக்குப் பின் சிறு சிறு சலசலப்புகள் கூட்டணிக் கட்சிகளில் இருந்தாலும், மத்தியில் பி.ஜே.பி. ஒன்றுதான் நிலையான ஆட்சியைத் தர முடியும். அதிமுக கூட்டணிதான் மாநிலத்தில், எதிர்காலத்தில் வெல்லுகிற கட்சியாக இருக்கும்; நமது கூட்டணி தொடர வேண்டும்'' என்று பேசினார் வாழப்பாடி.

''காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரிந்து போகாமல் காப்பாற்ற வேண்டும்'' என்று பரூக் அப்துல்லா பேச, மொழி பெயர்த்த அப்துல் காதர் 'காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரிக்க ஆதரவு தர வேண்டும்' என்று மொழி பெயர்த்தார்! பிறகு இதை 'சின்னத் தவறு' என்று அறிவித்தது மற்றொரு கூத்து!

● நிகழ்ச்சியின் ஹைலைட், வாஜ்பாயியின் பேச்சு. 'மரபுப்படி' குழந்தைத் தமிழில் சகோதர சகோதரிகளை விளித்து விட்டு, கொஞ்சம் அண்ணாவை நினைவு கூர்ந்து விட்டு, ''விரைவில் தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாகும். அதை ஆராய ஒரு குழு அமைக்கப்படும்'' என்று தினசரிகளுக்கு எட்டுக்கால தலைப்பு ஒன்று தந்தார். (யாரும் உபயோகிக்காதது துரதிர்ஷ்டம்!)

— கே. பாலசுப்ரமணியன்

படங்கள் : சௌந்தர்ராஜன்

• பேரணி



• உற்சாகக் கூட்டம்



திருச்சி முழுக்க பயங்கர டிராஃபிக் ஜாம்! பொதுமக்கள் திட்டி முடித்துச் சோர்ந்தபோது, கிட்டத்தட்ட இருநூறு கார்கள் பின்தொடர நகரத்திற்குள் பிரவேசித்த ஜெயலலிதா, தாம் தங்கவிருந்த 'பெமினா' ஓட்டலின் முன் வந்த போது, இரவு ஏழு நாற்பத்தைந்து. அவரை வர வேற்க ஆரத்தித் தட்டோடு காத்திருந்த மகளிர் அணியை அவ்வளவாகக் கண்டு கொள்ளா மல் உள்ளே நுழைந்தது அம்மாவின் வண்டி.

"அம்மா முகத்தைக்கூட சரியா பாக்கலையே" என்ற புலம்பல்கள் மகளிர் அணியில் கிளம்ப, மகளிர் அணித் தலைவி ஒருவர், "கவலைப்படாதீங்க, அம்மா நம்ப அம்மா, இன்னும் பத்தே நாள்ல அப்பாயின்ட்மெண்ட் வாங்கறேன்! ரெண்டு பஸ்ல தோட்டத்துக்குப் போய் தனித்தனியா போட்டோ எடுத்துட்டு வரலாம்" என்று சமாதானப்படுத்தினார்.

அண்ணா பிறந்த நாள் விழாவுடன், ராணுவ ஆட்சேர்ப்பும் சேர்ந்து விட, திருச்சி நகர், புறநகர் லாட்ஜுகள் எல்லாம் ஹவுஸ் ஃபுல்! அறை கிடைக்காமல் தவித்த தொண்டர்களில் சிலர் ஒயின் ஷாப் தேடிப் போக மற்றவர்கள் படுக்க ப்ளாட்பாரத்தை நாடினார்கள்.

மறுநாள் காலை (செப்.15) சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்கு, பத்து மணிக்கே ஜெயலலிதா மாலையிடுவார் என்று கூறப் பட்டிருந்ததால் அரை மணி நேரம் முன் பத்திரிகையாளர்கள் உட்பட அனைவரும் தயாராக இருந்தார்கள்.

ஆனால் பத்தரை மணிக்குத்தான் வந்தார், ஜெ.

அண்ணா சிலைக்கு மாலையிடுவதில் சிக்கல். தி.மு.கவினர் முன் கூட்டியே அனுமதி பெற்று அண்ணாவைச் சுற்றி 'டெகரேட்' செய் திருந்தார்கள். அண்ணாவின் இரு பக்கமும் உதயசூரியனும் பின்ன வைக்கப்பட்டிருந்தது.

• வைகோ மாநாட்டு பேனர் அ.தி.மு.க.வினரால் கிழிக்கப்பட்டிருந்த காட்சி.



இரண்டு நாள் முன்பிருந்தே அவற்றைத் தூக்கு மாறு கோபத்துடன் வாதாடிய சேடப்பட்டி முத்தையாவின் கோபம் செல்லுபடியாக வில்லை. அம்மா வருவதற்குப் பதினைந்து நிமிடம் முன்புதான் உதயசூரியன்களைத் துணி(!) போட்டு மறைத்தார்கள்.

அண்ணாவை மாலைகளாகப் போட்டு மறைத்தபின் ஜெயின் வண்டி திருச்சி மத்திய சிறைச்சாலை நோக்கித் திரும்பியது. பி.ஜே.பி. பிரமுகர் ஒருவரின் கொலை வழக்கில் சம் பந்தப்பட்டு சிறையில் இருக்கும் குடவாசல் ராஜேந்திரனைப் பார்த்து ஆறுதல் சொன்ன ஜெயலலிதா, நேராக ஓட்டலுக்குப் போய் ஓய்வெடுத்தார்.

மாலை ஆறு மணிக்குத்தான் கூட்டம் என் றாலும் ரயில்வே கல்லுக்குழி மைதானம் நான்கு மணிக்கே நிரம்பத் துவங்கியது. வில்லுப்பாட்டு, மிமிக்ரி என்று எல்லா விதத்திலும் கலைஞரை, ரஜினியை, மூப்பனாரை, ஆர்க்காட்டாரை, ஸ்டாலினை தாக்கோ தாக்கென்று தாக் கினார்கள். 'புரட்சித் தலைவியை சிறை வைத்த சண்டாளன் கருணாநிதி. உம்மணா மூஞ்சி மூப்பனார்' போன்ற பேச்சுகள் அதிகபட்ச அருவருப்பூட்டியதில் தொண்டர்களில் சிலரே முகம் சுளித்தார்கள்!

ஜெயலலிதா வந்தபோது மாலை ஆறு ஐம் பது ஆகிவிட்டது. 'கலைஞரையும், ரஜினியை யும் திட்டினால் அம்மாவுக்குக் கிறுகிறுக்கும்' என்பதைப் புரிந்துக் கொண்ட பேச்சாளர்கள் மறக்காமல் திட்டித் தீர்த்தார்கள்.

ஏழு நாற்பத்திரண்டுக்கு ஜெ. மைக் முன் வந்தபோது மைக் ரிப்பேராகி விட, ஓரிரு



மேடையில் ஜெ

அ.தி.மு.க ~~மாநாடு~~ பொதுக்கூட்டம்

"எல்லாரும் உக்கார்றீங்களா? நான் போகட்டுமா?"

விநாடிகள் பொறுத்துப் பார்த்து கடுப்பாகி, 'என்ன நல்லாயிடுச்சா.. பேசலாமா' என்றார். மூன்று முறை 'மக்கர்' பண்ணிய அந்த மைக்கை விட்டு விட்டு மேடையின் இடது ஓரம் இருந்த மைக்கிற்கு வந்து பேச ஆரம் பித்தார். ஜெயலலிதா போகுமிடமெல்லாம் செல்லும் 'மெட்ராஸ்காரரின்' மைக்தான் ரிப்பேர்; பாவம் அவர்!

ஜெயலலிதா பேசத் தொடங்கிய கால் மணி நேரத்திலேயே சுவாரஸ்யம் குறைந்து போய், கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடக்கத் துவங்கினார்கள். கோபமடைந்த ஜெயலலிதா, "இப்போ, எல்லாரும் உட்கார்றீங்களா? இல்லே நான் போகட்டுமா? ஒன்னரை மணிநேரம் பேச வந்த ஜெயலலிதா, பாதியிலேயே திரும்பிப் போய்ட்டாங்கற கெட்ட பெயர் உங்களுக்கு (?) வரணுமா?" என்று கேட்டுவிட்டுத் தொடர்ந் தார்.

சுமார் ஒன்னேகால் மணி நேரம் பேசி யவர், காளிமுத்துவும், சேடப்பட்டி முத்தையாவும் இருவாரமாகச் சொல்லி வந்த மூப்பனார் பற்றி தனியாக எதுவும் சொல்ல வில்லை.

தன்னுடைய பேச்சில் (நாம் எண்ணியவரை) 124 முறை கருணாநிதியைக் காட்டமாகத் திட்டினார் ஜெயலலிதா.

தி.மு.க. ஆட்சி பற்றியும், காவிரி பற்றியும், கூட்டணிக் கட்சிகளைப் பற்றியும் பேசினார். திருச்சி அண்ணா விழா மூலம் ஜெ. சென்னை வரும் பிரதமரைப் புறக்கணித்ததோடு கருணாநிதியை நேருக்கு நேர் சந்திப்பதையும் தவிர்த்து விட்டதுதான் அவருக்கு ஒரே லாபம். ஏனென்றால் பிரதமரை அழைக்க ஏர் போர்ட்டுக்கு வந்தால், முதல்வர் என்கிற முறை யில் ஜெயலலிதாவைப் பிரதமருக்குக் கருணாநிதிதான் அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும்.

"அப்படி என்னத்த இந்தம்மா புதுசா சொல்லிட்டாங்க? வழக்கம் போல ஒரு அறிக்கையிலேயே இதை சொல்லியிருக்கலாம்! எவ்வளவு பணம் வேஸ்ட்!"

கூட்டம் முடிந்து திரும்பும்போது காதில் விழுந்த ஒரு கமெண்ட் இது. ●

கட்டுரை, படங்கள்: ஞானசேகர்

நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பிறகு நடக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு. அதுவும் கம்யூனிஸக் கோட்டைகளான வங்காளத்திலோ, கேரளத்திலோ அல்ல. சென்னையில்!

1953ல் நடைபெற்ற தேசிய மாநாடு நடந்ததும் தமிழ்நாட்டில் (மதுரை) தான்! அதன் பிறகு தவறாமல் ஒவ்வொரு வருடமும் மாநாடு நடந்தாலும் அது மாநில அளவில் நின்றுவிட்டது.

காமராஜர் அரங்கத்தின் வாசலில் உழைப்பாளர் பொம்மைகள், பக்கத்தில் ஒரு பேனரில் பெரிய அளவில் துயரம் சூழ்ந்த கோவணாண்டிச் சிறுவன், நியூ சென்சுரி புக் ஹவுஸ் விற்பனைக்கு வைத்த இடதுசாரிப் புத்தகங்கள், வந்தவர்களுக்கு வழங்கப்பட்ட மெதுபகோடா, சாய் என்று நிறைய கம்யூனிஸக் குறியீடுகள்!

இது ஒரு 'மாநாடு வாரம்' என்றாலும் மற்றக் கட்சி மாநாடுகளில் காணமுடியாத சில சிறப்புகள் இங்கே உண்டு!



• மேடையில் தலைவர்கள்

● விழா தொடக்கத்தில் 'தேசிய கீதம்' பாடப்பட்டதே ஒரு வித்தியாசமான அனுபவம்தான்.

● முன்னாள் கேரள முதல்வர், கட்சியின் பொதுச் செயலர் என்றெல்லாம் எந்த 'பராக் பராக்'கும் இல்லாமல் பெயருக்கு முன் 'காம்ரேட்' மட்டுமே சேர்க்கப்பட்டு வி.ஐ.பிக்கள் மேடையில் அழைக்கப்பட்டனர்.

● நடுநாயகமாக இவர், வலது பக்கத்தில் அவர் என்றெல்லாம் மரபு காட்டாமல், தலைவர்கள் மேடையில் இஷ்டப்படி உட்கார்ந்து கொண்டனர். சொல்லப் போனால் பர்தன், சுர்ஜித் இவர்களுக்கெல்லாம் ஓர சீட்தான்!

கருத்து மோதல்களின்

● யாசர் அராபத் உட்பட பல சர்வதேசப் புரட்சி வி.ஐ.பிக்களின் வாழ்த்துச் செய்திகளும், இருபது நாடுகளிலிருந்து பிரதிநிதிகளும் கலந்து கொண்டது கூடுதல் சிறப்பு. அவர்களுக்கு மேடையில் மாலை அணிவிப்பு.

● எதிர்பார்த்தபடியே சீனா, கியூபா, கொரியா, வியட்னாம், பாலஸ்தீனம்

• வெளிநாட்டுப் பிரதிநிதிகள்



இந்திய கம்யூனிஸ்ட் மாநாடு:

களம்!

செர்பியா ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளுக்கு அரங்கம் விண்ணதிரக் கைதட்டி மகிழ்ந்தார்கள். மற்றவர்கள் முஷ்டியை மடக்கி உயர்த்த, பாலஸ்தீன் பிரதிநிதிகள் இருவிரலை உயர்த்தினர். சர்ச்சிலும், நம் ஊர் அம்மாவும் நினைவுக்கு வர, லோக்கல்



• சுர்ஜித் : மௌனப் புன்னகை!

'காம்ரேட்'கள் சிரித்தனர்.

● சமீபத்தில் மறைந்தவர்களின் பட்டியல் படிக்கப்பட்டு ஒரு நிமிட மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது. அந்தப் பட்டியலில் டென்ஜியோ பெங், அன்னை தெரசா மற்றும் தூக்கிலிடப்பட்ட ஆப்கானிய ஜனாதிபதி ஆகியோரும் இருந்தனர்.

● இரண்டு காரணங்களால் இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு என்பதை வலியுறுத்தினார் வரவேற்புக் குழுத் தலைவர் வானமாமலை. அடுத்த நூற்றாண்டுக்குள் நுழைய இருக்கிறோம் என்பது ஒன்று. சமீபத்தில் அறிமுகமாகியுள்ள தகவல் தொடர்புப் புரட்சி இன்னொன்று. இதைச் சரியாகப் பயன்படுத்தினால் தொழிற்சாலைகள் துல்லியமாக இயங்கி, தொழிலாளிகளின் வேலைப் பளு குறையும் என்பது உண்மைதான். என்றாலும் லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட முதலாளிகளின் மனத்தில் மாற்றம் ஏற்பட வேண்டுமே" என்று கவலை தெரிவித்தார்.

● துவக்க விழாவில் பலரது கவனம் உடை, தாடி, தலைப்பாகை என்று அனைத்திலும் வெண்மையாக வந்திருந்த 'மாற்றான் தோட்டத்து மல்லிகை' மீதுதான். மார்க்ஸிஸ்ட் கம்யூ. கட்சியின் பொதுச் செயலாளர் சுர்ஜித் கேஷுவலாகவே காணப்பட்டாலும் அப்படியொன்றும் மற்ற எவரிடமும் கலந்து பழகவில்லை. சொல்லப் போனால் 'கம்யூனிஸ்ட்களின் ஒற்றுமை ஓங்குக!' என்று இந்திய கம்யூ. கட்சிச் செயலாளர் பர்தன் கோஷமிட்ட போது, சுர்ஜித் ரியாக்ஷன் காட்டாமல் அமர்ந்திருக்க, "என்ன இப்படி மௌனமா இருக்கீங்க?" என்று பர்தன் அவரை நேரிடையாகவே கேட்டு விட்டார். ஒரு புன்னகைதான் பதில்!

என்றாலும், விரைவில் கல்கத்தாவில் நடக்கவிருக்கும் மார்க்ஸிஸ்ட் கட்சி மாநாட்டுக்கு பர்தன் அழைக்கப்படுவார் என்று தகவல்.

● "175 நாடுகளை சர்வே செய்ததில் வறுமையிலும் படிப்பறிவின்மையிலும் இந்தியாவுக்கு முக்கியமான இடம் என்று தெரிகிறது. இந்நிலை மாறி நாம் முன்னேற வேண்டாமா?" என்று நிஜமாகக் கவலைப்பட்டார் பர்தன்.

● மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்பட்ட விஷயம், 'பா.ஜ.க. ஒரு மதவாத, ஒடுக்கப்பட வேண்டிய கட்சி' என்பது. காங்கிரஸுடன் உறவு கொள்ளலாமா, கூடாதா என்பது அடுத்தது.

பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட இந்த 'செஷனில்' கருத்து மோதல்கள் வெகு பலமாக இருந்ததாம்.

● கட்சிக்காரர்கள், கம்யூனிஸ்ட் அனுதாபிகள் தவிர, படித்தவர்கள் பலரும் 'விஷயம் வேண்டி' இந்த மாநாட்டுக்கு வந்திருந்தார்கள்.

● நடந்த நாலு மாநாடுகளில் அறிவுபூர்வமாக விஷயங்கள் அலசப்பட்டது இங்கேதான் என்பது குறிப்பிட வேண்டிய விஷயம். ●

— குல்லு

படங்கள் : ஸ்ரீஹரி

ஸ்டாலின் ஷோ

● இருபது நாட்களில் திட்டமிடப் பட்டு, நடந்து முடிந்திருக்கும் நெல்லை தி.மு.க. மாநாட்டில் ஹீரோவாகக் காண்பிக்கப்பட்டவர் ஸ்டாலின். பேரணியிலும் அவர் படையே பெரியது. வாழ்த்து முழக்கங்களிலும் பேச்சாளர்களின் வர்ணனைகளிலும் அவருக்கே முக்கியத் துவம்!

● பேரணியைப் பார்வையிடும் மேடைக்குக் கலைஞர் வந்தபோது மாலை மணி 5.45. மேடைக்கு வந்ததும் சவுக்குக் கட்டை கைப்பிடியைப் பிடித்து நின்று கொண்டு கையை ஆட்டலாம் என்று முதலில் அதைப் பிடித்து உறுதியாக இருக்கிறதா என்று பார்த்தார். அது ஆட்டம் கொடுத்தது. அதனால் கலைஞர் உட்கார்ந்த படியே ஊர்வலத்தைப் பார்வையிட முடிவு செய்தார்.

● ஐந்தே முக்கால் மணியிலிருந்து மறுநாள் காலை இரண்டே முக்கால் வரை கிட்டத்தட்ட ஒன்பது மணி நேரம் மேடையை விட்டுக் கலைஞர் அசையவே இல்லை. ஒன்பதுமணி நேரம் தொண்டர்கள், அலை அலையாக அணிவகுத்து வந்து கொண்டே இருந்தார்கள். வழக்கமாகப் பேராசிரியர், நாஞ்சிலார் ஆகியோர் நள்ளிரவு பன்னிரண்டை நெருங்கும்போது விடை பெற்றுச் சென்று விடுவார்கள். ஆனால் நெல்லைப் பேரணியில் நாஞ்சிலார் சென்று விட்டாலும், இந்த முறை அன்பழகன், கலைஞர் கிளம்பும் வரை உடனிருந்தார்.

● வேலூர் மாவட்ட இளைஞர் அணியினர் கறுப்பு - சிவப்பு குடைகளுடன் பீடுநடை போட்டு வந்தார்கள். வை.கோ.வின் சின்னமாகக் குடை இருந்தபடியால் கடந்த சில வருடங்களாகக் குடையைப் பற்றி ஒரு அலர்ஜி இருந்தது, உடன்பிறப்புகளுக்கு. (இனிமேல் அந்த அலர்ஜி பம்பரத்தின் மீது இருக்கக் கூடும்.)

● ஒரு ஜீப்பில் சரத்குமார், நெப்போலியன், சந்திரசேகர், தியாகு என நடிகர் படை வந்தது. எழுந்து நின்று அவர்களுக்குக் கை ஆட்டி அமர்ந்தார்கள் தலைவர்கள்.





• பேரணியில் 'கண்மணி'கள்

● ராமநாதபுரம் இளைஞர் அணியில் சிலர் 'அல் ஹஜிரா' என்று பொறிக்கப்பட்ட பனியன்களை அணிந்து வந்தார்கள். அது என்ன அல் ஹஜிரா?

● வர்ணனை செய்த அன்பில் பொய்யாமொழி, 'தமிழ்நாடு



• மேடையில் தலைவர்கள்

முழுதும் இருந்து வரும் தொண்டர்களைத் தமக்குத் தெரியும் என்பது போல் 'சுப்பிரமணியம்... வேகமா போங்க... சபாபதி முன்னுக்கு வாங்க...' என்றெல்லாம் கலைஞர் முன்னிலையில் சொல்லிக் கொண்டது கொஞ்சம் தமாஷாக இருந்தது.

● மாநாட்டில் தன் கட்-அவுட் உட்பட எந்த கட்-அவுட்டும் இருக்கக் கூடாது என்று கலைஞர் உத்தரவிட்டுவிட்டபடியால், கட்-அவுட்களுக்கு 144. (பெரியார் – அண்ணா மட்டும் விதிவிலக்கு)

● கலைஞரின் எதிர்நீச்சல் நிறைந்த அரசியல் வாழ்க்கையைக் குறிக்கும் சில அலங்கார வண்டிகளும் ஊர்வலத்தில் வந்தன. ஆனால் தென்சென்னைத் தொகுதி சார்பாக வந்த கிருஷ்ணா நீர் ஊர்திதான் பிரமாதம். ஒருமுனையில் சந்திரபாபு நாயுடு குடத்திலிருந்து தண்ணீர் ஊற்ற, அதைப் பிடித்துக் கொள்ளும் கலைஞர். தண்ணீர் அதிலிருந்து வழிந்து ஓடி. அடுத்த முனையில் மூன்று குழாய்களிலிருந்து தண்ணீர் பிடிக்கும் பெண்கள்!

● மாநாட்டில் தலைவர்களின் படங்களைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சிதான் முதல் நிகழ்ச்சி. "நான் இருந்த அதே சிறையில் கருணாநிதியையும் அடைப்பேன்" என்று திருச்சியில் சூளுரைத்த ஜெ, மாநாட்டுப் பேச்சாளர்களிடம் கடும் கண்டனத்துக்கு உள்ளானார். கலைஞரை மாநாட்டுத் தலைமைப் பொறுப்பேற்கும்படி வழி மொழிந்து பேசிய அமைச்சர் கோ.சி.மணி, 'மானங் கெட்டத்தனம்' என்று ஜெ.வின் பேச்சைப் பற்றிக் குறிப்பிட்டார். காலை நிகழ்ச்சியில் பசி வேளையில் பேசிய நன்னிலம் நடராஜன் ஜெ.வைக் கிண்டல் செய்வதாக நினைத்துக் கொண்டு கொஞ்சம் மலிவான விமர்சனத்தில் இறங்கினார். அவ்வளவு பெரிய கட்சி மாநாட்டில் சீனியர் தலைவர்களுக்கு முன்னால், மேடைப் பேச்சை எப்படிக் கையாள வேண்டும் என்று கழகப் பேச்சாளர்களுக்குப் பயிற்சி வகுப்பு எடுப்பது நல்லது. பாரதிதாசன் படத்தைத் திறந்து வைத்துப் பேசிய புதுக்கோட்டை விஜயாவின் பேச்சு கச்சிதம். அழைப்பிதழில் அமைச்சர் சற்குண பாண்டியன் காயிதே மில்லத் படத்தைத் திறந்து வைப்பார் என்று குறிப்பிடாவிடினும், மத நல்லிணக்கத்துக்கு வலிமையூட்டும் விதமாக, அவர் படத்தையும் திறக்கக் கடைசி நிமிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டதாம்.

● மாநாட்டுக்கு முத்தாய்ப்பாக இருந்த கலைஞர் பேச்சில், கணிசமான பகுதி கழக ஆட்சியில் தமிழகம் அடைந்த முன்னேற்றங்களைக் குறிப்பிடும் பேச்சாக இருந்தது. "ஆட்டோ, பேருந்திலிருந்து இறங்குபவர்களைக்கூட நான்கைந்து பேர் சூழ்ந்து நின்று 'வருங்கால முதலமைச்சர்' என்று கோஷம் போடும் உரிமை ஜனநாயகத்தில் இருக்கிறது" என்று கலைஞர் குறிப்பிட்டது யாரைப் பற்றி என்பது ஒரு 'பாப்பையா' சமாசாரம்.

● 'வாஜ்பாயுடன் உள்ள தனிப்பட்ட நல்லுறவை பா.ஜ.க என்ற கட்சிக்குக் கொடுக்கும் ஆதரவாக எடுத்துக் கொள்ளக் கூடாது' என்று தெளிவுபடுத்துவதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகத் தெரிந்தது.

— ப்ரியன்

படங்கள்: வெங்கடேஷ்

வட்ட மேஜை



✉ 'தமிழர் திருவிழா' தலையங்கம் படித்தேன். பத்திரிகையின் மூன்று நோக்கங்களும் 'தேச நலன்' என்று கல்கி அவர்கள் அளித்த வாக்கைத் தாங்கள் இதுவரை கடைபிடித்து வருவது மிக்க மகிழ்ச்சி. ஏனென்றால், பத்திரிகையின் நோக்கம் 'காசு பலன்' என்று சில பத்திரிகைகள் செக்ஸையும், பெண்ணையும் மையமாக வைத்து புரட்சி, புதுமை என்று நிறம் (மஞ்சள்?) மாறிக்கொண்டு அதையும் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கும் வேளையில், நீங்கள் அமரர் கல்கியின் வாக்கைக் காத்து பத்திரிகையின் தர்மத்தையும் காத்து வருகிறீர்கள். எனவே அமரர் 'கல்கியின் நூற்றாண்டு விழா' என்பது 'தமிழர் இல்லத் திருவிழா' என்பது மிகையல்ல.

சீர்காழி, கே.ஆர். வெங்கடேஷ்.

✉ இப்படியா ஓர் அட்டைப் படத்தை வெளியிடுவது? கல்கியைப் புரட்டிப் படிக்கவே மனசு வரமாட்டேன் என்கிறதே! இரண்டு நாட்களாகக் கல்கி அட்டையையே பார்த்துக் கொண்டிருக்கும் என்னை ஒரு மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்லலாமா என என் மனைவி அரண்டு போய் இருக்கிறாள். பொன்னியின் செல்வனும், வானதியும் பொலிவுடன் இருப்பதை விடுங்கள்; வண்ணப் பின்னணியில் நம் "பொன்னியின் புதல்வர்" என்னவொரு கன கம்பீரத்துடன் காட்சியளிக்கிறார்!

திருவண்ணாதபுரம், இக. பாலசுப்பிரமணியன்.

✉ அமரர் கல்கி அவர்களை ஒரு சிறந்த எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர் என்ற அளவில் மட்டுமே தெரிந்து வைத்திருந்தேன். அவரைப் பற்றிய அரிய செய்திகள் அவருடைய எழுத்துகள், கவிதை, கட்டுரைகள், விமர்சனங்கள் போன்றவற்றைப் படித்த பிறகுதான் அமரர் கல்கிக்கு இத்தனை சிறப்புகளா என விழி இமைகள் விரிகின்றன. தேச நலனையும் தமிழின் மேன்மையையும் இரு கண்களாக எண்ணிச் செயல்பட்ட மாபெரும் 'தேசியத் தமிழர்'தான் கல்கி என்றால் மிகையாகாது.

பெங்களூர் - 16, அ. சங்கரன்.

✉ கல்கி தலையங்கம் பகுதியில் விநாயகர் படம் இடம் பெறுகிறதே! கல்கிக்கும் விநாயகருக்கும் கனெக்ஷன் என்ன என்ற எனது நெடுங்கால சந்தேகத்திற்கு 'சின்னக்குத்தூசி' அவர்களின் கட்டுரை விளக்கமளித்தது.

பெங்களூர் - 47, மு. புஷ்பராசன்.

✉ 'பேராசிரியர் கல்கி' காலத்தில் நாங்கள் பிறக்காவிட்டாலும் இப்பொழுது அவருடைய எழுத்துகளைப் படிக்கும் பொழுது அவர் நம்முடனேயே இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

விசலூர், வெ. லட்சுமிநாராயணன்.

✉ கல்கி வாசகர்கள் உள்ளம் பொங்க, பரிசுத் திருவிழா நடத்தி ரூ. 60,000/- பரிசு தருவதோடு, கல்கி பிறந்த கிராமத்திலுள்ள பழுதடைந்த கோவில்களை சீரமைத்து கும்பாபிஷேகம் நடத்த கல்கி குடும்பத்தினர் ரூ. 2 லட்சம் வழங்க இருப்பதை அறிந்து கல்கி வாசகன் என்ற முறையில் பெருமைப்படுகிறேன்.

கோவை, ஏ.எஸ். இராமசாமி.

✉ விருது பெற்ற பெண் விஞ்ஞானி உஷா மேத்தா திருமணத்தைத் தியாகம் செய்துவிட்டு வாழ்க்கை முழுவதும் கரும்புக்கே என்று அர்ப்பணம் செய்தது பாராட்டப்பட வேண்டிய விஷயம்!

பள்ளிப்பாளையம், ரஞ்சனிப்ரியன்.

தமிழர் இல்லத் திருவிழா!

✉ 'வாசனை' சிறுகதை படித்தேன். மனிதர்கள் எங்கிருந்தாலும் அடிப்படை உணர்வுகள் மாறுவது இல்லை என்பதை அழகாகக் கூறியுள்ளார். எழுதிய மஹாதேவனிடம் அறிமுக எழுத்தாளர் என்ற 'வாசனையே' அடிக்கவில்லை. பாராட்டுகள்.

மங்கநல்லூர், துர்காதேவி.

✉ அதி.மு.க என்ற அதல பாதாளத்துக்குள் காலை வைத்து விட்ட பிறகு, ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைக்கிறோம் என்று வை.கோ கூறுவது அவருடைய அறியாத்தன்மையையே வெளிப்படுத்துகிறது.

விஜயவாடா - 3, தெனாலிராஜன்.


ராம் காஷ்யப் சிட்ஸ்

எங்கும் பொங்கும் தங்கம்



சீட்டு விழாக்காலம் 21-9-98 — 4-10-98

அன்பளிப்பு



"தங்கக் காசு" பரிசு

ராம் காஷ்யப் சிட்ஸ் மூலம் கிடைக்கும் நலன்களை நீங்கள் மட்டும் பெற்று பலனடைந்தால் போதுமா? உங்கள் நண்பர்களும் பலன் பெற வேண்டாமா?

எங்களுடைய சிறப்பு பிரதிநிதியாக செயல்பட்டு அவர்களையும் சீட்டுகளில் சேரும்படி செய்யுங்கள். அவர்கள் சீட்டுகளில் சேர்ந்தவுடன் அதற்கான பரிசு உங்களுக்கு ஒரு தங்கக் காசு!

எத்தனை முறை இவ்வாறு அறிமுகப்படுத்துகிறீர்களோ அத்தனை தங்கக் காசுகளை நீங்கள் பரிசாகப் பெறலாம்.

உங்களுக்கு எங்கள் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.

விரைந்திடுவீர்! பெறுவீர் தங்கக் காசுகளை!!

ராம் காஷ்யப் சிட்ஸ் பி.லிட்.

14/3, தண்டபாணி தெரு, தி. நகர், சென்னை - 600 017.

போன்: 4341513, 4330034

கிளை அலுவலக போன்: ★ **சென்னை:** ஆள்வார்பேட்டை: 4991198, 4970205, மேற்கு மாம்பலம்: 4896638 அண்ணா நகர்: 610979 அடையார்: 4418081 தி.நகர்: 4323437/4332611 நங்கநல்லூர்: 2329013 வளசரவாக்கம்:4861850 ★ **கோயம்புத்தூர்:** 235865 ★ **ஈரோடு:** 226822 ★ **சேலம்:** 418171 ★ **திருச்சி:** 704752 ★ **தஞ்சாவூர்:** 38871 ★ **கும்பகோணம்:** 430246 ★ **திருவாரூர்:** 20895 ★ **மயிலாடுதுறை:** 25008 ★ **மதுரை:** 747727 ★ **திருநெல்வேலி:** 333808 ★ **காரைக்குடி:** 36334 ★ **திண்டுக்கல்:** 434218

ஞாயிற்றுக் கிழமையிலும் அலுவலகம் உண்டு



சுவர் எழுப்பப் பட்டுள்ள குளம்



சுவருக்கு மறுபுறம் : பிரச்னைக்குரிய பகுதி இதுதான்

பூங்காவா? கடைகளா?

கல்கி 30.8.98 இதழில் இடம் பெற்ற 'காதில் விழுந்தவை' பகுதியில் ஒரு துணுக்கு அது.

மேற்கு மாம்பலம் கோதண்டராமர் கோயிலுக்குச் சொந்தமான குளத்தில் ஒரு பகுதியைத் தூரெடுத்து, கடைகள் கட்டி விற்க ஏற்பாடு நடப்பதாகவும் இந்த விவகாரத்துக்குப் பின்னணியில் அந்த 'சைதைப் பிரமுகர்'தான் இருக்கிறார் என்றும் வெளியிட்டிருந்தோமல்லவா?

சைதை கா. கிட்டு நம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு,



• கிட்டு (படம் : சாய் வர்ஷா)

'அந்தச் செய்தி உண்மை அல்ல' என்று தெரிவித்தார்.

நம் தரப்பு ஆதாரங்களை அவரிடம் விளக்கி, விளக்கம் கேட்க நேரில் சென்றோம்.

கோதண்டராமர் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் வசிப்போர் தந்த தகவலின் அடிப்படையிலேயே நாம் எழுதியதைச் சொன்னபோது, "யார் அப்படிச் சொன்னது? எனக்குத் தெரிந்து, சாலையை அகலப்படுத்தியதற்காக மக்கள் பாராட்டவே செய்கிறார்கள்" என்றார் கிட்டு.

"அது பஸ் போகும் சாலை அல்ல. பதினைந்தடி அகல சாலையை மிஞ்சிப் போனால் முப்பதடி அகலப் படுத்தலாம். அதற்கும் மேலல்லவா குளத்தைச் சுருக்கி சாலையை அகலமாக்கியிருக்கிறீர்கள். அத்தனை இடத்துக்கு என்ன அவசியம்?"

"குளத்தைச் சீராக்க மிகவும் கஷ்டப் பட்டு 30 லட்சம் சாங்ஷன் வாங்கினோம். அது, மிக மோசமான நிலையில் இருந்த குளம். மழைக் காலங்களில் குளத்து நீர் தெருவை அடைத்து இடுப்பளவு தண்ணீர் வந்து விடும். ஆனால் இப்போது சுற்றுச் சுவர் எடுத்திருப்பதால் அந்நிலை வராது."

"சுற்றுச் சுவர் எடுத்தது பற்றிப் பேச்சே இல்லை. ஏன் அத்தனை பெரிய குளத்தைக் கிட்டத்தட்ட பாதியாகக் குறைக்க வேண்டும் என்பதுதான்! கடைகள் வரப் போகின்றன என்கிற செய்தியும் அதனால்தான் இந்தக் குற்றச்சாட்டுக்கு வலு சேர்க்கிறது."

"கடைகள் எதுவும் வராத நிலையில் யூகத்தின் அடிப்படையில் அவதூறாக எப்படி எழுதலாம்?"

"அண்ணா அங்காடி மார்க்கெட்டில் கடை வைத்துள்ள மொத்த (காய்கறி) வியாபாரிகளுக்குக் குளக்கரையில் கொடோன் போலக் கட்டித் தர இருப்பதாகப் பகுதி மக்கள் தெரிவித்தார்கள்."

"முற்றிலும் தவறான செய்தி. அந்தச் சாலை, வளைவான சாலை. போக்கு வரத்துக்கு இடைஞ்சலானது. அகலப் படுத்துவதன் மூலம் நேர்க்கோட்டில் பாதையைக் கொண்டு வர உள்ளோம். மீதமுள்ள இடத்தில் அழகான பூங்கா வர இருக்கிறது."

எது எப்படியோ, மேற்கு மாம்பலம் வாசிகளுக்கு இப்போது சைதை கிட்டு மூலம் ஒரு உறுதிமொழி கிடைத்திருக் கிறது அல்லவா! மே. மா. வாசிகளே! நீங்க அதிர்ஷ்டசாலிகள்தான்! ●

— ப்ரியன்

படங்கள் : ஸ்ரீஹரி



''நேத்து ரோட்ல நான் நடந்து போறப்போ, ஸ்கூட்டர்ல போன ஒரு பொண்ணு என்னை இடிச்சு தள்ளிட்டுப் போயிட்டா!''

''நம்பரை நோட் பண்ணினியா?''

''ஓ..... 36 – 26 – 36!''

— என். உஷா தேவி

- **CRACKERS - should be boycotted?**
- **Short Story Contest**
- **THE CHEAT** - *Picture Story*
- **Laboratory Experience - a game**

SACHIN - Poster



GOKULAM

The monthly magazine for children

October '98 **Rs. 6/- only**

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097

வறட்சி

ஷோராஜ்

காற்றுக்காக, சமையற்கட்டின் பின் கதவைத் திறந்து விட்டு, அதற்கு நேராகவே தரையில் பழஞ்சேலையை விரித்துப் படுத்திருந்தாள் அம்மா. பொதுவாக அவள் பகல் நேரங்களில் தூங்குவது கிடையாது. இன்று காலையிலேயே பக்கத்து ஊரிலிருக்கிற ரேஷன் கடைக்குச் சென்றிருந்தாள். மண்ணெண்ணெயும் அரிசியும் வாங்கி, அவற்றை இந்த வேகாத வெயிலில் சுமந்து கொண்டு வீடு வந்து சேர்த்திருக்கிறாள். சுமையும் நடையுமாக உண்டான களைப்பினாலேயே படுத்துக் கொண்டிருப்பாள் போலும்.

ரகுபதி கண்ணாடி ஸ்டேண்டில் சேகரித்து வைத்துள்ள தீப்பெட்டிப் பக்குகளை எடுத்துக் கொண்டு விளையாடக் கிளம்பும் போது, "தண்ணி லாரி வந்துருச்சுன்னா எளுப்புடா" என்றாள் அவனிடம். அவன் சரியென்ற பிறகும், "வெளையாட்டு முசுவுல மறந்திராத. அப்புறம் குடிக்கறக்குக் கூடத் தண்ணியில்லாம ரெண்டு நாளைக்கு லோல் படோணும்." என்ற எச்சரிக்கையோடு, "ஒரு கொடத்த வரிசைல வெச்சுரு" என்றாள்.

அவற்றுக்கும் தலையசைத்து விட்டு ரகுபதி நகர்ந்தான். திண்ணையில் ஐந்து குடங்களைக் காலியாக்கி வைத்திருந்தாள் அம்மா. அதில் மஞ்சள் குடத்தை எடுத்துக் கொண்டான். படிக்கட்டுகளிலிருந்து செருப்பை அணிந்து வாசலுக்கு வரும்போது வெளிச்சம் கண்ணைக் கூசியது. சந்து வழியே நடந்தான். வெயிலில் எண்ணெய்த் தலை லேசாகச் சூடேறியது. தூரத்து ஓட்டுக் கூரைகள் நடுங்கும்படியான கானல்.

தெருவைச் சேர்ந்ததுமே, தெற்கே கருந்தம்பி டீக் கடைக்குப் பக்கமாக வைக்கப்பட்டிருக்கும் குடங்களின் வரிசை தெரிந்தது. வெவ்வேறு நிறங்களிலான பிளாஸ்டிக் குடங்கள்தான் நிறைய. பித்தளைக் குடங்களும் ஒரு எவர்சில்வர் குடமும் இருந்தன. அருகே சென்றபோது இடையிடையே சிறிய டப்பாக்களை வைத்தும் இடம் பிடிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. பெரும்பாலும் காட்டு வேலைக்குச் செல்கிற பெண்கள்தான், மதிய சாப்பாட்டுக்கு வந்துவிட்டு, மறுபடியும் போவதற்குள் தண்ணீர் பிடித்து விட்டுச் செல்லணும் என்பதால் இப்படி முன் கூட்டியே வரிசை வைப்பது. அதில்லாமலும் வரிசையில் இடம் பிடிப்பார்கள் சிலர். லாரி வந்த பிற்பாடு குடங்களைக் கொண்டு வருகிறவர்களே அதிகமும்.

வரிசையில் தங்களுடைய குடத்தையும் வைத்துவிட்டு வடக்கே நடக்கலானான் அவன். அந்த ஒரு குடம் வரிசைக் கிரமத்துக்காகவே. இன்னும் தேவையான அளவு குடங்களிலோ தவலையிலோ பிடித்துக் கொள்ளலாம். குடம் என்றால் எழுபத்தைந்து காசு. தவலைக்கு ஒரு ரூபாய்.

"குடி தண்ணியவே காசு குடுத்து வாங்கற நெலம வந்துருச்சு பாரு" என ஆரம்பத்தில் ஊர் ஜனங்கள் பேசிக் கொண்டாலும் வேறு வழியில்லாமல் இப்போது வாங்கவே செய்கிறார்கள்.

ஒரே ஒரு உழவு மழை பெய்தால் எல்லாம் சரியாகி விடும் என்பது அனைவருடைய எதிர்பார்ப்பு. வராத மழையை வரவழைக்க, கழுதைக்குக் கல்யாணம் பண்ணி வைத்தும் வருண பகவானுக்கு கொடும்பாவி எரித்தும் பார்த்தனர். இவை சிறுவர்களுக்கு நல்ல வேடிக்கையாக

அமைந்ததேயல்லாமல் மழைக்கான அறிகுறிகளைக் காணோம்.

இந்த நிலையில், பெண்கள் துவைக்கவும் தண்ணீர் எடுக்கவும் கிணறுள்ள வயல்காட்டுக்குப் போகிறபோது குடியானவர்கள் சிலர் தடுத்து விட்டார்கள். அவர்களுக்கே பற்றாக் குறையாக இருக்கிறதென்று.

"இங்க அவனவனுக்கு வெள்ளாமையே காஞ்சுகட்டு கெடக்குது. மாடு, கன்னுகளுக்குக் காட்டறக்குத் தண்ணியில்ல. பொளுது வெடிஞ்சாப் போதும், இவளுக வந்தர்றாளுக ஏறிப் புடிச்சுட்டு" என்று வெறுப்பிலே காங்கேயம்பாளையத்துக்காரர் வாய்க்கு வந்தபடி திட்டித் திருப்பி அனுப்பினார். ஆத்துக்காட்டு அகத்தீஸ்வரக் கவுண்டரோ, "ஒரு நடை மட்டும் எடுத்துக்கறமுங்க" என்று விடாப்பிடியாக நின்ற பெண்களை வழுக்கு மட்டையை எடுத்துக் கொண்டு விரட்டித் துரத்தினாராம். அதிலிருந்து யாரும் அகத்தீஸ்வரக் கவுண்டர் காட்டுக்குத் தண்ணீர் எடுக்கச் செல்வதில்லை. மற்ற இடங்களுக்கும் என்ன சொல்வார்களோ, ஏது நடக்குமோ என்கிற கவலையோடே சென்று வந்து கொண்டிருந்தார்கள்.

இந்த ஒரு ஊரில் மட்டும்தான் என்றில்லை; சுற்று வட்டாரம் முழுக்கவே தண்ணீர்க் கஷ்டம். அதைப் பயன்படுத்திக் கொண்டு ராசிபுரத்துக்காரர் ஒருவர் இப்போது லாரிகளில் குடிநீர் விநியோகித்துக் கொண்டிருந்தார்.

ரகுபதி, ரைஸ்மில் முக்குத் திரும்பி பிள்ளையார் கோவிலை நோக்கி நடந்தான். அரச மரத்தடி நிழலில், கோவில் மேடைத் திட்டோடு சேர்த்து 'கரம்' போட்டு தீப்பெட்டிப் பக்குக்கு குண்டாடிக் கொண்டிருந்தனர் சிறுவர்கள். அவனும் இணைந்து கொண்டான். விளையாட்டோடு கூடவே லாரியின் வருகையை கவனிப்பதற்குத் தகுந்த இடம் இது. இந்த வழியாகவே லாரி வரும். வந்தவுடன் வீட்டுக்குச் சென்று அம்மாவை எழுப்பி விடணும். திரும்ப வரும்போது மீதமுள்ள நாவில் இரண்டு குடங்களை தானும் எடுத்து வரலாம் என்று நினைத்துக் கொண்டான் அவன். தண்ணீர் பிடித்ததும் அம்மாவே அவற்றை வீட்டுக்குக் கொண்டு போய் விடுவாள்.

அவர்களது வீட்டுக்கு நாலைந்து குடங்கள் போதும். இரண்டு நாட்கள் சமைப்பதற்கும் குடிப்பதற்குமாக. சில வீடுகளில் பத்துப் பதினைந்து குடங்கள் வரை வாங்குவார்கள். காசு கொடுத்து, தண்ணீர் வாங்க முடியாதவர்கள் இன்னும் நல்ல தண்ணீருக்காகக் காடு, களங்களுக்குச் சென்று கொண்டிருந்தனர். ரகுபதியின் அம்மா இப்போது அங்கெல்



போட்டிக்கதை — 4

லாம் துவைக்கப் போவதோடு சரி. புழக்கத் திற்கு அடி பம்ப்பிலிருந்து தினந்தோறும் அப்பா சைக்கிளில் நாலு குடம் போட்டு உப்புத் தண்ணீர் கொண்டு வந்து விடுவார். பெரும்பாலான வீடுகளிலும் அதே போல செய்து கொண்டிருந்தனர்.

சற்று நேரத்தில் லாரி ஹாரன் கேட்டது. ரகுபதி சுதாரித்துக் கொண்டான். அப்போது அவனும் வெங்கடேசனும் ஆடுகிற முறை. ஆட்டத்தை விரைவில் முடித்து விட்டு வீட்டுக்குப் போக வேண்டும் என்று பரபரத்தான் அவன். லாரி ஹாரன் நெருங்கிக் கேட்டு, இரைச்சலும், கேட்கலாயிற்று. ஆட்டத்தில் வெங்கடேசன் ஜெயித்து விடவே, ரகுபதி ட்ரௌசர் பாக்கெட்டிலிருந்து ஒரு தீப்பெட்டிப் பக்கை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

"டேய்... நான் வீட்டுக்குப் போயிட்டு வந்தர்றன்டா. நீங்க ஆடிட்டிருங்க." அவர்களிடம் சொல்லி விட்டு தெருவின் ஓரமாகவே ஓடினான். இரண்டு தடவை திரும்பிப் பார்த்த போதும் லாரி கண்ணுக்குத் தென்படவேயில்லை.

ரைஸ் மில் முக்கை அடைந்ததும் கருந்தம்பி கடைக்கு முன்பாக குடங்களின் வரிசையோடு பெண்களும் ஆண்களுமாகக் கூட்டம் கூடிவிட்டிருப்பது தெரிந்தது. அப்பாலிருந்து இன்னும் சிலர் வந்து கொண்டிருந்தனர். ரகுபதி தங்களுடைய வீட்டுக்குப் போகிற சந்தில் செல்வதற்காகத் தெருவைக் குறுக்கே கடக்க ஓடினான். பாதித் தெருவுக்கு வரும்போது, ஹாரன் ஒலித்தபடி திருப்பத்தை வளைந்து கொண்டு அவனுக்கு சமீபமாக லாரியும் வந்து விட்டது.

அவனைப் பார்த்துமே டிரைவர் சடன் ப்ரேக் அடித்தார். டயர்கள் மண்ணில் அழுந்தித் தேய, க்றீச்சிட்டு நகர்ந்தது லாரி. அவன் பயந்து அலறி நடு ரோட்டிலேயே நிற்கவும், அவன் மீது இடித்துவிடக் கூடாதென்று வலதுபுறத்திற்கு ஒடித்தார். அவன் மீது படாமல் விலகிய லாரி, அவர் கட்டுப்படுத்துவதற்குள் பாதையை விட்டும் விலகி, அங்கிருந்த புளிய மரத்தில் மோதி நின்றது.

அதிர்ச்சியும் பதற்றமுமாக ரகுபதி அதே இடத்தில் நின்று விட்டான். கருந்தம்பிடீக் கடைக்கு முன்பாக இருந்தவர்களும் அப்பால் குடங்களோடு வந்து கொண்டிருந்தவர்களும் விபத்தைக் கண்டதுமே ஓடி வரலாயினர். அந்த ஓட்டத்தோடேயே அவனிடம், "ஏன்டா... ரோட்டுல பாத்து வர்றதில்லையா? இன்னேரம் நீ அடிபட்டிருக்க வேண்டியது" என்றார் லட்சுமணசாமி, கையை ஆட்டிக் கொண்டே. மற்றவர்கள் அவனை உற்றுப் பார்த்தனர். தன்னால்தான் லாரி மரத்தில் மோதி விட்டது என்பதில் அவன் வருந்தினான். மேலும் யாராவது தன்னைத் திட்டவோ அடிக்கவோ செய்யக் கூடும் என்ற பயமும் உண்டாயிற்று. அதற்குள் புளிய மரத்தைச் சுற்றி கூட்டம் கூடி விடவே, ரகுபதியும் அங்கே சென்றான்.

லாரியுடைய முன் பகுதியின் வலதுபுறம் புளிய மரத்தில் மோதிச் சிதைந்திருந்தது. கண்ணாடிகள் உடைந்து சிதறியிருந்தன. ஸ்டியரிங்கின் மீது கவிழ்ந்து கிடந்தார் டிரைவர். தலையிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. க்ளீனரை இருக்கையில் காணோம். ஓரிருவர் ஏறி கதவு வழியாகப் பார்வையிட்டனர்.

"க்ளீனருக்கும் அடி பெலந்தானாட்டிருக்குதுங்கோ. சீட்டுக்கடியில குப்பறக்கா கெடக்கறாரு."

"டிரைவருக்குக் கால் சிக்குருச்சுங்க. வண்டிய நகுத்தாம ஒண்ணும் பண்ண முடியாது."

"ரெண்டு பேருமே மயங்கிட்டாங்கப்பா."

பார்த்தவர்கள் விவரிக்கவே, மற்றவர்கள் விபத்துக்கு காரணம் என்ன என்பது பற்றி அலசத் தொடங்கினார்கள். வெவ்வேறு காரணங்களும் சொல்லப்பட்டன. டிரைவர் வேகமாக லாரி ஓட்டி வந்தார் என்றும், ரகுபதி குறுக்கே வந்தது தவறென்றும், பிரேக் ஃபெயிலியர் ஆகியிருக்கலாம் என்றும்.

"இந்த ஆம்பளைகளுக்குக் கொஞ்சமாவது வெகரமிரக்குதா? சும்மா நாயமடிச்சுட்டே நிக்கறாங்களே. உள்ள இருக்கறவங்

"ஸ்பெஷல் ஸ்டெப்கட்டா, இல்லை ஆர்டினரி ஸ்டெப்கட்டா?"



"என்ன வித்தியாசம்?"

"ஸ்பெஷல் ஸ்டெப்கட்டு செஞ்சால் உங்கள் காதுக்கு கியாரண்டி உண்டு!"

– வடபழனி பாலு

கள எடுத்துடலாமல்லோ?" பர்வதம் சற்று உரக்கவே சொன்னதில் ஆண்களின் பேச்சு நின்றது.

"ஓ... பொம்பளைகளுக்கு நெம்ப வேக்கானந்தான். சித்தெ சும்மா இரும்முணி. ஏக்ஸலன்டு ஆனது... ரெண்டும் துடுக்குத் துடுக்குதுங்குதுகொ. நாம வெளிய எடுத்துப் போடற நேரத்துல பொட்டுனு போயிருச்சுன்னு வெய்யி... நாளைக்கு போலீஸு, கேஸுன்னு வந்தா ஆரு சிரளியறது?" லட்சுமணசாமி சொன்னது சூழ்ந்திருந்தவர்களால் ஆமோதிக்கப்பட்டது. விபத்து நடந்த தகவலறிந்து மேலும் ஆட்கள் வேடிக்கை பார்க்க வந்து கொண்டிருக்க, லாரியின் முன்பாக இருந்தவர்கள் விலகி இடம் மாறி நின்றனர்.

"தண்ணி வருமுன்னு இத்தனை நேரம் காத்துட்டிருந்தது வீணாப் போச்சே. இனி நாளைக்கு வருமோ வராதோ?"

"நாளைக்கா? இனி போலீஸு வந்து லாரிய எடுத்துட்டுப் போனாங்கன்னா... வர்றதுக்கு எப்படியும் வாரம், பத்து நாள் ஆகும். லாரிய செரி பண்ணோணுமல்லோ. அதுவரைக்கும் தண்ணிக்கு கவ்வாத்தடிக்க வேண்டிதுதான்."

கூட்டம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

சிரங்கு செட்டியார் லாரிக்குப் பின்னால் போகும்போது, "அஞ்சு நிமிசம் வெயில்ல நிக்கறக்குள்ளயே கிறுகிறுன்னு வர்றாப்புல இருக்குது" என்றவர், தண்ணீர்க் குழாயை கவனித்து விட்டு, "மூஞ்சியாவது கழுவிக்கலாம்" என்று வால்வைத் திருகினார். தண்ணீர் விழவும் சாவகாசமாக இரு கைகளாலும் ஏந்தி முகம் கழுவினார். அப்படியே கை, கால்களையும் கழுவும்போது, "குடிக்கறக்கு ஊட்ல சுத்தமா தண்ணியே இல்லீங்க. நான் ஒரு கொடம் புடிச்சுக்கறேன்" என்று ஒரு பெண்மணி தண்ணீர் பிடித்தாள். அடுத்தடுத்து ஒவ்வொருவராக வந்து தண்ணீர் பிடிக்கலாயினர். லாரியின் முன்புறமாக நின்றிருந்தவர்களும் குடங்களை வரிசையில் வைத்திருந்தவர்களும் அதைப் பார்த்துவிட்டு தத்தமது குடங்களோடு வந்தார்கள்.

சற்றைக்குள் ஆண்களும் பெண்களுமாக மிகுந்த நெரிசலாகியது. உடைகள் நனைய, குடங்கள் மோதும்படி அனைவரும் முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.



"பேப்பர் கடை பக்கத்திலே இருக்கிற ஜோசியர்கிட்டே என்ன இவ்வளவு கூட்டம்?"

"யார் யார் ராசிக்கு எந்தப் பத்திரிகை தீபாவளி மலர் வாங்கினா என்ன பிரைஸ் விழும்னு கரக்ட்டா சொல்றாராம்!"

– வீ.எஸ். கணேசன்

ஜீபினுக்குள் டிரைவர் இன்னும் முந்தைய நிலையிலேயே இருந்தார். க்ளீனருக்கு மயக்கம் தெளிந்து விட்டது. காயமாகி ரத்தம் வழிந்து கொண்டிருந்த நெற்றியிலும் அடிபட்டுக் கன்றியிருந்த இடங்களிலும் தாளாத வேதனை. 'டிரைவருக்கு என்ன ஆயிற்றோ' என்று பார்த்தான். கீழே கிடந்த நிலையிலிருந்து எழ முயற்சித்தான். அசையவே முடியாமல் உடம்பு துவள, தலை உயர்த்தினாலும் பேனட் மறைத்துக் கொண்டது. லாரிக்குப் பின்னாலிருந்து நிறையப் பேரின் குரல்கள் கேட்டன. கூடவே குடத்தில் தண்ணீர் விழுகிற ஓசைகள். அவனுக்கு தாகத்தால் தொண்டை வறண்டிருந்தது. உலர்ந்த உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டு, "தண்ணி... தண்ணி..." என்று அரற்றினான். குரலில் சத்தம் குறைவாக இருப்பது அவனுக்கே பட்டது. வலிகளைப் பொறுத்துக் கொண்டு, சற்றே உரக்க, "தண்ணி... தண்ணீஈஈ..." என்றான்.

அவனது குரல் லாரிக்குப் பின்னாலிருந்த யாருக்குமே கேட்கவில்லை. அவசரத்துடன் தண்ணீர் பிடித்துக் கொண்டும், பிடித்ததை சுமந்து வீட்டுக்குச் சென்று கொண்டுமிருந்தனர் அவர்கள். ரகுபதி சிறிது நேரம் அவர்களைப் பார்த்திருந்து விட்டுத் திரும்பினான். கருந்தம்பி டீக்கடைக்கு முன்பாக குடங்களை வரிசை வைத்திருந்த இடத்தில் இவர்களது மஞ்சள் குடம் ஒற்றையாக இருப்பது தெரிந்தது. அம்மா ஞாபகமும் வரவே, வீட்டை நோக்கி ஓடத் தொடங்கினான். ●



பொன்னியின் செல்வன்

பதினெட்டாம் அத்தியாயம்

துரோகத்தில் எது கொடியது?



பழந்தமிழ்நாட்டின் சரித்திரத்தைப் படித்தவர்கள் அந்நாளில் பெண்மணிகள் பலர் சமூக வாழ்வின் முன்னணியில் இருந்திருப்பதை அறிவார்கள். மன்னர் குலத்தில் பிறந்த மாதரசிகள் மிகவும் கௌரவிக்கப்பட்டார்கள். சோழ குலத்தில் பிறந்த பெண்மணிகளும் சொந்தமாகச் சொத்துரிமை பெற்றிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் தரவாரியாகக் கிராமங்களும் நன்செய், புன்செய் நிலங்களும் கால்நடைச் செல்வமும் இருந்தன. இந்த உடைமைகளை அவர்கள் எவ்வாறு உபயோகித்தார்கள் என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். பலர் ஆலயங்களில் தங்கள் பெயரால் பலவிதத் திருப்பணிகள் நடைபெறுவதற்குச் சொத்துகளை உபயோகப்படுத்தினார்கள். திருவிளக்கு ஏற்றுதல், திருமாலை புனைந்து சாற்றுதல், தேசாந்திரிகளுக்கும் சிவனடியார்களுக்கும் திருஅமுது செய்வித்தல்– ஆகியவற்றுக்குப் பல அரசகுல மாதர்கள் நிவந்தங்கள் ஏற்படுத்திச் சிலாசாஸனம் அல்லது செப்புப் பட்டயத்தில் அவற்றைப் பொறிக்கும்படிச் செய்தார்கள்.

அரண்மனைப் பெண்டிர் ஆலயத் திருப்பணி செய்தல் அந்த நாளில் பொது வழக்காயிருந்திருக்க, சுந்தர சோழரின் அருமைப் புதல்வி குந்தவைப் பிராட்டி

அமரர் கல்கி

மட்டும் வேறொரு வகை அறத்துக்குத் தம் உடைமைகளைப் பயன்படுத்தினார். நோய்ப்பட்டிருந்த தம் தந்தையின் நிலையைக் கண்டு இரங்கியதனால்தானோ, என்னமோ, அவருக்கு நாடெங்கும் தர்ம வைத்திய சாலைகளை நிறுவ வேண்டும் என்னும் ஆர்வம் உண்டாயிற்று. பழையாறையில் பராந்தக சக்கரவர்த்தியின் பெயரால் ஓர் ஆதுரசாலை ஏற்படுத்தியிருந்ததை முன்னமே பார்த்தோம். அது போலவே தஞ்சையில் தம் தந்தையின் பெயரால் ஆதுரசாலை அமைப்பதற்குக் குந்தவை தேவி ஏற்பாடு செய்திருந்தார். இந்த விஜயதசமி தினத்தில் அந்த ஆதுரசாலையை ஆரம்பிக்கவும் அதற்குரிய தான சாஸனங்களை எழுதிக் கொடுக்கவும் ஏற்பாடாகியிருந்தது.

தஞ்சைக் கோட்டைக்கு வெளியேயுள்ள புறம்பாடியில், பெருமாள் கோயிலுக்கு எதிர்ப்பட்ட கருட மண்டபத்தில், சுந்தரசோழ ஆதுரசாலையின் ஆரம்ப வைபவம் நடந்தது. திருமால் காக்கும் தெய்வமாதலாலும், கருடாழ்வார் அமுதம் கொண்டு வந்தவராதலாலும், விஷ்ணு கோயிலையொட்டிய கருட மண்டபத்தில் குந்தவைப் பிராட்டி ஆதுரசாலையை ஏற்படுத்தி வந்தார். இந்த வைபவத்திற்காக, தஞ்சை நகர மாந்தரும் அக்கம் பக்கத்துக் கிராமவாசிகளும் கணக்கற்றவர்கள் கூடியிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அலங்கார ஆடை ஆபரணங்கள் பூண்டு கோலாகலமாகத் திரண்டு வந்திருந்தார்கள். சோழ சக்கரவர்த்தியின் உடன் கூட்டத்து அமைச்சர்களும், பெருந்தர, சிறுதர அதிகாரிகளும், சிலாசாஸனம் பொறிக்கும் கல் தச்சர்களும், செப்புப் பட்டயம் எழுதும் விசுவகர்மர்களும் அரண்மனைப் பணியாளர்களும் ஏராளமாக வந்து கூடியிருந்தார்கள். தாரை, தப்பட்டை முதலிய வாத்தியங்களை எட்டுத்திசையும் நடுங்கும்படி முழங்கிக் கொண்டு வேளக்காரப் படையினர் வந்தார்கள். தஞ்சைக் கோட்டையின் காவல் படை வீரர்கள் வாள்களையும் வேல்களையும் சுழற்றி 'டணார், டணார்' என்று சப்தப்படுத்திக் கொண்டு வந்தார்கள். பழுவேட்டரையர்கள் இருவரும் யானை மீதேறிக் கம்பீரமாக வந்தார்கள். இளவரசர் மதுராந்தகத் தேவர் வெள்ளைப் புரவியின் மேல் ஏறி உட்காரத் தெரியாமல் உட்கார்ந்து தவித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். இளவரசி குந்தவைப் பிராட்டியும் அவருடைய தோழிகளும் முதிய அரண்மனை மாதர் சிலரும் பல்லக்கில் ஏறிப் பவனி வந்தார்கள். இன்னொரு பக்கமிருந்து பழுவூர் இளையராணி நந்தினியின் பனை இலச்சினை கொண்ட தந்தப் பல்லக்கும் வந்தது.

அரண்மனை மாதர்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த நீலப்பட்டு விதானமிட்ட இடத்தில் குந்தவை தேவியும் பழுவூர் ராணியும் மற்ற மாதர்களும் வந்து அமர்ந்தார்கள்.

பிறகு, பெரிய பழுவேட்டரையர் சமிக்ஞை செய்ததின் பேரில் வைபவம் ஆரம்பமாயிற்று. முதலில் ஓதுவார் மூர்த்திகள் இருவர் "மந்திரமாவது நீறு" என்ற தேவாரப் பதிகத்தைப் பாடினார்கள். யாழ், மத்தளம் முதலிய இசைக் கருவிகளின் ஒத்துழைப்புடன் மிக இனிமையாகப் பாடப்பட்ட அந்தப் பாடலைக் கேட்டு மக்கள் மெய்மறந்திருந்தார்கள். அந்தப் பெரிய ஜனக் கூட்டத்தில் அப்போது நிசப்தம் நிலவியது.

ஆனால் அரண்மனைப் பெண்டிர் அமர்ந்திருந்த இடத்தில் மட்டும் மெல்லிய குரலில் இருவர் பேசும் சத்தம் எழுந்தது. பழுவூர் இளையராணி நந்தினி குந்தவையை நெருங்கி உட்கார்ந்து "தேவி! முன்னொரு காலத்தில் சம்பந்தப் பெருமான் இந்தப் பாடலைப் பாடித் திருநீறு இட்டுப் பாண்டிய மன்னரின் நோயைத் தீர்த்தாரல்லவா? இப்போது ஏன் இந்தப் பாடலுக்கு அந்தச் சக்தி இல்லை? பாடலுக்குச் சக்தியில்லா விட்டாலும் திருநீற்றுக்கும் சக்தி இல்லாமற் போய்விட்டதே? மருந்து, மூலிகை, மருத்துவர், மருத்துவ சாலை, இவ்வளவும் இல்லாமல் இக்காலத்தில் முடியவில்லையே?" என்று கேட்டாள்.

"ஆம், ராணி! அந்த நாளில் உலகில் தர்மம் மேலோங்கியிருந்தது. அதனால் மந்திரத் திருநீற்றுக்கு அவ்வளவு சக்தியிருந்தது. இப்போது உலகில் பாவம் மலிந்துவிட்டது. அரசருக்கு விரோதமாகச் சதி செய்யும் துரோகிகள் நாட்டில் ஏற்பட்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் முன்னே நாம்

கேட்டதுண்டா? ஆகையால் தான் மந்திரத்தின் சக்தி குறைந்து மருந்து தேவையாகிவிட்டது!" என்று இளைய பிராட்டி கூறிப் பழுவூர் இளையராணியின் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

நந்தினியின் முகத்தில் எவ்வித மாறுதலையும் காணவில்லை. "அப்படியா? அரசருக்கு விரோதமாகச் சதி செய்யும் துரோகிகள் இந்த நாளில் இருக்கிறார்களா? அவர்கள் யார்?" என்று சாவதானமாகக் கேட்டாள்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. சிலர் ஒருவரைச் சொல்கிறார்கள்; சிலர் இன்னொருவரைச் சொல்கிறார்கள். எது உண்மை என்று கண்டுபிடிப்பதற்காக இன்னும் சில நாள் இங்கேயே இருக்கலாமென்று பார்க்கிறேன். பழையாறையில் இருந்தால் உலக நடப்பு என்ன தெரிகிறது?" என்றாள் குந்தவை.

"நல்ல தீர்மானம் செய்தீர்கள். என்னைக் கேட்டால் இங்கேயே நீங்கள் தங்கிவிடுவது நல்லது. இல்லாவிட்டால் இராஜ்யம் குட்டிச் சுவராய்ப் போய்விடும். நானும் உங்களுக்கு என்னால் முடிந்த உதவி செய்வேன். எங்கள் வீட்டில் விருந்தாளி வந்திருக்கிறான். அவனும் தங்களுக்கு உதவி செய்யக் கூடும்!" என்றாள்.

"அது யார் விருந்தாளி?" என்று குந்தவை கேட்டாள்.

"கடம்பூர் சம்புவரையர் மகன் கந்தன்மாறன். தாங்கள் அவனைப் பார்த்திருக்கிறீர்களா? தென்னைமர உயரமாய் வாட்ட சாட்டமாய் இருக்கிறான். 'ஒற்றன்' என்றும், 'துரோகி' என்றும் ஓயாமல் பிதற்றிக் கொண்டிருக்கிறான். இராஜத் துரோகத்தைப் பற்றிச் சற்றுமுன் சொன்னீர்களே? இராஜத் துரோகத்தைக் காட்டிலும் பெரிய துரோகம் இன்னதென்று தங்களால் சொல்ல முடியுமா?"

"நன்றாய்ச் சொல்ல முடியும். கைப்பிடித்த கணவனுக்கு, பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தி துரோகம் செய்தால் அது இராஜத் துரோகத்தைக் காட்டிலும் கொடியதுதான்!"



இப்படிச் சொல்லிவிட்டுக் குந்தவை தேவி நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அவள் எதிர்பார்த்த மாறுதல் ஒன்றும் நிகழவில்லை. நந்தினியின் முகத்தில் முன்போலவே மோகனப் புன்னகை தவழ்ந்தது.

"தாங்கள் சொல்வது ரொம்ப சரி; ஆனால் கந்தன்மாறன் ஒப்புக் கொள்ள மாட்டான். 'எல்லாவற்றிலும் கொடிய துரோகம் சிநேகிதத் துரோகம்' என்று சொல்வான். அவனுடைய அருமை நண்பன் என்று கருதிய ஒருவன் ஒற்றனாக மாறிப் போனதுமல்லாமல் இவனுடைய முதுகில் குத்திப் போட்டுவிட்டு ஓடிப் போய் விட்டானாம். அதுமுதல் கந்தன் மாறன் இவ்விதம் பிதற்றிக் கொண்டிருக்கிறான்!"

"அது யார் அவன் அவ்வளவு நீசத்தனமான காரியத்தைச் செய்தவன்?"

"யாரோ வந்தியத்தேவனாம்! தொண்டை நாட்டில் திருவல்லம் என்னும் ஊரில் முன்னம் அரசு புரிந்த வாணர் குலத்தைச் சேர்ந்தவனாம்! தாங்கள் கேள்விப்பட்டதுண்டோ?"

குந்தவை தன் முத்துப் போன்ற பற்களினால் பவழச் செவ்விதழ்களைக் கடித்துக் கொண்டாள்.

"எப்போதோ கேட்ட மாதிரி இருக்கிறது... பிற்பாடு என்ன நடந்தது?"

"பிற்பாடு என்ன? கந்தன் மாறனை முதுகில் குத்திப் போட்டு அவனுடைய சிநேகிதன் ஓடிவிட்டான். அந்த ஒற்றனைப் பிடித்து வருவதற்கு என் மைத்துனர் ஆள்கள் அனுப்பியிருப்பதாகக் கேள்வி!"

"அவன் ஒற்றன் என்பது எப்படி நிச்சயமாய்த் தெரியும்?"

"அவன் ஒற்றனோ இல்லையோ, எனக்கு என்ன தெரியும்? சம்புவரையர் மகன் சொல்லுவதைத்தான் சொல்கிறேன். தாங்கள் வேண்டுமானால் நேரில் அவனிடமே கேட்டு எல்லா விவரமும் தெரிந்து கொள்ளலாம்."

"ஆமாம்; சம்புவரையர் மகனை நானும் பார்க்க வேண்டியதுதான். அவன் பிழைத்ததே புனர் ஜன்மம் என்று கேள்விப்பட்டேன். அப்போது முதல் பழுவூர் அரண்மனையிலேதான் அவன் இருக்கிறானா?"

"ஆம்; காயம்பட்ட மறுநாள் காலையில் நம் அரண்மனையில் கொண்டு வந்து போட்டார்கள். காயத்துக்கு வைத்திய சிகிச்சை செய்ய வேண்டிய பொறுப்பும் என் தலையில் விழுந்தது. மெதுவாக உயிர் பிழைத்துக் கொண்டான்; காயம் இன்னும் முழுதும் ஆறியபாடில்லை!"

"நீங்கள் பக்கத்திலிருந்து பராமரித்தும் இன்னும் முழுதும் குணமாகவில்லை என்பது ஆச்சரியமான விஷயந்தான். ஆகட்டும், ராணி! நான் அவசியம் வந்து அவனைப் பார்க்கிறேன். சம்புவரையர் குலம் நேற்று முந்தா நாள் ஏற்பட்டதா? பராந்தக சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து வீரப் புகழ் பெற்ற குலம் அல்லவா?..."

"அதனாலேயே நானும் சொன்னேன். கந்தன் மாறனைப் பார்க்கும் வியாஜத்திலாவது எங்கள் ஏழை அரண்மனைக்கு எழுந்தருளுவீர்கள் அல்லவா?" என்றாள் நந்தினி.

இதற்குள் தேவாரப் பாடல் முடிந்து தான சாஸன வாசிப்பு ஆரம்பமாகிவிட்டது. முதலில் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருமுகம் படிக்கப்பட்டது. "நமது திருமகளார் குந்தவைப் பிராட்டிக்கு நாம் சர்வமானியமாகக் கொடுத்திருந்த நல்லூர் மங்கலம் கிராமத்தின் வருமானம் முழுவதும் இளைய பிராட்டியார் தஞ்சைப் புறம்பாடி ஆதுர சாலைக்கு அளிக்க உவந்திருப்பதால், அந்த ஊர் நன்செய் புன்செய் நிலங்கள் யாவற்றையும் 'இறையிலி' நிலமாகச் செய்திருக்கிறோம்" என்று அந்த ஓலையில் சக்கரவர்த்தி தெரியப்படுத்தியிருந்தார். திருமந்திர ஓலை நாயகர் அதைப் படித்த பின் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரிடம் கொடுக்க, பழுவேட்டரையர் அதை இரு கரங்களாலும் பெற்றுக் கண்களில் ஒற்றிக் கொண்டு கணக்காயரிடம் கொடுத்துக் கணக்கில் பதிய வைத்துக் கொள்ளும்படிச் சொன்னார்.

பிறகு குந்தவைப் பிராட்டியின் தான சிலா சாஸனம் படிக்கப்பட்டது. மேற்கூறிய கிராமத்துச் சர்வமானிய நிலங்களை அந்த ஊர் விவசாயிகளே சகல உரிமைகளுடன் அனுபவித்துக் கொண்டு தஞ்சாவூர் சுந்தர சோழ ஆதுர சாலை வைத்தியருக்கு ஆண்டு ஒன்றுக்கு இருநூறு கலம் நெல்லும் ஆதுர சாலையில் சிகிச்சை

பெரும் நோயாளிகளுக்காகத் தினந்தோறும் ஐம்பது படி பசும் பாலும் ஐந்து படி ஆட்டுப் பாலும் நூறு இளநீரும் அனுப்ப வேண்டியது என்று கருங்கல்லில் செதுக்கப்பட்டிருந்ததுடன் எழுதியவன் பெயரும் எழுதியதை மேற்பார்வை செய்த அதிகாரிகளின் பெயர்களும் அதில் விவரமாகப் பொறிக்கப்பட்டிருந்தன.

அந்தச் சிலா சாஸனத்தைப் படித்த பிறகு, அது இந்த வைபவத்துக்காக வந்திருந்த நல்லூர் மங்கல கிராமத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கிராமத் தலைவர்கள் சிலாசாஸனக் கல்லைப் பய பக்தியுடன் வாங்கிக் கொண்டு அருகில் நின்ற யானை மீது ஏற்றினார்கள். அப்போது "மதுரை கொண்ட கோஇராஜ கேசரி சுந்தர சோழ சக்கரவர்த்தி வாழ்க! வாழ்க!" என்று ஆயிரமாயிரம் குரல்களில் எழுந்த ஒலி எட்டுத் திசையும் பரவியது. அந்தக் குரல் ஒலியுடன் போட்டியிட்டுக் கொண்டு நூறு அறப் பறைகளின் முழக்கம் எழுந்து வானை அளாவியது. பின்னர் வரிசைக் கிரமமாக "இளைய பிராட்டி குந்தவை தேவி வாழ்க!" "வீர பாண்டியன் தலை கொண்ட வீராதி வீரர் ஆதித்த கரிகாலர் வாழ்க!" "ஈழங்கொண்ட இளவரசர் அருள்மொழி வர்மர் வாழ்க!" சிவஞான கண்டராதித்தரின் தவப் புதல்வர் மதுராந்தக தேவர் வாழ்க!" என்றெல்லாம் கோஷங்களும் பிரதி கோஷங்களும் எழுந்தன. கடைசியில், "தனாதிகாரி, தானிய பண்டாரத் தலைவர், இறை விதிக்கும் தேவர் பெரிய பழுவேட்டரையர் வாழ்க!" "தஞ்சைக் கோட்டைத் தலைவர் சின்னப் பழுவேட்டரையர் காலாந்தக கண்டர் வாழ்க!" என்ற கோஷங்கள் எழுந்தபோது, ஒலியின் அளவு பெரிதும் குறைந்து விட்டது. பழுவூர் வீரர்கள் மட்டும் அக் கோஷங்களைச் செய்தார்களே தவிரக் கூடியிருந்த பொதுமக்கள் அதிகமாக அதில் சேர்ந்து கொள்ளவில்லை. அப்போது பழுவூர் இளைய ராணியின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று குந்தவைப் பிராட்டி முயற்சி செய்தும் பலிக்கவில்லை. முக்கியமாக ஆதித்த கரிகாலரைப் பற்றிய வாழ்த்தொலி எழுந்த சமயத்தில் நந்தினியின் முகத்தைப் பார்த்திருந்தால், இரும்பு நெஞ்சு படைத்த இளைய பிராட்டி கூடப் பெரிதும் திகில் கொண்டிருப்பாள் என்பதில் ஐயம் இல்லை.

பத்தொன்பதாம் அத்தியாயம்

"ஒற்றன் பிடிபட்டான்!"

அன்று நடந்த சம்பவங்கள் பெரிய பழுவேட்டரையருக்கு மிக்க எரிச்சலை உண்டு பண்ணியிருந்தன. சக்கரவர்த்தியிடமும் அவருடைய குடும்பத்தாரிடமும் மக்கள் கொண்டிருந்த விசுவாசத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கல்லவா அது ஒரு சந்தர்ப்பமாகப் போய் விட்டது? "ஜனங்களாம் ஜனங்கள்! அறிவற்ற ஆடுமாடுகள்! நாலு பேர் எந்த வழி போகிறார்களோ அதே வழியில் நாலாயிரம் பேரும் போவார்கள்! சுய அறிவைப் பயன்படுத்திக் கொள்ள எத்தனை பேருக்குத் தெரிகிறது?" என்று தமக்குள் அடிக்கடி சொல்லிக் கொண்டு பொருமினார். "சக்கரவர்த்தி சொர்க்கத்துக்குப் போவதற்குள்ளே சாம்ராஜ்யத்தைப் பாழாக்கி விட்டுத்தான் போவார் போலிருக்கிறது! 'இந்த ஊருக்கு வரியைத் தள்ளி விடு!' 'அந்தக் கிராமத்தை இறையிலிக் கிராமமாகச் செய்துவிடு!' என்று கட்டளையிட்டுக் கொண்டே போகிறார்! கொஞ்ச காலத்துக்கெல்லாம் வரி கொடுக்கும் கிராமமே இல்லாமற் போய்விடும். ஆனால் போர்க்களத்துக்கு மட்டும் செலவுக்குப் பணமும் உணவுக்குத் தானியமும் அனுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். எங்கிருந்து அனுப்புவது?" என்று அவர் இரைந்து கத்தியதைக் கேட்டு அவருடைய பணியாட்களே சிறிது பயப்பட்டார்கள். "அண்ணா! இப்படியெல்லாம் சத்தம் போடுவதில் என்ன பயன்? காலம் வரும் வரையில் காத்திருந்து காரியத்தில் காட்ட வேண்டும்!" என்று சின்னப் பழுவேட்டரையர் அவருக்குப் பொறுமை



போதிக்க வேண்டியிருந்தது.

குந்தவை தம் அரண்மனைக்கு வரப் போகிறாள் என்று தெரிந்ததும் பெரியவரின் எரிச்சல் அளவு கடந்து விட்டது. நந்தினியிடம் சென்று, "இது என்ன நான் கேள்விப்படுவது? அந்த அரக்கி இங்கு எதற்காக வரவேண்டும்? அவளை நீ அழைத்திருக்கிறாயாமே? அவள் உன்னை அவமானப் படுத்தியதையெல்லாம் மறந்து விட்டாயா?" என்று கேட்டார்.

"ஒருவர் எனக்குச் செய்த நன்மையையும் நான் மறக்க மாட்டேன்; இன்னொருவர் எனக்குச் செய்த தீமையையும் மறக்க மாட்டேன். இன்னமும் இந்த என் சுபாவம் தங்களுக்குத் தெரியவில்லையா?" என்றாள் நந்தினி.

"அப்படியானால் அவள் இங்கு எதற்காக வருகிறாள்?"

"அவள் இஷ்டம் வருகிறாள்! சக்கரவர்த்தியின் குமாரி என்ற இறுமாப்பினால் வருகிறாள்!"

"நீ எதற்காக அழைத்தாயாம்?"

"நான் அழைக்கவில்லை; அவளே அழைத்துக் கொண்டாள். 'சம்புவரையர் மகன் உங்கள் வீட்டில் இருக்கிறானாமே? அவனைப் பார்க்க வேண்டும்!' என்றாள். 'நீ வராதே!' என்று நான் சொல்ல முடியுமா? அப்படிச் சொல்லக் கூடிய காலம் வரும். அதுவரையில் எல்லா அவமானங்களையும் நான் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்."

"என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. அவள் வரும் சமயம் நான் இந்த அரண்மனையில் இருக்க முடியாது. இந்த நகரிலேயே என்னால் இருக்க முடியாது. மழபாடியில் கொஞ்சம் அலுவல் இருக்கிறது. போய் வருகிறேன்."

"அப்படியே செய்யுங்கள், நாதா! நானே சொல்லலாம் என்று இருந்தேன். அந்த விஷப் பாம்பை என்னிடமே விட்டு விடுங்கள். அவளுடைய விஷத்தை இறக்குவது எப்படி என்று எனக்குத் தெரியும். தாங்கள் திரும்பி வரும்போது ஏதேனும் சில அதிசயமான செய்திகளைக் கேள்விப்

பட்டால் அதற்காகத் தாங்கள் வியப்படைய வேண்டாம்..."

"என்ன மாதிரி அதிசயமான செய்திகள்?"

"குந்தவைப் பிராட்டி கந்தமாறனைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவோ, ஆதித்த கரிகாலன் கந்தமாறனுடைய தங்கையை மணக்கப் போவதாகவோ கேள்விப்படலாம்..."

"ஐயையோ! இது என்ன சொல்கிறாய்? அப்படியெல்லாம் நடந்து விட்டால், நம்முடைய யோசனைகள் என்ன ஆகும்?"

"பேச்சு நடந்தால், காரியமே நடந்து விடுமா, என்ன? மதுராந்தகத் தேவருக்கு அடுத்துப் பட்டம் என்று உங்கள் நண்பர்களிடம் எல்லாம் சொல்லி வருகிறீர்களே? உண்மையில் அப்படி நடக்கப் போகிறதா? பெண்ணைப் போல் நாணிக் கோணி நடக்கும் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவதற்காகவா நாம் இவ்வளவு பாடுபடுகிறோம்?" என்று கூறி நந்தினி தன் கரிய கண்களினால் பெரிய பழுவேட்டரையரை உற்று நோக்கினாள். அந்தப் பார்வையின் சக்தியைத் தாங்க முடியாத அக்கிழவர் தலை குனிந்து அவளுடைய கரத்தை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, "என் கண்ணே! இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் நீ சக்கரவர்த்தினியாக வீற்றிருக்கும் நாள் சீக்கிரத்திலேயே வரும்!" என்றார்.

கந்தமாறன் தன்னைப் பார்க்கக் குந்தவை தேவி வரப் போகிறாள் என்று அறிந்தது முதல் பரபரப்பு அடைந்து தத்தளித்துக் கொண்டிருந்தான். குந்தவையின் அறிவும் அழகும் மற்ற உயர்வுகளும் நாடு அறிந்தவை அல்லவா? அப்படிப்பட்ட இளைய பிராட்டி தன்னைப் பார்ப்பதற்காக வருகிறாள் என்பது எவ்வளவு பெருமையான விஷயம்? இதற்காக உடம்பில் இன்னும் சில குத்துக்கள் பட்டு நோயாகவும் படுத்திருக்கலாமே? அடாடா! இந்த மாதிரி காயம் போர்க் களத்தில் தன்னுடைய மார்பிலே பட்டுத் தான் படுத்திருக்கக் கூடாதா? அச்சமயம் குந்தவை தேவி வந்து தன்னைப் பார்த்தால் எவ்வளவு கௌரவமாயிருக்கும்? அப்படியின்றி, இப்போது ஒரு சிநேகிதன் செய்த துரோகத்தைப் பற்றிப் பலரிடம் படித்த பாடத்தையேயல்லவா அவளிடமும் படித்தாக வேண்டும்?

இடையிடையே அப்பெண்ணரசியின் குடும்பத்தினருக்கு விரோதமாக அவன் ஈடுபட்டிருக்கும் இரகசிய முயற்சியைக் குறித்து நினைவு வந்து கொஞ்சம் அவனை வருத்தியது.

கந்தமாறன் யோக்கியமான பிள்ளை. தந்திர மந்திரங்களும் சூது வாதுகளும் அறியாதவன். நந்தினியின் மோகன சௌந்தரியம் அவனைப் போதைக்குள்ளாக்கிய போதிலும் அவள் இன்னொருவரின் மனைவி என்ற நினைவினால் தன் மனத்துக்கு அரண் போட்டு வந்தான். ஆனால் குந்தவைப் பிராட்டியோ கலியாணம் ஆகாதவள். அவளிடம் எப்படி நடந்து கொள்வது? எவ்வாறு பேசுவது? மனத்தில் வஞ்சகம் வைத்துக் கொண்டு வெளியில் இனிமையாகப் பேச முடியுமா? அல்லது அவளுடைய அழகிலே மயங்கித் தன்னுடைய சபதத்தைக் கைவிடும்படியான மனத் தளர்ச்சி ஏற்பட்டு விடுமா? அப்படி நேருவதற்கு ஒரு நாளும் இடங்கொடுக்கக் கூடாது... ஆ! இளவரசி எதற்காக இங்கே நம்மைப் பார்க்க வர வேண்டும்? வரட்டும்; வரட்டும்! ஏதாவது மூர்க்கத்தனமாகப் பேசி மறுபடியும் வராதபடி அனுப்பி விடலாம்.

இவ்விதம் கந்தமாறன் செய்திருந்த முடிவு குந்தவைப் பிராட்டியைக் கண்டதும் அடியோடு கரைந்து மறைந்து விட்டது. அவளுடைய மோகன வடிவும் முகப் பொலிவும் பெருந்தன்மையும் அடக்கமும் இனிமை ததும்பிய அனுதாப வார்த்தைகளும் கந்தமாறனைத் தன் வயம் இழக்கச் செய்து விட்டன. அவனுடைய கற்பனா சக்தி பொங்கிப் பெருகியது. தன்னுடைய பெருமையைச் சொல்லிக் கொள்ள விரும்பாதவனைப் போல் நடித்து அதே சமயத்தில் அவளுடைய கட்டாயத்துக்காகச் சொல்கிறவனைப் போலத் தான் புரிந்த வீரச் செயல்களைச் சொல்லிக் கொண்டான். தோள்களிலும் மார்பிலும் இன்னும் தன் உடம்பெல்லாம் போர்க் களத்தில்தான் அடைந்த காயங்களைக் காட்ட விரும்பாதவனைப் போல் காட்டினான். "அந்தச் சிநேகத் துரோகி வந்தியத்தேவன் என்னை மார்பிலே குத்திக் கொன்றிருந்தால் கூடக் கவலையில்லை. முதுகிலே குத்தி விட்டுப் போய்விட்டானே என்றுதான் வருத்தமாயிருக்கிறது. ஆகையினாலேதான் அவனு

டைய துரோகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இல்லாவிடில், போரில் புறமுதுகிட்ட அபகீர்த்தியல்லவா ஏற்பட்டு விடும்? தோளிலோ மார்பிலோ குத்திக் காயப் படுத்தியிருந்தால், அவனை மன்னித்து விட்டே இருப்பேன்!" என்று கந்தமாறன் உணர்ச்சி பொங்கக் கூறியது குந்தவைக்கு உண்மையாகவே தோன்றியது. வந்தியத்தேவன் இப்படிச் செய்



திருப்பானோ, அவன் விஷயத்தில் நாம் ஏமாந்து போய் விட்டோமோ என்ற ஐய மும் உண்டாகி விட்டது. நடந்ததை விவர மாகச் சொல்லும்படி கேட்கவே, கந்த மாறன் கூறினான். அவனுடைய கற்பனா சக்தி அன்று உச்சத்தை அடைந்து நந்தினிக்கே வியப்பை உண்டாக்கிவிட்டது.

"பாருங்கள் தேவி! கடம்பூரில் தங்கிய அன்றே அவன் என்னை ஏமாற்றி விட் டான். காரியம் இன்னதென்று சொல்ல வில்லை. இங்கு வந்து ஏதோ பொய் அடையாளத்தைக் காட்டி உள்ளே நுழைந் திருக்கிறான். சக்கரவர்த்தியையும் போய்ப் பார்த்திருக்கிறான். ஆதித்த கரிகாலரி டமிருந்து ஓலை கொண்டு வந்ததாகப் புளுகியிருக்கிறான். அத்துடன் விட் டானா? தங்கள் பெயரையும் சம்பந்தப் படுத்தி, தங்களுக்கும் ஓலை கொண்டு வந் திருப்பதாகச் சொல்லவே கோட்டைத் தலைவருக்குச் சந்தேகம் வந்து விட்டது. அவன் ஒற்றனாயிருக்கலாம் என்று ஐயுற்று அவனைக் காவலில் வைக்கச் சொல்லி யிருக்கிறார். எப்படியோ தப்பித்துப் போய் விட்டான். அது விஷயத்தில் அவனுடைய சமர்த்தை மெச்சத்தான் வேண்டும். நான் இந்தச் செய்திகளைக் கேட்டபோது என் சிநேகிதன் பகை யாளியின் ஒற்றன் என்பதை மட்டும் நம்பவே இல்லை.



அவனுடைய சுபாவத்திலேயே சில கோணல்கள் உண்டு. அப்படி ஏதோ அசட்டுத் தனம் செய்திருக்கிறான் என்று உறுதியாக நம்பினேன். 'எப்படியாவது அவனை நான் கண்டுபிடித்துத் திரும்ப அழைத்து வருகிறேன். அவனை மன்னித்து விட வேண்டும்' என்று கோட்டைத் தலைவரிடம் நிபந்தனை பேசிக் கொண்டு புறப்பட்டேன். கோட்டையைச் சுற்றியுள்ள வடவாற்றங் கரையோடு அந்த நள்ளிரவில் சென்றேன். யாரையும் பின்னோடு அழைத்துப் போய் என் நண்பனை அவமானப் படுத்த விரும்பவில்லை. கோட்டையிலிருந்து தப்பியவன் எப்படியும் மதில் வழியாகத்தான் வெளியில் வர வேண்டுமல்லவா? முன்னமே வெளியே வந்திருந்தாலும் பக்கத்துக் காடுகளிலேதான் மறைந்திருக்க வேண்டும். ஆகையால் வடவாற்றங்கரையோடு போனேன். ஒருவன் செங்குத்தான கோட்டை மதில் சுவர் வழியாக இறங்கி வருவது மங்கிய நிலா வெளிச்சத்தில் தெரிந்தது. உடனே அங்கே போய் நின்றேன். அவன் இறங்கியதும், 'நண்பா! இது என்ன வேலை?' என்றேன். அந்தச் சண்டாளன் உடனே என் மார்பில் ஒரு குத்து விட்டான். யானைகள் இடித்தும் நலுங்காத என் மார்பை இவனுடைய குத்து என்ன செய்யும்? ஆயினும் நல்ல எண்ணத்துடன் அவனைத் தேடிப் போன என்னை அவன் குத்தியது பொறுக்கவில்லை. நானும் குத்து விட்டேன். இருவரும் துவந்த யுத்தம் செய்தோம். அரை நாழிகையில் அவன் சக்தி இழந்து அடங்கிப் போனான். என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். நானும் அவனை மன்னித்து, 'நீ வந்த காரணத்தை உண்மையாகச் சொல்லிவிடு! நான் உனக்கு வேண்டிய உதவி செய்கிறேன்!' என்றேன். 'களைப்பாயிருக்கிறது, எங்கேயாவது உட்கார்ந்து சொல்கிறேன்' என்றான். 'சரி' என்று சொல்லி அழைத்துச் சென்றேன். முன்னால் வழி காட்டிக் கொண்டு போனேன். திடீரென்று அந்தப் பாவி முதுகில் கத்தியினால் குத்திவிட்டான். அரைச் சாண் நீளம் கத்தி உள்ளே போய்விட்டது. தலை சுற்றியது. கீழே விழுந்து விட்டேன். அந்தச் சிநேகத் துரோகி தப்பி ஓடிவிட்டான்! மறுபடி நான் கண் விழித்து உணர்வு வந்து பார்த்தபோது ஓர் ஊமை ஸ்திரீயின் வீட்டில் இருந்ததைக் கண்டேன்...''

கந்தமாறனின் கற்பனைக் கதையைக் கேட்டு நந்தினி தன் மனத்திற்குள்ளே சிரித்தாள். குந்தவை தேவிக்கு அதை எவ்வளவு தூரம் நம்புவது என்று தீர்மானிக்க முடியவில்லை.

"ஊமை ஸ்திரீயின் வீட்டுக்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள்? யார் கொண்டு சேர்த்தது?'' என்றாள்.

''அதுதான் எனக்கும் விளங்காத மர்மமாயிருக்கிறது. அந்த ஊமைக்கு ஒன்றுமே தெரியவில்லை. தெரிந்தாலும் சொல்ல முடியவில்லை. அவளுக்கு ஒரு புதல்வன் உண்டாம். அவனையும் அன்றிலிருந்து காணவே காணோம். எப்படி மாயமாக மறைந்தான் என்று தெரியாது. அவன் திரும்பி வந்தால் ஒருவேளை கேட்கலாம். இல்லாவிடில் பழுவூர் வீரர்கள் என் நண்பனைப் பிடிக்கும் வரையில் காத்திருக்க வேண்டியதுதான்!...''

"அவன் அகப்பட்டு விடுவான் என்று நினைக்கிறீர்களா?''

"அகப்படாமல் எப்படித் தப்ப முடியும்? சப்பட்டை கட்டிக் கொண்டு பறந்து விட முடியாதல்லவா? அதற்காகவே, அவனைப் பார்ப்பதற்காகவே, இங்கே காத்திருக்கிறேன். இல்லாவிடில் ஊர் சென்றிருப்பேன். இன்னமும் அவனுக்காகப் பழுவூர் அரசர்களிடம் மன்னிப்புப் பெறலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

"ஐயா! தங்களுடைய பெருந்தன்மையே பெருந்தன்மை!'' என்றாள் இளைய பிராட்டி. அவளுடைய மனம் வந்தியத்தேவன் அகப்படக் கூடாது. அவன் துரோகியாயிருந்தாலும் சரி தான்!' என்று எண்ணமிட்டது.

அச்சமயத்தில் அரண்மனைத் தாதி ஒருத்தி ஓடி வந்து, "அம்மா! ஒற்றன் அகப்பட்டு விட்டான்! பிடித்து வருகிறார்கள்!" என்று கத்தினாள்.

நந்தினி, குந்தவை இருவருடைய முகத்திலும் துன்ப வேதனை காணப்பட்டது. நந்தினி விரைவில் அதை மாற்றிக் கொண்டாள். குந்தவையினால் அது முடியவில்லை.

(தொடரும்)

கல்கி கலெக்ஷன்

தற்காலத்து நாடகக் கலையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் பெர்னார்ட் ஷாவையும், இப்ஸனையும் நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். "நாடகம், கிடகம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு பெர்னார்ட் ஷாவுக்கும் ஒரு இப்ஸனுக்கும் எங்கே போவது? திருடப் போக வேண்டியதுதான்!" என்று சொல்வார்கள். அப்படியெல்லாம் திருடவும் கிருடவும் போக வேண்டாம். தமிழ்நாடு நாடகாசிரியர் இல்லாமல் பாழ்த்துப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.

இரண்டு வாரத்துக்கு முன்பு திருச்சினாப்பள்ளியில் "ஓரிரவு" என்னும் நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. பார்த்ததின் பயனாக, "இதோ ஒரு பெர்னார்ட்ஷா தமிழ்நாட்டில் இருக்கிறார்! இப்ஸனும் இருக்கிறார்! இன்னும் கால்ஸ்வொர்த்திகூட இருக்கிறார்!" என்று தோன்றியது.

நாடகக் கதையும், கதையை நாடகமாக அமைத்திருந்த பாணியும், கட்டுக் கோப்பும், காட்சிகளின் அமைப்பும், சம்பாஷணையும் அப்படி ஒன்றுக்கு மேல் ஒன்று சிறந்து விளங்கி என்னைத் திணற அடித்து விட்டன. நாடக முடிவில் என்னைப் பேசும்படி சொன்னபோது ஒன்றும் பேசத் தோன்றவில்லை. "நன்றாயிருக்கிறது; மிக நன்றாயிருக்கிறது; அதிக நன்றாயிருக்கிறது!" என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருந்தது.



"ஓரிரவு' என்னும் நாடகத்தின் ஆசிரியர் திரு. சி.என். அண்ணாத்துரை.



காங்கிரஸுக்கும், தேசிய விடுதலை இயக்கத்துக்கும் எதிர்க் கட்சிகள் என்று கருதப்படும் திராவிடக் கட்சி, சுயமரியாதைக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி ஆகியவற்றில் மிகச் சிறந்த எழுத்தாளரும், சொற்பொழிவாளரும் சிலர் இருக்கிறார்கள்.

ஓரிரவு

உதாரணமாக, திருச்சி "நகர தூதன்" பத்திரிகையின் முதற் பக்கத்தில் "பேனா நர்த்தனம்" என்னும் தலைப்பில் ஒருவர் எழுதுகிறாரே, அவர் மிகப் பொல்லாத எழுத்தாளர். அவருடைய பேனா

அமரர் கல்கி

நர்த்தனத்தில், பரத நாட்டியத்திலேயுள்ள சகல ஜதி வகைகளையும் காணலாம். அப்படித் துள்ளிக் குதிக்கும் வேகமுள்ள தமிழ்நடையில் எதிர்க் கட்சிக்காரர்களையும் அவர் தாக்குவார். நானும் பார்த்து வருகிறேன்; சென்ற இருபது வருஷத்துக்கு மேலாக அவருடைய கொள்கையும் ஒரே மாதிரியாக இருந்து வருகிறது; அவருடைய தமிழ் நடையும் ஒரேவித வேகமுள்ளதாயிருந்து வருகிறது. இவரால் தாக்கப்படுகிற மனிதர் நல்ல ரஸிகராக மட்டுமிருந்தால், "தாக்கப்பட்டாலும் இப்படிப்பட்ட பேனாவினால் அல்லவா தாக்கப்பட வேண்டும்" என்றுதான் அவருக்கு எண்ணத் தோன்றும். திராவிடக் கட்சி – சுயமரியாதைக் கட்சி – ஜஸ்டிஸ் கட்சி சொற்பொழிவாளர்களிலே தற்சமயம் தலை சிறந்து விளங்குகிறவர் திரு. சி.என். அண்ணாத்துரை அவர்கள். (திரு. ஈ.வே.ரா.வுக்கு அடுத்தபடியாகத்தான் சொல்கிறேன். ஈ.வெ.ரா.வைப் போன்ற வலிமை மிகுந்த மேடைப் பேச்சாளர் தமிழ்நாட்டில் வேறு யாருமே இல்லை என்பது என் அபிப்பிராயம். இல்லாமற் போனால், அவ்வளவு பலமற்ற ஒரு கட்சியை, இத்தனை நாளும் விடாமல் தாங்கி நின்று போகுமிடங்களிலெல்லாம் இன்னமும் ஜனக்கூட்டம் சேர்க்க முடியுமா?) திரு. சி.என். அண்ணாத்துரையின் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். "சொற்பொழிவு என்றால் இதுவல்லவா பொழிவு? தட்டுத் தடுமாறிச் சொற்களுக்குத் திண்டாடி நிற்பதையெல்லாம் சொற்பொழிவு என்கிறோமே!" என்று எண்ணத் தோன்றும்.

திரு. அண்ணாத்துரையின் ஒரு சொற்பொழிவை நான் நேரில் கேட்கா விட்டாலும், நண்பர் ஒருவர் அதைப் பற்றிக் கூறியது என் மனதில் பதிந்து போயிருக்கிறது. சென்ற ஆண்டின் இறுதியில் சென்னையில் தமிழ் எழுத்தாளர் மகாநாடு நடந்தது. அச்சமயம் நான் பம்பாயில் அகப்பட்டுக் கொண்டேன். ரயில் பாதையும் உடைபட்டுப் போயிருந்தபடியால் மகாநாட்டுக்கு வர முடியவில்லை. திரும்பி வந்ததும் எழுத்தாளர் மகாநாட்டைப் பற்றி விசாரித்தேன். திரு. அண்ணாத்துரையின் பிரசங்கத்தைப் பற்றி ஒருவர் சொன்னார். நமது கிராமங்களிலுள்ள ஜனங்கள் அறிவு விளக்கம் பெறாமல் பழைய குருட்டு நம்பிக்கைகளிலேயே ஆழ்ந்து கிடப்பதைப் பற்றி திரு. அண்ணாத்துரை பேசினாராம். "மின்சார சக்தியைக் கண்டு பிடித்தவன் யார் என்று கிராமவாசியைக் கேளுங்கள். தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்று தெரியும். நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவன் யார் என்று கேளுங்கள். தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்பது மட்டும் தெரியும். ரேடியத்தின் உபயோகம் என்னவென்று கேளுங்கள். தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் என்ன என்று கேட்டால், உடனே எருமைக்கடா என்று பதில் வரும்...!" இந்த மாதிரி யமனையும் எருமைக் கடாவையும் வைத்துக் கொண்டு திரு. அண்ணாத்துரை மேற்படி மகா நாட்டில் வெளுத்துக் கட்டி விட்டார் என்று பிரசங்கத்தைக் கேட்ட நண்பர் சொன்னார். எழுத்தாளர் மகாநாட்டிலேயே திரு அண்ணாத்துரை பிரசங்கந்தான் விசேஷ நிகழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

ஆனால், பேச்சும் பிரசங்கமும் சொற்பொழிவும் உடனுக்குடனே காற்றிலே போய் விடுகின்றன. கூட்டத்துக்கு வருகிற ஜனங்களில் 100க்கு 50 பேர் சொற்பொழிவைச் சரியாகக் கவனிப்பதேயில்லை; மற்ற ஐம்பது பேர் ஒரு காதினால் வாங்கி,

இன்னொரு காதினால் விட்டு விடுகிறார்கள்.

பேச்சைக் காட்டிலும் எழுத்து அதிக வலிமையுடையது. ஆனால் பேச்சு எழுத்து எதுவும் நாடகத்துக்கு அருகிலும் வராது. ஜன சமூகத்தை உண்மையில் சீர்திருத்த விரும்புவோன் கையாள வேண்டிய சாதனம் நாடகமேயாகும்.

நடிக்கக் கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிகவும் அரியது. அந்த ஆற்றல் திரு. அண்ணாத்துரையிடம் பூரணமாக அமைந்திருக்கிறது என்பதை "ஓரிரவு" நாடகத்தில் கண்டு மகிழ்ந்தேன்.

* * *

"ஓரிரவு" நாடகம் ஓர் இரவில் நடக்கும் சம்பவங்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஓரிரவில், ஒரு ஜமீன்தாரின் வாழ்க்கைச் சம்பவங்கள் எல்லாம் பின் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றன.

அந்த ஜமீன்தாருக்கு ஒரு செல்வ மகள். அவளும் ஒரு டாக்டரும் பரஸ்பரம் காதலிக்கிறார்கள். ஆனால் ஜமீன்தார் ஒரு குடிகாரக் காலாடியின் கையில் சிக்கிக் கொண்டு தவிக்கிறார். ஜமீன்தாருடைய பழைய வாழ்க்கையைச் சேர்ந்த பயங்கர இரகசியம் ஒன்று மேற்படி காலாடிக்குத் தெரிந்திருந்தது. அதைப் பயன்படுத்தி அந்தக் குடியன் ஜமீன்தாரின் மகளைத் தனக்கு மணம் செய்து கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறான்.

ஜமீன்தார் டாக்டரிடம் தன்னுடைய பழைய கதையைச் சொல்கிறார். அந்தக் கதை அரங்க மேடையில் காட்டப்படும் 'டெக்னிக்' மிக அற்புதம்.

அதே இரவில், திருடன் ஒருவன் ஜமீன்தார் வீட்டில் களவாடப் புகுந்து விடுகிறான். இந்தக் கட்டத்தில் நாடகம் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம் காத்திருக்கிறது.

நாடகத்தில் ஓரிடத்தில் விபசாரியின் வீடும், அந்த வீட்டுக்கு ஒரு அசடன் வரும் காட்சியும் காட்டப்படுகின்றன. இந்தக் கட்டம் அநாவசியம். இதைத் தவிர மற்றப்படி நாடகத்தில் எந்த இடத்திலும் விரசம் என்பது இல்லாமல் கதை விறுவிறுப்பாகச் செல்கிறது. "மேலே என்ன வருகிறது?" என்னும் ஆவலை ஒவ்வொரு நிமிஷமும் உண்டாக்கிக் கொண்டு செல்கிறது.

* * *

"ஓரிரவு" நாடகத்தை நடித்தவர்கள் ஸ்ரீ.கே.ஆர். ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையினர். ஸ்ரீ.கே.ஆர். ராமசாமி சிறந்த ரஸிகர்; அதோடு சிறந்த நடிகர்; அதைக் காட்டிலும் சிறந்த கனவான். "பூம்பாவை" நாடகத்தில் சம்பந்தராக நடித்ததிலிருந்து அவருக்குத் தமிழ் சினிமாக்களில் அதிகமான கிராக்கி.

எனவே ஸ்ரீ.கே.ஆர். ராமசாமிக்கு இப்போது தம்முடைய நாடக சபையில் நடிக்க நேரமிருப்பதில்லை. எனினும் அவருடைய நாடக சபையில் பயிற்சி செய்யப்பட்டிருக்கும் நடிகர்கள் சிறந்த முறையில் நடிக்கிறார்கள். நாடக மேடை 'டெக்னிக்'கை நவீன முறையில் கையாண்டு பார்ப்பவர்களைத் திகைக்க அடிக்கிறார்கள்.

கதாநாயகியாக நடித்தவர் பெண்ணா, ஆணா என்பதைக் கடைசி வரையில் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. யாராயிருந்தாலும், திருடன் வந்த கட்டத்தில் அவருடைய நடிப்பு பலே பேஷ்!

கிருஷ்ணன் நாடக சபை சிறந்து முன்னேறித் தமிழ்நாட்டுக்கு நல்ல தொண்டு செய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

(கல்கி, டிசம்பர் 7, 1947)

சமீபத்தில் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட அமரர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பற்றி 1948ல் கல்கி எழுதிய கட்டுரை இது.

சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாகாணப் பிரதமரானபோது எல்லாரும் எத்தனையோ சந்தேகங்களுக்கு உள்ளானார்கள். "இவருக்கு இங்கிலீஷ் தெரியாதே? நிர்வாக அனுபவம் இல்லையே? இவர் எங்கே இராஜ்ய பாரம் செய்யப் போகிறார்? எத்தனை நாள் உத்தியோகம் பார்க்கப் போகிறார்?" என்று தலையை ஒரே அசைப்பாய் அசைத்தார்கள். அவர்களுடைய சந்தேகத்துக்கெல்லாம் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு ஓமந்தூர் ரெட்டியார் இராஜ்ய பாரம் செய்து வருகிறார். நன்றாகவும், திறமையாகவும் நிர்வாகம் நடத்தி வருகிறார். ஓமந்தூரரின் நிர்வாகத்துக்கு மலை போல வரும் அபாயங்கள் எல்லாம் பனிபோலப் பறந்து விடுகின்றன.


சென்னைச் சட்ட சபையில் ஸ்ரீ கோபால் ரெட்டியார் சென்ற வாரம் சமர்ப்பித்த சென்னை மாகாண பட்ஜெட்டைப் பார்க்கும்போது யாரும் மூக்கில் விரல் வைத்து அதிசயப்படாமல் இருக்க முடியாது.

பழைய மந்திரி சபையைப் போல் மீன மேஷம் பாராமல், தயங்காமல், தடுமாறாமல் சென்னை மாகாணம் முழுமைக்கும் மது விலக்கைக் கொண்டு வரப் போவதாகச் சென்ற வருஷம் கனம் ஓமந்தூர் ரெட்டியார் தெரியப்படுத்தினார். அந்தப்படியே வரப் போகிற அக்டோபரிலிருந்து சென்னை நகரம் உள்பட மாகாணம் முழுவதும் மதுவிலக்குச் செய்ய இந்த வருஷ பட்ஜெட்டில் திட்டம் போட்டிருக்கிறது. ஆக மொத்தம் மதுவிலக்குச் சட்டத்தினால் சென்னை மாகாணத்தின் வருமானத்தில் 18 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது!

அப்படியிருந்தும், சென்னை மாகாணத்தின் வரவு செலவுத் திட்டம் மிகவும் திருப்திகரமான நிலைமையில் இருந்து வருகிறது.

1948-49ல் சென்னை மாகாணத்தின்
உத்தேச வருமானம்
ரூ. 50 கோடி 32 லட்சம்
கையிருப்பிலிருந்து
ரூ 5 கோடி 62 லட்சம்
ஆக மொத்தம் வரவு
ரூ. 55 கோடி 94 லட்சம்
உத்தேசச் செலவு
ரூ. 55 கோடி 93 லட்சம்.

ஒரு பெரிய



இனத்தில் பதினெட்டுக் கோடி ரூபாய் வருமானம் நஷ்டமாகி விட்ட பிறகும் மாகாண சர்க்காரின் செல்வ நிலையில் ஒரு குறையும் ஏற்படவில்லை!

மது விலக்கினால் ஏற்படும் வருமான நஷ்டத்தோடு மதுவிலக்கை நிறைவேற்றவும் அதிகப்படி செலவு ஆகிறது.

1942-43ல் இம் மாகாணத்தில் கல்விக்காகச் செலவு செய்த தொகை மூன்று கோடி ரூபாய்.

1948-49ல் கல்விக்காகச் செலவு செய்யும் தொகை எட்டுக் கோடி ரூபாய்.

இப்படியாகப் பல பொது நலத் திட்டங்களுக்குக் கோடிக் கணக்காக அதிகப்பணம் செலவு செய்தும் மாகாண பொக்கிஷம் நல்ல நிலைமையில்தான் இருக்கிறது. எடுக்க எடுக்கக் குறையாத அட்சய பாத்திரம்போல் இருக்கிறது. இந்தியாவில் மற்ற எந்த மாகாணத்தையும் விடச் சென்னை மாகாணத்தின் பொருள் நிலைமை செழிப்பென்று சொல்லக் கூடும்.

வரப் போகும் வருஷத்தில் ஏற்கெனவே கையிருப்பிலுள்ள நிதியிலிருந்து ஐந்து

ஓமந்தூருக்கு ஜே!

கோடி சொச்சம் ரூபாய் எடுத்துக் கொண்டு தான் வரவு செலவைச் சரிக் கட்டுகிறார்கள். ஆனால் ஐம்பது கோடிவரவு செலவுக்கு ஐந்து கோடி 62 லட்சம் கையிருப்பிலிருந்து எடுப்பதில் தவறு ஒன்றுமில்லை. அட்வைஸரி கவர்ன்மெண்டு நடந்தபோது பின்னால் மதுவிலக்கு நடத்துவதற்கென்று சேர்த்து வைத்த கையிருப்புத்தான் இது. ஐந்து கோடி 62 லட்சம் ரூபாய் கட்டாயம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதும் நிச்சயமில்லை. சென்ற வருஷத்திலும் கையிருப்பிலிருந்து எடுத்துக் கொள்வதாகத் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால் எடுப்பதற்குப் பதிலாகக் கையிருப்பு நிதியில் மேலும் பணம் சேர்த்தார்கள். அந்தப்படியே ஒருவேளை, வருகிற வருஷத்திலும் நடைபெறலாம்.

மதுவிலக்கு மட்டுமல்லாமல் குதிரைப் பந்தயத்தையும் ஒழிக்கப் போகிறார்கள். அதிலும் வருமான நஷ்டம் வரப் போகிறது.

இப்படிச் சமூக வாழ்க்கையில் தூய்மைப் படுத்துவதற்காகப் பல செலவினங்களைக் கைவிட்டும், மக்களின் முன்னேற்றத்துக்கான பல புதிய செலவுகள் மேற்கொண்டும் சென்னை சர்க்காரின் பொக்கிஷம் நல்ல நிலைமையில் இருக்கிறது.

"மதுவிலக்குச் செய்தால் ஓட்டையாண்டியாகி விடுவார்கள்" "இன்ஸால்வெண்ட் கொடுத்து விடுவார்கள்"

என்றெல்லாம் துக்கிரிவாக்குச் சொன்னவர்களின் ஜோசியம் பலிக்கவில்லை.

ஆனாலும் மதுவிலக்குப் பிடியாதவர்கள் இன்னமும் குறை கூறுவார்கள். "அடாடா! கலால் வருமானம் பதினெட்டுக் கோடியும் இருந்தால் இன்னும் எவ்வளவோ பொது நன்மைக்குரிய காரியங்கள் செய்திருக்கலாமே!" என்பார்கள்.

உண்மையில், மதுவிலக்கைப் போல் அவ்வளவு சிறந்த பொது நன்மைக்கான காரியம் வேறு ஒன்றும் கிடையாது. பூரண மது விலக்கினால் குறைந்தது இருபது லட்சம் மக்கள் கொடிய அரக்கனின் வாயிலிருந்து மீட்கப் படுகிறார்கள். நான்கு லட்சம் வீடுகளில் மங்கள தீபம் ஏற்றி வைக்கப்படுகிறது. நாட்டைப் பிடித்த ஒரு பெரும் பீடை தொலைகிறது.

மதுவிலக்கினால் சர்க்கார் பதினெட்டுக் கோடி ரூபாய் நஷ்டம்



"ஆபீசுல புகார் புத்தகத்தை வெளிய வைக்காதீங்க!"

"எதுக்கு சார்?"

"இங்கு எவரும் ஒழுங்காக வேலை பார்ப்பது கிடையாது. அதனால் லஞ்சம் கொடுப்பது வேஸ்ட்' என்று எவனோ எழுதி வச்சுருக்கான்!"



"கற்பனை வளம் மிக்க தொண்டர்கள் தேவைன்னு தலைவர் அறிவிச்சுருக்காரே... ஏன்?"

"என்னென்ன காரணங்களுக்காக மத்திய அரசைக் கண்டிச்சு போராட லாம்னு ஐடியா குடுக்கணுமாம்!"

— அம்பை தேவா

அடைகிறார்கள் என்றால், சமூகத்தில் மிகவும் தீனர்களான மக்களின் கையில் ஐம்பது கோடி ரூபாய் மிஞ்சுகிறது என்று வைத்துக் கொள்ளலாம். இதைக் காட்டிலும் பொது நன்மைக்குரிய திட்டம் வேறு என்ன இருக்க முடியும்?

* * *


வரவு செலவுத் திட்டம் சட்டசபையில் விவாதிக்கப்படும்போது சர்க்கார் பேரில் அங்கத்தினருக்கு உள்ள குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்வது வழக்கம். சென்னைச் சட்டசபையிலும் சில அங்கத்தினர் பிரதம மந்திரியின் பேரில் புகார் கூறினார்கள். "சட்டசபைக்குப் பிரதமர் வருவதில்லை" "எம்.எல்.ஏ.க்களுக்குச் சட்டென்று பேட்டி கொடுப்பதில்லை!" – இவைதான் புகார்கள். மற்றப்படி "நிர்வாகம் ஊழல்" என்றோ, "பொதுப் பணம் விரயமாகிறது!" என்றோ, "காங்கிரஸ் திட்டத்தை நிறைவேற்றவில்லை" என்றோ யாரும் புகார் சொல்லவில்லை.

* * *

ஓமந்தூர் மந்திரி சபை நிலைத்திருக்குமா இராதா என்பது பற்றிச் சில காலமாக அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது! ஓமந்தூர் மந்திரி சபை நிலைத்திருந்தாலும் நிலைத்திராவிட்டாலும் இம் மாகாணத்தின் நிர்வாக சரித்திரத்தில் அதன் புகழ் நிலைத்து நிற்கும். சென்னை மாகாணம் முழுவதும் மதுவிலக்குக் கொண்டு வந்ததும் குதிரைப் பந்தயச் சூதாட்டத்தை ஒழித்ததும் லஞ்சத்தை ஒழிக்கப் பெரும் பிரயத்தனம் செய்ததும்– ஆகிய இந்த மூன்று கைங்கரியங்களினாலும் ஓமந்தூர் மந்திரி சபை சரித்திரத்தில் இடம் பெறும்.

(கல்கி, மார்ச் 7, 1948)

வைரம் ஜொலிக்கிறது
வாழ்க்கை இனிக்கிறது



"வழி காட்டும் வைரம்"

மங்கல மங்கையொருத்தி தவமிருந்தாள் மலை மீதிருக்கும் தன் கணவன் மனமிரங்கி வர வேண்டுமென்று. இதிலென்ன வியப்பு என்கிறீர்களா? மோனத்தவத்தில் மூழ்கியிருக்கும் அம்மங்கைதான் பல பேரை மூழ்காமல் காப்பாற்றியுள்ளாள். கலங்கரை விளக்கங்கள் ஏதுமில்லா அக்காலத்தில் கடலில் வழி தெரியாமல் மரணத்தை நோக்கி திக்காமல் போய்க் கொண்டிருந்த மாலுமிகளைக் கரை சேர்த்தது நிலவொளியில் நின்று ஒளி வீசும் அவள் மூக்குத்தி. அது மிகவும் பிரசித்தி பெற்ற கன்யாகுமரி அம்மனின் சிகப்புக்கல் மூக்குத்தி.

இதே போல் வாழ்வின் இன்னல்களை களையும் இன்னொரு மூக்குத்தியும் உள்ளது. அது ஸ்ரீராமின் சிறப்புப் பரிசான வைர மூக்குத்தி. திருமணம், வீடு கட்டுதல், பையனின் மேற்படிப்பு, எதிர்பாராது ஏற்பட்ட மருத்துவச் செலவு, பொருளாதார நெருக்கடி என்று எத்தனையோ சூ(சு)ழல்களிலிருந்து ஸ்ரீராம் நம்மை காப்பாற்றியுள்ளது. நீங்கள் பயன் பெற்ற வரலாற்றை பக்கத்திலிருப்பவர்களுக்கும் சொல்லுங்கள். அவர்களையும் ஸ்ரீராமின் சந்தோஷ சந்தாதாரர்களில் ஒருவராக மாற்றுங்கள். [illegible] முதல் வைர மூக்குத்தி வரை அதிர்ஷ்டப் பரிசுகள் உங்களுக்கும். நீங்கள் இணைக்கும் நபருக்கும் அவர் சேரும் சீட்டு மதிப்பிற்கேற்றபடி ஏராளமான பரிசுகள் காத்துள்ளன. பாரம்பரியமும், நம்பிக்கையும் ஒருங்கிணைந்ததோர் நிறுவனத்தில் நாமும் உறுப்பினர்கள் என்ற சந்தோஷம் கூடுதல் போனஸ். நாளைய நாளுக்கு இன்றே திட்டமிடுவோம்.

சந்தாதாரர் பரிசுகள்

1.	250x40	10,000	[illegible]
2.	500x30	15,000	[illegible] மூடியுடன்
3.	625x40	25,000	[illegible] மூடியுடன்
4.	500x60	30,000	[illegible] கண்டெய்னர்கள்
5.	1,000x50	50,000	நான்-ஸ்டிக் ஃப்ரைபான்
6.	2,500x30	75,000	செல்லோ கேசரோல் 2000 மி.லி.
7.	2,500x40	1,00,000	[illegible] பான் மூடியுடன்
8.	5,000x30	1,50,000	[illegible] 5 லிட்டர்
9.	5,000x40	2,00,000	[illegible] குக்கர்
10.	10,000x30	3,00,000	வெள்ளிக் குத்துவிளக்கு ஜோடி
11.	12,500x40	5,00,000	4 கிராம் தங்க நாணயம்

*[illegible] *முன் அறிவிப்பின்றி மாறுபடலாம்
தொடர்ந்து சீட்டில் சேரும் ஒவ்வொரு சந்தாதாரருக்கும் ஒரு சந்தாதாரர் பரிசு உண்டு.

ஸ்ரீராம்
சந்தாதாரர் சீட்டு விழா
பயனுள்ள 12 நாட்கள்
செப்டம்பர் 20 - அக்டோபர் 1 வரை

SHRIRAM CHITS
MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்

"சுப்ரமணியன் பில்டிங்", 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002. போன்: 8520700, 8520797, 8522651, 8523932, 8525536.

இழப்பற்ற, அதிக லாபம் தரும், என்றும் ஏற்புடைய முதலீட்டு முறை

மும்பை மசாலா

கதவு திறந்தது


வாழ்க்கையில், ஒரு கதவு சாத்திக் கொண்டால் மறு கதவு திறக்கும் என்பது, முன்னாள் அமைச்சர்களான கணேஷ் நாயக், சுரேஷ் நவாலே, குலாப்ராவ் கவாண்டே போன்றோருக்குக் கச்சிதமாகப் பொருந்தியிருக்கிறது. பாருங்களேன்... சிவசேனைக் கதவு மூடும் தருவாயில், காங்கிரஸ் கதவு படாரென்று திறந்திருக்கிறது! இவர்களுடன், கொத்தாக சில எம்.எல்.ஏக்களுக்கும், சரத்பவார் தமது 'பச்மார்கி'யில் பச்சைக் கொடி காட்டி விட்டாராம்! 'வலது காலை' எடுத்து வைக்க சுப முகூர்த்தம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம். ஆனால், இவர்கள் நுழைவால், எலெக்ஷன் டிக்கெட் விநியோகத்தில் குடுமிப்பிடி அதிகரித்து விடுமே என்ற எரிச்சலில், பல காங்கிரஸ்காரர்கள் இவர்களை வேண்டாத மருமகன்களாய்த் தாம் பாவிக்கிறார்களாம்! பவாரும் லேசில் முகூர்த்தத் தேதியைக் குறிக்க மாட்டார் போலிருக்கிறது; வெறுங்கையுடன் வரும் மருமகன் மீது யாருக்கு ஆசை இருக்கப் போகிறது? 18 மாதங்களுக்குப் பின், ஆட்சியையே பிடித்தாலும் கூட, காலியாகிவிட்ட கஜானாவை வைத்துக் கொண்டு, தாங்கள் என்னத்தை (காலி?) செய்வது என்ற கவலை அவருக்கு!

'காசில்லாத' பாராட்டு

காசு கொடுத்து சான்றிதழ்கள் பெறுவது சுலபம்! ஆனால் காசில்லாமலேயே, நாங்கள் சான்றிதழ் வாங்கியிருக்கிறோமே! "நாட்டில் மிக மோசமாக நிர்வாகிக்கப்படும் மாநிலம் மஹாராஷ்ட்ராதான்" என்று மும்பை ஹைகோர்ட்டின் சீஃப் ஜஸ்டிஸ் எம்.பி.ஷா சர்ட்டிஃபிகேட் கொடுக்குமளவுக்கு இங்கே பொருளாதாரச் சீர்கேடு! அதுவும் லல்லு போன்றவர்கள் இருக்கையில், இந்தப் பட்டத்துக்கு நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் எத்தனை போட்டி இருந்திருக்கும் என்பதை எண்ணினால், மராத்திய அரசின் சாதனை அசாத்தியமாகப் படுகிறது! நீதிபதி என்னவோ, ஹெல்த் மினிஸ்டர் தவுலத்ராவ் அஹேர், அவசரப்பட்டு நான்கு கோடியை வீணாக்கி, ஜெ.ஜெ. ஹாஸ்பிடலில், மூலையில் கிடந்து துருப்பிடிக்கவென்று CT ஸ்கான், MRI ஸ்கான் மெஷின்களை வாங்கியதைக் கண்டிக்கு முகமாகத்தான் இந்தப் பட்டத்தை வழங்கியிருக்கிறார். ஆனால் மராத்திய அரசு, செலவைப் பற்றிய கணிப்பே இல்லாமல், கனவுத் திட்டங்களை வாரி வழங்கி, அதை அமலாக்குவதில் அவசரப்பட்டு குதித்து, எக்கச்சக்கமாகக் கடன் வாங்கி விழி பிதுங்குவதைப் பார்த்தால், லல்லுவின் தாத்தாக்களே படை எடுத்தாலும்கூட, எங்களை வெல்ல முடியாது போலிருக்கிறதே?

சதம் சாதகமாயிருப்பாரா?

ஒரு இரண்டு மூன்று



நாட்களுக்கு, மும்பைக்காரர்களால் மருந்து மாயமில்லாத வாழ்க்கை வாழ முடிந்தது! ஊஹூம்... நோய் நொடி பறந்து விடவில்லை; மருந்துகள்தாம் மறைந்து விட்டன. இவற்றின் மீது 2% 'ஆக்ட்ராய்' வரியை மேயர் நந்து சதம் விதித்தாலும் விதித்தார்; எல்லா கெமிஸ்ட்டுகளும் ஆவேசமாகப் பொங்கி எழுந்து, எதிர்ப்புத் தெரிவித்து, நகரெங்கிலும் கதவடைப்புச் செய்து விட்டனர். மேயருடன் பேச்சுவார்த்தை நடத்தியதில், தாற்காலிகமாக மருந்துக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள். ஒரு வாரத்துக்குள் மேயர் சதம் சாதகமாக முடிவெடுத்தால், நோயாளிகளுக்கு இதம்! இல்லாவிட்டால் வதம்!

தால்வியின் தாகம்

கோட்ஸே இனத்தின் மீது பிரதீப்



• ஷோபா டே

தால்வியின் பிரேமை குறைந்ததாகத் தெரியவில்லை. 'மீ நாதுராம் கோட்ஸே போல்தோய்' எழுப்பிய கலாட்டாவின் புழுதி அடங்கவில்லை; அதற்குள் அடுத்த கலாட்டாவுக்கு வித்திட்டிருக்கிறார். இந்திராகாந்தி, பால் தாக்கரே ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நாடகங்களை எழுதியுள்ளார். தசரா அன்று, தாக்கரே நாடகத்தை அரங்கேற்றப் போகிறாராம்! முதலில் தாக்கரே தன்னைப் பற்றிய பிரகடனத்தை வரவேற்கவில்லை என்றாலும், சிவசேனை இயக்கத்தின் வரலாறும் அதனுடன் பின்னிப் பிணைந் திருப்பதால், ஓ.கே சொல்லி விட்டாராம்! கதாநாயகனுக்கான தேர்வு நடந்து கொண்டிருக்கிறது. இளம் பிராயத்தில் ஆரம்பித்து, கார்டூனிஸ்டாகி, எழுத்தாளராகி, சிவசேனை இயக்கத்தைத் தோற்றுவித்து, அதன் தலைவரான கதையை நாடகமாக்கியிருக்கிறார் தால்வி. ஆனால், சிவசேனை ஆட்சியைப் பிடித்ததுடன் கதையை முடித்து விட்டாராமே! அப்புறம்தானே 'ரிமோட் கண்ட்ரோல்' வேலை செய்யவே ஆரம்பிக்கிறது?

டேயின் புதிய புரட்சி!

டே'ஸ் டேஸ்...

வாழ்க்கை வரலாறு விஷயத்தில் லேட்டஸ்ட் அட்ராக்ஷன், ஷோபா டேயின் "Selective memories; stories from my life"தான்! 250 ரூ விலையுள்ள இந்தப் புத்தகத்தின் விற்பனை, பிய்த்து உதறுகிறதாம் – இரண்டு நாளில் (ஒரே கடையில்) 50 காப்பிகள்! மாடலாக, காலம்னிஸ்டாக, எடிட்டராக, நாவலிஸ்டாக, டி.வி.ஸ்க்ரிப்ட் ரைட்டராக, மனைவியாக, தாயாக பல்வேறு ரோல்களில் வெற்றி பெற்றிருக்கும் ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ளும் தாகம், யாருக்கு இருக்காது? இவர் வாழ்வில் சந்தித்த பிரபலங்களைத் தயக்கமில்லாமல் விளாசியிருக்கிறாராம். (கஜோலுக்கும் ஷாருக்கானுக்கும் செமை உதையாம்!) பாராட்டிலும் கஞ்சத்தனமில்லையாம். (ஆமீர்கானுக்கு ஒரே புகழ்ச்சியாம்) ஆனால், மோகன் தீப் போன்ற பத்திரிகையாளர்களுக்கு, "ஷோபா தன் சொந்த வாழ்க்கையைப் பற்றியும் ஒளிவு மறைவின்றி எழுதியிருப்பாரா? தன் கணவனை குடிகாரன், மனைவியை அடிப்பவன் என்றெல்லாம் விமர்சித்து, அவனுடனேயே குடித்தனம் நடத்தும் மராத்தி கவி கம் எழுத்தாளரான மல்லிகா ஓமர் ஷேக் போல, இவரும் தன் கணவர்களான கலாசந்த், டே போன்றோரை உண்மையாக சித்திரித்திருப்பாரா?" என்று ஏக கவலை! 'அரசியல்வாதிகளும், சினிமாக்காரர்களும் எழுதும் வாழ்க்கை வரலாறுகள் பூசுற்றலாயிருக்கும்; எழுத்தாளர்கள் உண்மையானவர்களாய் இருப்பார்கள்' என்று நம்பிக் கொண்டிருக்கிறார். புத்தகத்தை இவர் படித்த பிறகு, வேறு ஏதாவது "உண்மைகளை" வெளியிடக் காத்திருக்கிறாரோ என்னவோ? என்ன இருந்தாலும் மீனா குமாரியின் வாழ்க்கை வரலாறை மஞ்சள் தடவிய பேனாவால் எழுதியவராயிற்றே? ●

— ஜெயஸ்ரீ ராஜ்

பா. ராகவன்

"கொலையா?" என்று அலறிய அடைக்கலராஜ், "சரி, நீயே பண்ணிடு. நான் வரட்டா?" என்று கையைப் பிடித்துக் குலுக்கி விட்டுக் கிளம்பப் பார்த்தான்.

"ஊர்மிளாவுக்காக நான் செய்ய மாட்டனான்னு கேட்டியே ராஜு?"

"அது சும்மா உளுளுவாகட்டிக்கு. நான் அப்பவே நினைச்சேன். இது ஏதோ வேண்டாத சகவாசம்னு. இப்பவும் ஒண்ணும் கெடலை. விழுந்துக் கும்பிட்டு, போய் வா பரதேவதையேன்னு அனுப்பிச்சிரு. வேற ஆள் பார்த்துக்கலாம். இல்லையா? நானே ஸ்திரீ பார்ட் போடறேன்... யாரைக் கொல்லணுமாம்? வெவகாரம் புடிச்ச பொண்ணுப்பா."

"உன் ரவுசு தாங்கலையாம். தீத்துர முடியுமான்னு கேட்டாள். போடா...! பூடா அந்தப் பொண்ணு! என்னவோ சிக்கல். நாலு நாள் வெளில தங்கணுமாம். ரெண்டாவது மனுஷனுக்குத் தெரியாம எங்க ஓட்டல்ல ரூம் போடச் சொன்னா."

"பாவி, பயமுறுத்திட்டியேடா. வேணும்னா என் குடில்ல தங்கலாமே?" என்றான் மூர்த்தி.

"விளையாடறியா? ஒரு கொசு கடிச்சதுன்னா அவங்கப்பன் உன்னை சுப்ரீம் கோர்ட் வரைக்கும் இழுத்துருவான். மோர் ஓவர் அவன் பூச்சாண்டியோடவெல்லாம் குடியிருந்து பழக்கமில்லாதவள்."

"ஸோ? உங்க ஓட்டல்?"

"எஸ்."

"ஹூம்!" என்று ஆவி பறக்கப் பெருமூச்சு விட்டான் அடைக்கலராஜ்.

"நம்ம டிராமா உண்டு இல்லை?"

"ஏன் கேக்கற?"

"இல்லை, நீ வேற ஏதாவது திரைக்கதை எழுதிடப் போறியோன்னு..."

"சீ போடா!" என்று போலி நாணமுடன் விடை பெற்றுப் போனான் கருப்பண்ணசாமி.

வாழ்க்கையில் முதல் முதலாக ஒரு பெண்ணுக்கு உதவ அவன் அருளப் பட்டிருக்கிறான். அழகான, பூனைக்குட்டி



போன்ற ஒரு சின்னப் பெண். போயும் போயும் தன்னிடம் உதவி கேட்க எப்படித் தீர்மானித்தாள்? வீசி அடிக்கக் கோடி பணம். ஏவி விட்டால் செய்து முடிக்க எத்தனையோ படை. ஏன்?

"ஏன்? எனக்கே தெரியலை. நீ கொஞ்சம் யோக்கியமானவன்னு உன் மூஞ்சி சொல்லுது. இந்த ஜில்பா கூந்தல் லென்த்தைக் கொஞ்சம் குறைச்சுட்டால் ஒட்டிட்டிருக்கற ரவுடி களை கொஞ்சம் போயிடும்" என்றாள் ஊர்மிளா.

"செஞ்சுட்டால் போறது! இந்த ரூம் ஓகேவா? சாதாரணமா பல சரக்கு அடுக்கற இடம். உங்க விஷயம் சொன்னதும் புல்லரிச்சுப் போயி எங்க ஜி.எம். தானே குனிஞ்சு பெருக்கி சுத்தம் பண்ணிக் கொடுத்தார். ஏஸிக்கு பதிலா ஏர்கூலர். போனுக்கு



பதிலா இந்த காலிங்பெல். மனுநீதி சோழன் ஆராய்ச்சி மணிக்கு ஆர்டர் கொடுத்தப்பதான் இதையும் ஃபிக்ஸ் பண்ணினது. பார்த்து அழுத்துங்க. ஷாக் அடிக்கற கெட்ட வழக்கம் இருக்கும். ப்ச்! உங்க வசதிக்கு இந்த ஓட்டலையே விலைக்கு வாங்கிரலாம்."

"நல்ல ரூம்ல தங்கலாம் கேபிஎஸ். பட், யாருக்கும் நான் இங்க இருக்கறதுகூடத் தெரிய வேண்டாம்னுதான்."

"சத்தியமா தெரியப் போறது இல்லை. ஜி.எம்.கிட்டக் கூட புருடாதான் விட்டிருக்கேன். எனக்குத் தோன்றிய ஏதோ ஒரு காரணம். ஆனால், நானாச்சும் தெரிஞ்சுக்கலாமில்லையா?"

"ஓ யெஸ்" என்றவள், கொஞ்ச நேரம் ஏர்கூலரை ஓர் ஆராய்ச்சியாளினி போல உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். கவியும் சோகம். கண்ணீர்த் துளிகள். ஐயோ ஊர்மிளா, உணர்ச்சி வசப்படுவது உடம்புக்கு ஆகாதே?

"என் அப்பா பல பிரச்னைகளில் மாட்டிட்டிருக்கார். ஐ.டி., ஃபெரா, என்ஃபோர்ஸ்மென்ட்காரங்க எல்லாரும் முறை வெச்சிட்டு இந்த வாரம் ரெய்டுக்கு வரப் போறதா ரகசியத் தகவல் கிடைச்சுது. அவர் ஒண்ணும் உலக உத்தமர் இல்லைன்னு தெரியும்தானே? அவருடைய மத்த மூணு குடும்பங்கள் பத்திப் பிரச்னை இல்லை. அங்க வயசு வந்த பையன்கள் இருக்காங்க. ஆனால், என் வீட்டுல நானும் அம்மாவும்தான். அம்மா இறந்ததும் ஒரு நபர் கமிஷன் மாதிரி என் ஒருத்திக்குப் பத்து கிரவுண்ட் வீடு! நிறைய முன்னேற்பாடுகள் பண்ணிட்டார்தான். இருந்தாலும் கணிசமா இழக்க வேண்டி வரும்னு நம்பறார். என் வீடு எனக்கு மிஞ்சணும்னு அதை மட்டும் தாற்காலிகமா ஓர் ஆளுக்கு வித்திருக்கார். ஐ மீன்... புரியுதில்லையா?"

"ஓ யெஸ். உலக மாயை எல்லாமே புரியுது."

"அதான். விசாரணை கலாட்டா அடங்கறவரை ஊர்மிளான்னு ஒரு ஜென்மமே இந்த பூமியில் இல்லைங்கற மாதிரி..."

"சே, என்ன ஒரு கஷ்டம்!"

"மனக் கஷ்டம் மட்டும்தான் கேபிஎஸ். என் எதிர்காலம் என்ன? அப்பா என்னளவில் நல்லவர்தான். ஆனால் அவர் காலத்துக்கப்புறம்? எனக்கு பாலிடிக்ஸில் ஆர்வம் இல்லை. சாதாரண பொண்ணா இருந்தால் போதும். மூணு வேளை சாப்பாடு. பொழுது விடியப் போறதேன்னு கவலைப்படாத அளவு கையில் கொஞ்சம் பணம். சின்னதா ஒரு உத்தியோகம். நாலு நண்பர்கள். ஜாலியா அரட்டை, சினிமா, டிராமா..."

"மேக் அப், ரிகர்ஸல், ஸ்டேஜ், ஆடியன்ஸ்..."

"ஷ்யூர். உண்மையில் எனக்குக் கலையார்வமெல்லாம் பிரமாதமா இல்லை தெரியுமா? ஏதாவது ஒரு வகைல நாலு பேர் சூழ இருக்கணும். தனிமை பயங்கரமா இருக்கு கேபிஎஸ். அதை எப்படியாவது பழி வாங்கிடணும்னு ஒரு வெறி. இதை எப்படி உங்களுக்குப் புரிய வைப்பேன்?"

"ஐ கன் அன்டர்ஸ்டாண்ட். ஆனா, எப்பவும் நாலு பேர் உங்களைச் சுற்றி இருக்காங்களே- கிங்கரர்கள்? அவங்க கணக்குல சேர மாட்டாங்களா? ஒண்ணு தெரியுமா? அவங்களை ஒருதரம் பார்த்துட்டால் எனக்கு நைட் தூக்கம் வர மாட்டேங்குது. துரத்தி வர்ற எதிரி தேசத்துப் படை மாதிரி ஒரு இது."

"அவங்களுக்கெல்லாம் கட்டாய ஓய்வு கொடுத்து அனுப்பிட்டேன்."

"உத்தமம். ரிகர்ஸலுக்கு எப்படி வரதா ஐடியா?"

"இதோ பார்தா."

"பிரமாதம். நான் வரட்டா?"



"டைரக்டர் ஸார், இந்த சீன்ல நான் என்ன ஆடணும்! டிஸ்கோவா? பிரேக் டான்ஸா? குச்சுப்புடியா?"

"அதெல்லாம் அவுட் ஆஃப் பாஷன்! சிவசங்கர் பாபா டான்ஸ் ஆடிடுங்க!"

— உ. ராஜாஜி

அவன் கதவருகே சென்றபோது ஊர்மிளா கூப்பிட்டாள், கொஞ்சம் தயங்கி.

"கேபினெஸ், ஒண்ணு கேட்டால் தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?"

"சேச்சே!"

"நீங்க எம்.ஏ. லிட்ரச்சர்னுதானே சொன்னீங்க?"

"வான்ட் டு ஸீ மை சர்டிஃபிகேட்ஸ்?"

"தேவையில்லை. நான் கேட்க வந்தது வேறு. எப்படி உறுத்தல் இல்லாமல் இந்த வேலையில்..."

"உறுத்தல், வேலையில் இல்லை. விதியை நினைச்சு எப்பவாச்சும் பத்து நிமிஷம் கவலைப்படறதோட சரி. ஆனால் அதிகம் அலட்டிக்கிட்டா காலக்ரமத்தில் ஏதாவது பிரச்னை வரும். நான் ஒரு ப்ளே ரைட் ஆர்டிஸ்ட்! இந்த உணர்வு என்னை உற்சாகமா வெச்சிருக்கு. போதுமே? ஐ கன் ஸர்வைவ்! பெரிய எதிர்பார்ப்பு ஏதும் இல்லாதவரை யாரும் எப்படியும் வாழ்ந்துடலாம்."

"ஐ லைக் யூ."

"தேங்ஸ். வரவா?"

"**நா**யப் பொழைப்புங்க!" என்றான் தட்சிணாமூர்த்தி. அடைக்கலராஜ் வீட்டு மொட்டை மாடியில் சக நடிகர்களுக்காகக் காத்திருந்தான். முதல் முதலில் தலையோடு கால் மூடி ஓர் உருவம் படியேறி வருவது பார்த்து மிரண்டு அலறியவன், அது ஊர்மிளா என்று தெரிந்ததும் "நம்ம நாடகத்துல இப்படி ஒரு சீன் இல்லையே?" என்றான் குழப்பமுடன்.

"யாரும் இன்னும் வரலையா மூர்த்தி?"

"ம்ஹூம்! எனக்கென்னவோ நாம கவுஹாத்தி போவோம்னு நம்பிக்கையே இல்லைங்க. இந்த ராஜு பிடிச்சிட்டு வந்த ஆளுங்கல்ல நாலு பேர் கன்யாகுமரில ஏதோ கட்சி மாநாடுன்னு லாரி ஏறிப் போயிட்டானுங்க. மிச்சம் ரெண்டு பேர்ல ஒருத்தன், கொழுந்தியா தவறிட்டதா சொல்லி, கல்லிடைக்குறிச்சி வரை பொடி நடையா போயிருக்கான். பத்து நாள் இருந்து ஆவியைக் கடைத்தேற்றிட்டுத்தான் வருவான்போல. இப்போதைக்கு நான் உண்டு... நீங்க உண்டு இல்லை?"

"வரேன் மூர்த்தி."

"புண்ணியமா போவட்டும். ஏழைக் கலைஞர்களைக் கவுத்துராதீங்க."

"நீங்க என்ன பண்ணிட்டிருக்கீங்க?"

"வெக்கக்கேடுங்க! நான் டெல்லி ஸ்கூல் ஆஃப் டிராமா ஸ்டூடண்ட். பெரிய டைரக்டர்னு பேரு அப்ப! இப்ப ஒரு காண்டம்



"தலைவர் பொது வாழ்க்கைக்கு வந்து பத்து வருசம்தானே ஆகுது... எப்படி வெள்ளி விழா கொண்டாடுறார்?"

"சின்ன வயசுல வீட்டை விட்டு துரத்தப்பட்டதிலேருந்து கணக்கு எடுத்துக்கிட்டார் போல!"

— அம்பை தேவா

ஃபாக்டரில வாட்ச்மன்."

"உங்களை இயலிசை மன்ற சேர்மன் ஆக்கிடவா? தனிப்பட்ட முறைல எங்கப்பா சொன்னா சி.எம். கேட்பார். நாற்பதாண்டுக் கால நட்பு."

"ஐயோ, அதெல்லாம் வேணாங்க. எனக்குக் குழாயடிக்கத் தெரியாது."

"அவன் கெடக்கறான். என்னை கவனிங்க சிஸ்டர்" என்று இரு கரம் விரித்தபடி ஓடி வந்தான் அடைக்கலராஜ்.

"வயசுக் காலத்துல படிப்பை வுட்டுட்டு நாடகப் பைத்தியம் பிடிச்சித் திரிஞ்சேன். பிட் ரோல்ல ஆரம்பிச்சு ஹீரோ வரைக்கும் வளர்ந்தேன். ஆனா கலை சோறு போடலை சிஸ்டர். நவீன நாடகம் போட்டு இந்த மூர்த்தி நாசமா போனதைத் தவிர வேறென்ன சாதிச்சான் கேளுங்க..."

"சரித்திரத்துல என் பெயர் இருக்கும்டா" என்றான் மூர்த்தி.

"இப்பல்லாம் சரித்திரப் புஸ்தகத்தை பழைய பேப்பர்காரன் கூடத் தொடறதில்லையாம். அவனை விடுங்க சிஸ்டர். ஏதாவது நல்லது செய்யறதுன்னா எனக்கு செய்யுங்க."

ஊர்மிளா சிரித்தாள்.

"உங்களையெல்லாம் பிரமாதமான, அர்ப்பணிப்பு உணர்வுள்ள கலைஞர்கள்னு

> மகத்தான செயல்கள் அனைத்தும் முதலில் 'முடியும்' என்ற நம்பிக்கையில் தொடங்கப் பட்டவையே!
> – எமிலிகல்
> தகவல்: அனிதாபிரியன்

கேபிஎஸ் சொன்னார்."

"'வேளை தவறாம மோர் சாதம் கிடைச்சுட்டா ல் அர்ப்பணிக்கறதுல பிரச்னை இல்லை" என்றான் அடைக்கலராஜ்.

ஒருகணம் அவனை உற்றுப் பார்த்தவள், "மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு" என்றாள்.

நள்ளிரவு என்றோ, நடு நிசி என்றோ, நிலா ஊர்வல நேரம் என்றோ சொல்லலாம். விண்முட்டும் நட்சத்திர மாளிகையின் உப்பரிகையில் தன் ஓலை வேய்ந்த குடிசையில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் கருப்பண்ணசாமி. பிரமாதமான கனவு. லொகேஷன் குவாஹாத்தி. தேயிலைத் தோட்டச் சரிவுகளின் நடுவே ரிப்பன் போலச் சென்ற செம்மண் பாதையில் நடந்து கொண்டிருந்தான். உடன், வேறு யார்? ஊர்மிளா.

செவியில் துளித் துளியாய்ச் சொட்டும் பனி நீர்ச் சொற்கள். "ஐ லைக் யூ"

"ஊர்மிளா, நாம் கல்யாணம் பண்ணிக்கலாமா? இங்கே டீ இலை பறிக்கற வேலைக்கு நிறைய ஆள் வேண்டியிருக்காம். பருவா வீட்டுப் பின்பக்கம் ஒரு ரூம் இருக்கு. கேட்டால் வாடகைக்கு சகாயமா தருவார்."

அவள் பேசவில்லை. முகத்தில் அலையடித்த புன்னகைத் தோரணம். நடக்கிற லாகவத்தில் தன் மேல் படாமல் பட்டு விலகும் அவளது தளிர்க்கரம்.

"ஏற்கெனவே குளிர் அதிகம்!"

"ஓ!" என்று பிரமாதமாக நாணப்பட்டாள். உடனே கை கோத்துக் கொண்டாள்.

"ஹுர்ரே!" என்று அவன் உரக்கக் குரலெடுத்துக் கூவியபோது,

"எழுந்திருடா பேய்! உன்னைத் தேடி யாரோ ஒரு லேடி வந்திருக்காங்க" என்று சக உழைப்பாளி ஒருவனின் குரல் கேட்டது.

அலறி எழுந்தவன், வெளியே வந்தபோது அதே ஊர்மிளா!

"கே.பி.எஸ், என் அப்பாவை அரெஸ்ட் பண்ணிருக்காங்க."

"ஐயோ, எப்ப?"

"இன்னிக்கு நைட்தான். பதினோரு மணிக்கு போன் பண்ணேன். விஷயம் தெரிஞ்சுது."

"ஸாரி... நான்...."

"நாளைக்கு பெயில்ல வந்துடுவார். அது பெரிய விஷயமில்லை. ஒரு முக்கிய வேலையா என்னை டெல்லி போகச் சொல்லியிருக்கார்."

"எப்ப?"

"இப்பவே. விடிந்ததும் ஃப்ளைட்."

நாடகம் பற்றிக் கேட்பது அசந்தர்ப்பமாக இருக்கும் என்று நினைத்தவன், "எப்ப வருவீங்க?"

"தெரியலை. நான் நேரா குவாஹாத்தி வந்துடறேனே? டயலாக்ஸ் மனப்பாடம் ஆயாச்சு."

அவனுக்கு மகா குழப்பமாக இருந்தது. இந்தச் சமயத்தில், தான் செய்யக் கூடியதோ, கேட்கக் கூடியதோ ஏதுமில்லை என்று தோன்றியது.

"பத்தாம் தேதி அங்க ப்ரோக்ராம்" என்றான் மெதுவாக.

"கட்டாயம் வந்துடுவேன். நீங்க நம்பலாம்."

"எனக்கு நம்பிக்கை இருக்கு ஊர்மிளா. மத்தவங்க ரகளை பண்ணிடுவாங்க. ஓகே, நான் பார்த்துக்கறேன். இந்த சமயத்துல உங்களுக்கு உதவியா ஏதாவது நான் செய்ய முடியுமா?"

பளிச்சென்று அவள் கண்கள் விரிந்தன. கையிலிருந்த இரண்டு கவர்களை அவனிடம் நீட்டி, "இதை மறக்காம போஸ்ட் பண்ணிடறீங்களா?"

"ஷ்யூர். மர்மக் கடிதம் ஏதாவதா?"

"அப்படித்தான்."

"நான் பிரிச்சுப் பார்க்க மாட்டேன்."

"தாங்ஸ். பத்தாம் தேதி சந்திப்போம்."

போய் விட்டாள்!

மறுநாள் நண்பர்களைப் பார்த்து விஷயத்தை எப்படிச் சொல்வது, எங்கிருந்து ஆரம்பிப்பது என்று யோசித்தபடியே அடைக்கலராஜின் வீட்டை அடைந்தபோது, அவன் வீட்டு வாசலில் ஒரு பாத்தி கட்டி சாமான் செட்டுகள் குவிந் திருந்தன. உள்ளிருந்து ஒரு தகர டப்பா பறந்து வந்து வெளியே விழ, நிராதரவாக அதைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த அடைக்கலராஜ், கருப்பண்ணசாமி அருகே வந்ததும் "அவ்ளோதான். வாடகை பாக்கி எகிறிடிச்சி. வீட்டுக்காரன் தொரத்திட்டிருக்கான். நம்முது வீதி நாடகம்தானே? இனி கொஞ்ச நாள் பிளாட்பாரத்துல ரிகர்சல் வெச்சுப்போம்" என்றான்.

(தொடரும்)

உதவி

ரிஷபன்

சந்திரன் வந்தபோது, புவனா மட்டும் தான் வீட்டில் இருந்தாள்.

"வாங்க. வனஜா நல்லா இருக்கா..."

கதவைத் திறந்தபடி புவனா விசாரித்தாள். சந்திரன் தலையசைத்ததை அவள் கவனித்திருக்க வாய்ப்பில்லை. உபசரணைக் கேள்வி.

"அண்ணன் இல்லியா..." என்றான் தயக்கமாய்.

நேற்று பதின்மூன்று ரூபாய் முப்பது காசு செலவழித்து ஃபோனில் பேசியிருந்தான்.

'அண்ணே... ஒரு முக்கியமான விஷயம். நேர்ல பேசணும். நாளைக்கு வரட்டுமா...'

'எதுக்குடா அலைச்சல். என்ன விவரம்... சொல்லேன்...'

'நேர்லயே வரேனே...'

வரச் சொல்லி சம்மதம் தரப்பட்டது.

"வந்திருவாரு. நீங்க வருவீங்கன்னு சொன்னாரு. ரொம்ப முக்கியமான விஷயம். அவரு நேர்ல போனாத்தான் முடியும்... அதான் போயிருக்காரு..."

சந்திரன் நீட்டிய மஞ்சள் துணிக் கடைப் பையில் ஒரு டஜன் வாழைப் பழங்களும், சற்றே வாடிய பூச்சரமும் இருந்தன.

புவனா பிரித்துக்கூடப் பார்க்கவில்லை. மேஜை மீது வைத்து விட்டாள்.

"அருண் எப்ப ஸ்கூல்லேர்ந்து வருவான்..."

"நாலரை ஆவும்..."

என்ன விலக்கினாலும் மீண்டும் வந்து படிகிற பாசிக் குளம் போல மௌனம் மறுபடி வந்து கவிழ்ந்தது.

காலையில் கிளம்பியது. நடுவில் ஒரு கப்காபி மட்டும். பசி இரண்டாம் பட்சம். இன்றைய நிலையில் தேவை ஒரு உதவிக் கரம். ஒரு அன்னியனை விட அண்ணன் ரத்த சம்பந்தம் உள்ளவன். சதை ஆடும். துடிப்பு புரியும்.

"பிசினஸ் எப்படி... நல்லா போவுதா..."

புவனாவின் குரல் அவனைக் கிழித்தது போல உணர்ந்தான்.

"ம்..."

"வனஜாவுக்குப் புதுசா எதுவும் செஞ்சிங்களா..."

இருந்த நகைகளை எல்லாம் அழித்தாகி விட்டது. கவரிங் போட மனசில்லாமல். மூளிக் கழுத்தாய் வெளியே வராமல் வனஜா என்றொரு பெண்மணி வீட்டோடு முடங்கிக் கிடக்கிறாள்.

"ம்..." என்றான் தவிப்பாய்.

"பாருங்க. உங்க அண்ணனும் இருக்காரு. எப்ப கேட்டாலும்... இப்ப எதுக்கு... ரொடேஷனுக்கு வேணும்... கவலைப்படாதே... ரெட்டிப்பா செய்யறேன்னு மழுப்பறாரு..." என்றாள்.

தண்ணீராவது குடிக்கலாம். கேட்க ஏனோ கூச்சமாய் இருந்தது.


ஆறு வருஷங்களுக்கு முன் சேர்ந்து இருந்த குடும்பங்கள். புவனா கொழுந்தன் முன்பு தலை குனிந்து நடந்த காலம். விதி விளையாடி இருக்க வேண்டும். புது மனைவியின் புடவையைத் தவறுதலாய் புவனா தன் துணிகளோடு மடித்து வைத்து விட, வார்த்தை தவறினான்.

'அடுத்தவங்க துணிக்கும் நம்மளதுக்கும் வித்தியாசம் தெரியாதா... உங்களுக்கு!'

பெண்கள் விவகாரம். தலையிட்டிருக்கவே வேண்டாம். 'காணோம்' என்று பதறியவளின் முன் வீரம் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம்.

புவனா கூடத்தில் புடவையை வீசினாள். வனஜா அழ, சந்திரன் கையிலிருந்த சொம்புத் தண்ணீர் புவனா மேல் வீசப்பட்டது.

எல்லாம் முடிந்து விட்டது. எல்லைகள் குறிக்கப்பட்டு விலகிக் கொண்டார்கள். இரண்டு வருஷங்கள் போக்குவரத்தே இல்லை. மூன்றாவது வருஷம் தாயின்



மரணம் நேருக்கு நேர் பார்க்க வைத்தது.

அடி மனத்தில் பீரிட்ட நிஜ துக்கம். இழப்பு. ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லி தேற்றிக் கொண்டு அண்ணன் கேட்காமலே இறுதிச் செலவுகளில் தாராள மாய்ப் பங்கேற்று விலகி இருந்ததை தகர்த்தா யிற்று.

அடிக்கடி ஃபோனில் பேசிக் கொண் டார்கள். தோட்டத்து மாம்பழம் கூடையில் அனுப்பினான்.

ஆனால் இன்றைய நிலைமை தலை கீழ். வேஷம் கலைந்து விட்டது. கடன் கொடுத் தவர்கள் நெருக்க ஆரம்பித்து விட்டார்கள். இனி மேலும் சமாளிக்க முடியாது.

“**சா**ப்பிடறீங்களா...”

புவனாவின் குரல் மீண்டும் கிழித்தது.

‘சாப்பிட வாங்க’ என்று சொல்லியிருந் தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.’

“அண்ணன் வந்திரட்டுமே...”

“லேட்டாவும். அவரு டிபன் சாப்பிட்டு போயிட்டாரு.”

“சரி...”

தம்ளர் தண்ணீர் வைத்த அதிர்வில் தளும்பி ஒரு திவலை அவன் மீது பட்டுத் தெறித்தது.

“கறி தீர்ந்து போச்சு... அப்பளம் வாட்டிரவா...”

“வேணாம்... இதுவே நல்லா இருக்கு...”

விழுங்கினான். கை கழுவிக் கொண்டு வந்தபோது சற்று அவமானமாய் உணர்ந் தான்.

புவனாவும் எதிரில் அமர்ந்தாள்.

“என்ன விஷயம். என்கிட்டே சொல்ல லாம்ல... இல்லே... அவருகிட்டேதான் பேசணுமா...”

சந்திரன் தடுமாறினான். எந்த பதிலும் அவனைக் கவிழ்த்து விடும்.

“அப்படி ஒண்ணும் இல்லே...”

“அவரு போன எடம் அப்படி... ஒரு வேளை ரொம்ப லேட்டாயிருச்சுன்னா... என்ன செய்யிறதுன்னு நீயே விசாரிச்சு அனுப்பிறேன்னாரு... அதுக்காகத்தான் கேட் கறேன்...”

நிதானமான, தீர்மானிக்கப்பட்ட அசை வுகள். எதிராளியை சிந்திக்க விடாமல் திறன் காட்டுகிற சாமர்த்தியம்.

சந்திரனுக்கு வேறு வழி தோன்றவில்லை.

“வந்து - பிசினஸ்ல கொஞ்சம் பண முடை. அண்ணன் கொஞ்சம் கடனாக் கொடுத்தா... இல்லே... ஒரு வார்த்தை வந்து



''பத்தடி நடந்தாலே மூச்சு வாங்குது டாக்டர்! என்ன செய்ய?''

''ஒன்பதடிக்குப் பிறகு 9அ... 9ஆ... 9இ... 9ஈன்னு சொல்லிக்கிட்டே நடங்க!''

— உ. ராஜாஜி

சொன்னாக்கூட நெருக்கடி இருக்காது... சமாளிச்சுக்குவேன்...''

இந்த நிலைமை தனக்கே கூட இன்னொரு தடவை வரக் கூடாது என்று உள் மனசுள் நினைப்பு ஓடியது.

புவனா இருமினாள். பின்பு சிரித்தாள்.

''சொன்னா நம்ப மாட்டீங்க... உங்க அண்ணனே இப்ப சங்கடத்துலேதான் இருக்காரு. இப்ப போயிருக்கிறதும் இந்த மாதிரி உதவி கேட்டுத்தான்...''

புவனாவுக்கு ஆஸ்கார் விருது தரலாம் என்று தோன்றியது. வெகு இயல்பாய் அவள் சொல்லிய விதம் சட்டைப் பையில் கை விட்டு இருக்கிற சில்லறைகளை எண்ணி வைக்கலாம் போலிருந்தது.

''நல்ல நேரம்... அவரு வீட்டுல இல்லாம வெளியே போனது... எதுக்காக வரான்னு புரியலியேன்னு புலம்பிகிட்டிருந்தாரு. நான்தான் சொன்னேன். நான் பார்த்துக்கிறேன்... நீங்க போங்கன்னு... நமக்கு உதவி செய்யறேன்னு ஒருத்தர் சொல்றப்ப... அதைத் தட்டிக் கழிச்சுட்டு... தம்பி வரான்.. அண்ணன் வரான்னு வீட்டுல கிடக்க முடியுமா... சொல்லுங்க...''

சந்திரனுக்கு வாய் உலர்ந்து போனது. திகைப்புடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''முன்னே மாதிரி இல்லே. இப்பல்லாம் சின்ன விஷயத்துக்கு டென்ஷன் ஆவுறாரு.. இப்ப... அவர் இருந்தா... துடிச்சுப் போயிருப்பாரு... அடடா... அவன் கேட்கறப்ப என்னால எதுவும் செய்ய முடியலியே... பாவி ஆயிட்டேனேன்னு புலம்புவாரு...''

புவனா சரளமாய் பேசிக் கொண்டு போனாள்.

''வந்து... நான்...''

''தப்பா நினைக்காதீங்க... ஏதோ கெட்டதுலயும் நல்லது... அவரை நேர்ல நீங்க பார்க்காதது - உங்களால வேற வழியில சமாளிக்க முடியுதான்னு பாருங்க. நானும் நீங்க சும்மா பார்க்க வந்ததா சமாளிச்சுர்றேன்... பிசினஸ்ல ஏத்த இறக்கம் சகஜம்... சொன்னா வாய் வெந்து போவாது... ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா... எம்புள்ளையும் நானும் உங்க வீட்டுல வந்து நிக்க முடியுமா... சொல்லுங்க... அவருக்கு இருக்கற பிரச்னை போதாதுன்னு...''

சந்திரன் தள்ளாடி எழுந்தான்.

வனஜா நிச்சயம் கோபிப்பாள்.

'உங்களுக்குப் பேசத் தெரியலை. சொல்ல வேண்டியதுதானே... பணங்காசு வேணாம்... வார்த்தை சொன்னாப் போதும்... பிழைச்சுக்குவேன் அப்படீன்னு சாமர்த்தியமா பேச வேணாம்'னு...


ஊஹூம்.

இந்த நிமிஷம் எதுவும் முடியவில்லை.

''வரட்டுமா...''

''நல்லது... ஞாபகம் வச்சுக்குங்க...''

வாசற் கதவு தாண்டி வெளியே வரும்போது குடம் தண்ணீரை புவனா தன் மேல் ஊற்றி அனுப்பிய மாதிரி ஏனோ உணர்ந்தான். ○



இந்த இனிய திட்டம் 5-10-98 வரை மட்டுமே

கரும்பு சுவைக்க சன்மானமும் உண்டு!

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் டிரஸ்ட் வழங்கும் சந்தா முதலீட்டுத் திட்டம்!

**ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ. 10,000 முதலீடு செய்யுங்கள்.
5 ஆண்டுகளில் ரூ. 20,000 (இரு மடங்கு)
பெற்றுக் கொள்ளுங்கள்.**

அத்துடன்

● 4 இலக்கிய பொக்கிஷங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள் ●



1. 'கல்கி' வார இதழ் 5 ஆண்டுகளுக்கு (260 வாரங்களுக்கு) உங்கள் இல்லம் தேடி வரும்.
2. 'கல்கி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்கு பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.
3. பொன்விழாக் காணும் 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.
4. 'அமுதசுரபி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.



ரூ. 10,000 (ரூ. பத்தாயிரம்) 'ஸ்ரீராம் டிரஸ்ட்' பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

'ஸ்ரீராம் டிரஸ்ட்', ஏ-7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு,
சென்னை - 600 102. தொலைபேசி எண் : 628 6869, 628 7879

---

1. முழுப்பெயர் : திரு/திருமதி/செல்வி..
   முகவரி :..
   ....
   ....
2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் :
   முழுப்பெயர் :..
3. வாரிசுதாரர் :..
4. கல்கி, அமுதசுரபி இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி :..............................
   ....
   ....

CHEQUE/D.D. No. Dt. ON

Rs. ....

அன்புள்ள

இடம் ....

தேதி ....

முதலீட்டாளர் கையொப்பம்

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தக் காலத்தில் என்னைப் பல பேர் 'கெட்டிக்காரன்' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் கெட்டிக்காரனா என்பது எனக்குத் தெரியாது; நான் நானாக இருந்தேன். அவ்வளவுதான். எல்லோரும் என்னைப் போல்தான் இருக்கிறார்கள் என்கிற நினைப்பு வரும்.

என் அப்பாவின் நெருங்கிய நண்பர் ஒருவர் என்னைக் கேட்டார்:

"ஏய், படிச்சுட்டு என்னடா பண்ணப் போறே?"

என் தாய் சொன்னார்: "கலெக்டராகப் போகிறான்."

அப்போதெல்லாம், சுதந்தரம் வராத காலம் - கலெக்டர் உத்தியோகம்தான் மிகப் பெரிய உத்தியோகம். அப்பாவின் நண்பர் ஏகடியம் செய்தார்.

"வருவான் வருவான்... கலயம் கட்டுவான்." என்றார். எல்லோரும் சிரித்தார்கள்.

என் தாய் தந்த ஊக்கம், என் மீது வைத்திருந்த நம்பிக்கை, ஆசை இதற்கெல்லாம் ஈடே இல்லை. இவைதான் என் ஆசைகளுக்கும் முயற்சிகளுக்கும் உந்துகோலாய் இருந்தன.

கல்கியின் பேனாவைத் தேடி...

நான் அப்போது ஆறாவது படித்துக் கொண்டிருந்தேன். அப்போது புதிதாக ஒரு பேனா வந்தது. 'எபர்ஹார்டு பேபர்' என்று பெயர். இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது. மிக அழகான பேனா. விலை ஒண்ணரை ரூபாய். அப்போது இட்லி விலை காலணா. கணக்கெழுதும் ஒரு குமாஸ்தாவினுடைய அன்றைய சம்பளம் 30 ரூபாய். இதில் ஒண்ணரை ரூபாய் விலை கொடுத்துப் பேனா வாங்குவதா? இப்படித்தான் என் பெற்றோர் சிந்தித்திருக்க வேண்டும்.

பேனா, அரக்கு போன்ற ஒரு பொருளால் செய்யப்பட்டிருந்தது. முத்துச் சிப்பியை ஒரு அசைவில் நோக்கினால் பளபளவென்று மின்னுமே, அதைப் போல் மின்னியது. ரோஸ் நிறம். கேட்டு ஒரு மாதமாகியது. ஒன்றும் நடக்கவில்லை. "இப்போது இவனுக்கெதற்கு இவ்வளவு விலையில்" என்று அவர்கள் எண்ணி இருக்கக் கூடும்.

நான் 'மக்கர்' செய்தேன்.

வீட்டிலே முக்கியமான பண்டிகை நாள். சாமி படத்து முன் இலை போட்டு சாதம் பரிமாறி, காத்திருக்கிறார்கள். நைவேத்யம் செய்து சூடம் கொளுத்திக் காட்ட வேண்டிய நேரம். என்னைத் தேடுகிறார்கள். நான் காணாமல் போய் விட்டேன்!

வீட்டிலே, தெருவிலே, என்று கடை ஆட்கள் பறந்தார்கள். ஆளைக் காணவில்லை. நானோ வீட்டின் சாமான் வைக்கும் அறையில் பானைகளுக்கிடையில் ஒளிந்து கொண்டிருந்தேன். கொஞ்ச நேரம் ஆயிற்று. என் தாயின் பரிதவிப்புக் குரல் கேட்டது! என்னால் அதற்கு மேலும் தாள முடியவில்லை. எழுந்து வெளியே வந்தேன்.

என் தாய் - அழாத குறைதான்.

"அங்கே போய் ஒளியலாமா? பூச்சி பொட்டு கடித்து விடுமே" என்றார்கள்.

"எனக்குப் பேனா வாங்கிக் கொடுக்கவில்லை. அதனால்தான்" என்றேன்.

மறுநாளே எனக்குப் பேனா கிடைத்து விட்டது!

ஒரு சமயம் என் தாய் கொடுத்த மதிய உணவை அப்படியே திரும்ப எடுத்து வந்து விட்டேன். பாத்திரத்தை விளக்கப் போட, டிபன் பாக்சைத் திறந்த என் தாய், கொடுத்த உணவு அப்படியே இருப்பதைப் பார்த்துப் பதறிப் போய்க் கேட்டார். "ஏன் சாப்பிடவில்லை?" என்று.

"நீ என்னுடன் சண்டை போட்டாயே, அதனால்தான்" என்றேன்.

"ஐயையோ! காலையிலிருந்து சாப்பிடாமல் பட்டினி கிடக்கிறாயா?" என்று தவித்துப் போய் விட்டார்.

எனக்கும் என் அண்ணனுக்கும் முன், நான்கு குழந்தைகளைப் பறி



• ராஜரத்னம் பிள்ளை

கொடுத்தவரல்லவா அவர்?

இப்படி என் உண்ணாவிரதங்களுக்குப் பலன் இருந்தது! பிடிவாதக்காரன் என்ற பெயர் எனக்கு நிலைத்தது.

குழந்தைகளிடம் சில பிடிவாதங்களை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது; உண்மைதான். எனினும் நியாயமான பிடிவாதங்களில் நாம் கொஞ்சம் விட்டுக் கொடுப்பது நல்லது. ஏனெனில் அதுதான், நாளடைவில், மன உறுதியாகி, வைராக்கியமாக மாறுகிறது. காரியங்களை சாதிக்கும் மன வலிமையைக் கொடுக்கிறது.

அன்று அப்படி வாங்கிய பேனாவை நான் ஆறாவது வகுப்பிலிருந்து 11வது வகுப்பு வரை வைத்திருந்தேன். மசி போடத் திறந்து திறந்து திருகியதில் மரை கழன்று மசி கசிய ஆரம்பித்தபோதுதான் பேனா ஓய்வு பெற்றது!

சின்ன வயதிலிருந்து எனக்கென்னவோ ஒரு பேனா மோகம். இன்று எண்ணிப் பார்க்கிறேன், இதுதான் எழுத்தாளனாகும் சுய தர்மத்தின் வெளிப்பாடோ? புதிய டிசைனில் உள்ள உயர்ந்த பேனாக்களை வாங்குவதில் ஆசை. அதுவும் சொந்த கம்பெனி துவங்கிய பின் புதிய புதிய புத்தகங்களை லட்சியம் செய்யாமல் வாங்குவதும் புதிய பேனாக்களை வாங்குவதும் தண்ணீர் பட்ட பாடுதான்.

ஒரு சமயம் என் வழக்கறிஞர் நண்பர் அலுவலகத்தில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தேன்.

''என்ன பேனா அது?'' என்றார் என் நண்பர்.

''புதிய மாண்ட் பிளாங்க்! பிரான்சில் வாங்கினேன். 92 டாலர்!''

அவர் தன் பையிலிருந்த பேனாவை எடுத்தார்.

''முத்து! இதோ பார்! இதுவும் மாண்ட் பிளாங்க்தான்! ஜெர்மனியில் வாங்கினேன். விலை என்ன என்று நினைக்கிறாய்?'' என்றார். எனக்குத் தெரியும், அதன் விலை 192 டாலர்.

அதன் பிறகு என் பேனா பற்றிப் பேசுவதில்லை; பேனாவை எழுத மட்டுமே வைத்துக் கொண்டேன்!

ஆனால் ஒரு எழுத்தாளனுக்கு பேனாவை விட உயரிய பொருள் உலகில் வேறு எது இருக்க முடியும்?

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நான் இந்தியா வந்தபோது 'கல்கி' ஆசிரியர் திரு. ராஜேந்திரனைச் சந்தித்தபோது உங்கள் தந்தை கல்கி அவர்கள் விட்டுச் சென்ற பேனா ஏதாவதொன்று இருக்கிறதா?'' என்று கேட்டேன்.

''நான் அப்போது இளைஞன். எல்லாம் எங்கோ போய் விட்டது. யாரும் கவனம் செலுத்தவில்லை'' என்றார், ஆதங்கத்துடன்.

இவை அனைத்தும் எனது இயல்பான சுபாவம் தந்தது - (சுய தர்மம்) - என்று எடுத்துக் கொண்டால் என்னைச் சூழ்நிலையும் பல சம்பவங்களால் உருவாக்கியது.

பேனாவுக்கு அடுத்தபடியாக என்னை மகிழ்விக்கும் விஷயம் நாதஸ்வரம். சிறந்த நாதஸ்வரக் கலைஞர்கள் அன்று தஞ்சையில் இருந்தார்கள். திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை, திருவீழிமழலை சகோதரர்கள், திரு

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

விடைமருதூர் வீருசாமிப் பிள்ளை என்று பிரபல நாதஸ்வர வித்வான்கள்.

இவர்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? வாழ்வில் எனக்குக் கலா ரசனையைக் கொடுத்ததே இவர்கள்தான். நாளை இவர்களைப் போல் ஆகும் தாகத்தில், நாதஸ்வரம் கற்றுக் கொள்ளும் கற்றுக் குட்டிகளின் நாதஸ்வர இசையும், கற்றுக் கொடுப்பவரின் இசையும்தான் எனக்கு பூபாளம் பாடி என்னைத் தினமும் எழுப்பி விடும்.

எங்கள் ஊரில் இசை வேளாளர் தெரு என்று பெரிய தெருவே இருந்தது. அங்கிருந்த என்னொத்த வயதினர், அனைவருமே நண்பர்கள்.

பேராசிரியர் கல்கியின் இசை விமர்சனங்களை எல்லாம் விடாது படித்தவன் நான். எனவே எனக்கு டைகர் வரதாச்சாரியிலிருந்து திருப்பாம்பரம் சுவாமிநாத பிள்ளை வரை தெரியும், - சின்ன வயதிலேயே.

நாதஸ்வர சக்ரவர்த்தி திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் பிள்ளை என்னை மிகவும் கவர்ந்தவர். வருங்கால தமிழ்ச் சமுதாயமே அவரைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். அப்படியொரு மனிதர் அவர்; மாமேதை!

இரவு மணி இரண்டு. இடம் பொறையாருக்கு அருகில். சுவாமி ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார். ராஜரத்தினம் பிள்ளையின் வாசிப்பைக் கேட்பதற்காகவே தெருவில், அங்கங்கே சுவாமி நின்று விடுவார்! கூட்டமான கூட்டம். அந்த நேரத்திலும், அவர் வாசித்தால் நம்மை எங்கோ கொண்டு சென்று விடுவார். குழல் குழல் என்கிறார்களே, இது தான் உண்மையான குழல் என்று நான் நினைக்கிறேன். அத்தனை இனிமை; அத்தனை கம்பீரம், அத்தனை ஆண்மை, அத்தனை வேகம், அத்தனை நெளிவு சுளிவுகள். ராஜரத்தினம் அவர்கள் வாசித்து முடித்தபின் அவர் நடந்து கொள்ளும் பாணி இருக்கிறதே அதே பெரிய காவியம்! பிரமிக்க வைக்கும். ஏனெனில் அவர் சாதாரண மனிதரல்ல!

வாசித்து ஓய்ந்தவுடன் தன் நாதஸ்வரக் கருவியை அருகிலிருப்பவரிடம் கொடுப்பார். இதை நீ பத்திரமாக வைத்துக் கொள் என்று. இவர் மீண்டும் வாசிக்கும்வரை அவர்தான் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படி ஒரு பந்தா.

ராஜ தர்பார். மற்றவர்களைப் போல இசைக் கருவியை இவர் கையில் தூக்கிக் கொண்டிருக்க மாட்டார். பிறகு இடது புறம் திரும்புவார். ஒரு ஆள் ஒரு பெரிய வெள்ளி வெற்றிலைப் பாக்குப் பெட்டியை பவ்யத்துடன் திறந்து நீட்டுவார். அதிலிருந்து ஒரு கொழுந்து வெற்றிலையை எடுத்து கண்ணாம்பைத் தடவுவார்.

''பிள்ளைவாள்!'' என்றொரு குரல் கேட்கும். ஒரு பெரிய மனிதர் அங்கே கும்பிடு போடுவார். பிள்ளைவாள் அந்த வெற்றிலைப் பாக்கு கையுடனே அவருக்குத் தன் அன்பைத் தெரிவிப்பார். கை விரல்களிலே வைரம் ஜொலிக்கும்.

மனிதர் அவ்வளவு சிவப்பு; அழகு, கம்பீரம். ராஜ தோற்றம் என்ன, ராஜா வேதான் - இல்லாவிட்டால் அவரை சினிமாவில் - 'கானமேகம்' படத்தில் நடிக்க அழைப்பார்களா?

நான் அமெரிக்காவிலிருந்த வந்த போது கல்கியின் பேனாவைத் தேடியது போல், ராஜரத்தினம் அவர்கள் வாசித்த நாதஸ்வரம் கிடைக்குமா என்று தேடினேன்.

''எங்கே கிடைக்கும்!'' என்றார்கள்.

நம் ஒவ்வொருவரிடமும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. ஆனால் பக்குவமடையாத உள்ளத்தில் இந்தத் தனித்துவம் மெலிதான ஆணவத்தை வளர்த்து விடுகிறது என்பதே நான் கண்ட உண்மை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோதே என் கட்டுரைகளும், கதைகளும் பத்திரிகைகளில் வெளிவந்தன. நான் வித்தியாசமானவன் என்ற உணர்வை இது என்னுள் ஏற்படுத்தியது.

''ஊர் உலகம் பற்றி அதிகம் அறிந்தவன்'' என்ற நினைவு ஓடும்.

பொதுவாக அதிகம் தனிமையை நாடுபவன் நான். எனக்குப் பிடித்த விஷயங்கள் பொதுவாக எல்லோருக்கும் பிடித்ததற்கு அப்பால் இருந்தன. மற்றவர்கள் சிறிய வட்டத்தில் இருந்து கொண்டு 'ஏக கலாட்டா' செய்கிறார்கள், குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுகிறார்கள் என்கிற மனப்பான்மையுடனேயே பலரைப் பார்த்தேன்; சமுதாயத்தைப் பார்த்தேன். இந்தத் தனித்துவம் வேண்டியதுதான். ஏனெனில் இவர்கள்தான் நாளை புதிய பொருட்களைக் கண்டு

பிடிப்பவர்களாகவும், பிரச்னைகளுக்குப் புதிய தீர்வு காணும் ஆக்க சக்தி கொண்ட மனம் கொண்டவர்கள் என்றும் இவர்களைப் பற்றி மனவியல் அறிஞர்கள் எழுதுகிறார்கள்.

இதன் மறுபக்கம்: இவர்கள் தனக்குத் தெரிந்ததையே சரி என்று சாதிப்பார்கள். உலகத்துடன் ஒன்றி இவர்களால் பழக முடியாது. தவறைத் திருத்திக் கொள்ளும் மனப்பக்குவம் இல்லாதவர்கள்; தன்னிடம் தவறு இருக்கிறது என்பதையே உணராதவர்கள்!

வாழ்வில் நான் தெரிந்து கொண்ட உண்மை "திறந்த மனமும், தவற்றைத் திருத்திக் கொள்ளும் மனப்பக்குவமும்தான்" என்பார் தத்துவஞானி ஜேம்ஸ் ஆலன். என்னிடமிருந்த தனித்துவம் எனக்குப் பல சங்கடங்களை வாழ்வில் உண்டாக்கியது. எல்லா சங்கடங்களுக்கும் உலகின் மீது பழியைப் போட்டு என்னை நானே சமாதானம் செய்து கொள்வேன்.

நான் மீண்டும் அண்ணாமலையில் எம்.ஏ படிக்கப் போனபோதுதான் எனக்கும் என் பேராசிரியருக்கும் ஏற்பட்ட மோதலில் எனக்குத் தெளிவு பிறந்தது.


இது மக்களால் ஆன உலகம். இங்கே நாம் தனித்து வாழவில்லை; இணைந்து வாழ்வதுதான் சுகம் என்பதை எல்லாம் நான் தெரிந்து கொண்டபோது, என் வாழ்வில் என் முகத்தில் இருந்த சோக முத்திரை தானே விலகியது. வேகமாக பல இனிமையான சூழ்நிலைகள் உருவாயின.

பிறரிடம் இருந்த நல்ல குணங்கள் எனக்கு மிகத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தன. 'தான்' என்கிற நினைப்பு மறைந்து அதற்கு நேர்மாறான, 'எளிமை' என்பதன் மகத்துவம் புரிய ஆரம்பித்தது!

(தொடரும்)


சென்னையில் ஓர் அடுக்கு மாடிக் கட்டடம் மண்ணில் புதைந்தது - செய்தி
சார், சும்மா ஷாக்காயிடாதீங்க. அது நிஜமாவே பேஸ்மெண்ட்தான்!
அத்துமீறிக் கட்டிய மூணாவது மாடியை இடிக்கலாம்னு வந்தா மூணாவது மாடியையே காணோமே!
நம்ம காதல், கல்யாணத்துலே முடியாது போலிருக்கு. வா, அந்த பில்டிங்கில் கொஞ்ச நேரம் நின்னு தற்கொலை செய்துக்கலாம்.
நிலத்தடியிலே சுரங்கப் பாதை அமைச்சிருக்கோம். ஒரு அவசரம்னா தப்பிக்கலாமில்லே?
நகரிலிருந்து இவ்வளவு தள்ளி நான் ஃப்ளாட் வாங்கக் காரணம் உண்டு. பக்கத்திலேயே தீயணைப்பு நிலையம் இருக்குதே!
— குல்லு

நடக்குமென்பார் நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டம் அடிக்கறதுக்கு சான்ஸ் இருக்கு. குடும்பத்துல நல்ல விஷயங்கள் நடக்கறதுக் கான சூழ்நிலைகள் உருவாகும். செய்யற தொழில் எதுவானாலும் அதுல முன்னேற்றத் துக்கான பாதை பளிச்சினு தெரியற வாரம் இது. தொலை தூரத்துல இருக்கற உங்க மகனோ மகளோ உங்களைத் தேடி வருவாங்க. இல்லேன்னா ரொம்ப காலத்துக்கு முன்னாடி பிரிஞ்சு போன சொந்தங்கள் இப்போ வந்து சேரும். பொருளாதாரத்திலும் பிரச்னை இருக் காது. உங்க சாமர்த்தியமும் சாதுர்யமும் வெளிப்படற வாரம்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

புதுசா தொழில் தொடங்கற ஐடியா இருந்தா, இந்த வாரம் விட்டுடுங்க. வேணாம். ஏற்கெனவே தொழில் பண்ணிக்கிட்டிருக் கறவங்க சில புது பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஆனாலும் பயப்படாதீங்க. சமாளிச்சிடுவீங்க. சிலருக்கு ஃபாரின் போற சான்ஸ் இருக்கு. சிலருக்கு ஆன்மீக நாட்டம் அதிகமாகி மனத் தெளிவு கிடைக்கும். போட்டி, பந்தயம், கோர்ட் கேஸ் எதுவானா லும் உங்களுக்கே சாதகமா இருக்கும். பொறி யியல் சம்பந்தப்பட்டவங்க, தங்களுடைய வீர தீரச் செயல்களால சாதனை படைக்கற சான்ஸ் நிறையவே இருக்கு.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

இதுவரைக்கும் குடும்பத்துல இருந்து வந்த சலசலப்பெல்லாம் இந்த வாரம் அப்சன்ட் ஆகி, அமைதி திரும்பும். அர சாங்கப் பணியாளர்களுக்கு வளர்ச்சி தெரியும்கிறது மட்டுமில்லே; தனியார் துறைப் பணியாளர்களுக்கும் வளர்ச்சி தெரியுங்கறதுதான் விசேஷம். பொது வான பலன்னு பார்த்தா, நல்ல அலைச்சல் இருக்கும். இந்த வாரம் கொஞ்சம் மந்தமாத் தான் இருக்கும்னாலும் முக்கியமான ஒன்றி ரண்டு காரியங்கள் அவசியம் நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பும் ஆதாயமாத்தான் இருக்கும். எதிலும் பதற்றப்படாம இருக்க வேண்டியது அவசியம்.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

திருப்திகரமான வாரம்தான்னு பொதுவாச் சொல்லலாம்னாலும் குடும்பத்துல சின்னச் சின்ன பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். பக்குவமாகச் சமாளிக்க வேண்டும். கூடவே செலவு வரும்னாலும் அது நல்ல செலவுகளாத்தான் இருக்கும். சின்னச் சின்ன உடல் உபாதைகள் வந்து தர்ம சங்கட மான நிலைக்குத் தள்ளப்படலாம். சிலருக்குக் கைப் பொருள் இழப்பு வரலாம்; மத்தவங்க னால ஏமாற்றவும்படலாம். தொழிலதிபர்கள் புது முயற்சியில் இறங்க வேண்டாம். பயணத் தில் கவனம் அவசியம்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


மத்தவங்க ஓடி வந்து உதவி செய்யற வாரம் இது. அப்புறம் என்ன! எடுத்த காரியங்களில் வெற்றிக்குக் கேட்கவா வேணும்! ஓகோதான். வெளிநாட்டு லேர்ந்து உற்சாகமான செய்தியும் ஆதாயமும் கிடைக்கும். வேலையில்லாதவர்களுக்கு வேலை; கல்யாணமாகாதவங்களுக்குக் கல்யா ணம்னு எல்லாம் சுப காரியங்களாவே நடக்கும். செலவு அதிகமா இருந்தாலும் பொருளாதாரம் சீராவே இருக்கும். மத்தவங்களோட பாராட் டும் பிரமாதமாக் கிடைக்கும். ஆனாலும் வாரக் கடைசியில கொஞ்சம் எச்சரிக்கையா இருக் கணும். இல்லேன்னா எல்லாமே ரிவர்ஸ்ல போறதுக்கு சான்ஸ் இருக்கு.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

நம்பிக்கையும் துணிச்சலும் ஏகமா இருக்கற வாரம். எதிரிங்க ஓடி ஒளிஞ் சுக்குவாங்க. காரியங்களிலும் ஜெயிச்சபடி இருப்பீங்க. போட்டி, பந்தயங்கள்ல அனுகூல மான பலன்களே இருக்கும். குறிப்பாச் சொன்னா பெண்களுக்கு எடுத்ததெல்லாம்

ஜெயம்தான். புடைவை, நகைன்னு வாங்கித் தர்ற யோகமும் இருக்கு. ஆனாலும் செலவு அதிகமா இருக்கறதால பணத்தட்டுப்பாடும் இருக்கும். புது முயற்சிகள் எதுவும் இந்த வாரம் வேண்டாம். பண முதலீடு செய்யறதெல்லாம் வேண்டவே வேண்டாம். பக்குவமாப் பழகுங்க. இல்லேன்னா, நண்பர்கள்கிட்ட மட்டுமல்ல; கூடப் பிறந்தவங்களோடயே மனஸ்தாபத்துக்கு சான்ஸ் இருக்கு.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*


இதுவரைக்கும் நெருக்கிக்கிட்டிருந்த பண விஷயம் இந்த வாரம் ஜகா வாங்கி நார்மலாயிடும். தடைபட்டுக்கிட்டிருந்த காரியங்களுக்கான தடைகளும் இந்த வாரம் அம்பேலாயிடும். அப்புறமென்ன மனசுல உற்சாகம் வந்து கொப்புளிக்கத்தானே செய்யும்! வெளிநாட்டுத் தொடர்பாலும், கொடுக்கல் - வாங்கலிலும் இந்த வாரம் லாபம்தான்! சிலருக்குப் புதிய பொருள்கள் வாங்கற அதிர்ஷ்டமும் இருக்கு. சிலர் சவால்களைச் சமாளித்து வெற்றிக் கொடி நாட்டுவீங்க.






விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

காரியங்களைச் சுலபமா ஜெயிக்கற வாரம் உங்களுக்கு. சாதுர்யமாப் பேசியே பல காரியங்களைச் செஞ்சிடுவீங்க. இத்தனை எதுக்கு? அரசாங்கக் காரியங்கள் கூட சுலபமா முடிஞ்சிடும்னா பார்த்துக்கங்க, உங்களோட சாதுர்யத்தை! பிசினஸ் பண்றவங்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு புரமோஷன், டிரான்ஸ்ஃபர்னு எல்லாமே உற்சாகமாத்தான் நடக்கும். பெண்களோட காரியத்துக்கு ஆண்களே தடையா இருக்கவும் பிரச்னையா இருக்கவும் சான்ஸ் இருக்கு. எனவே, அம்மணிகள் இந்த வாரம் ஆண்கள்கிட்ட அதி ஜாக்கிரதையா இருந்துக்கங்க.



தனுசு: *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

குருவும் சனியும் இந்த வாரம் உங்களுக்குச் சாதகமா இல்லாததால, விசேஷமா எதுவும் சொல்றதுக்கில்லீங்க. எதுவானாலும் சரி, புதுசா எந்தவொரு காரியத்துலயும் ஈடுபட்டுடாதீங்க. திடீர்ப் பணக் கஷ்டம் வந்து தவிக்கக் கூட நேரலாம். தேக ஆரோக்கியத்துலயும் கவனம் அவசியம். பிள்ளைங்களால கூட பிரச்னைங்க வரலாம். இந்த நிலைல கொடுக்கல் - வாங்கல் எப்படி லாபமா இருக்கும்? வார்த்தைகளை அளந்து பேசலின்னா, மத்தவங்களோட மனஸ்தாபமும் வந்து சேர்ந்துடும். பயணமும் தவிர்க்க வேண்டிய விஷயம். எதுவானாலும் உஷாராயிருங்க!



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*


குடும்பத்தில சுப காரியங்களுக்கான ஆரம்ப வேலைகள் தொடங்கும் வாரம் இது. பணப் புழக்கம் நன்றாகவே இருக்கும். கொடுக்கல், வாங்கல் ஸ்பெகுலேஷன் எல்லாமே லாபம் தரும். வெளி நாட்டுலேயிருக்கற உங்க மகனோ, மகளோ திடீர்னு நேரில் வந்து உங்களை சந்தோஷப்படுத்துவாங்க. இல்லேன்னாலும் அவங்க கிட்டேர்ந்து நல்ல சேதி வந்து சந்தோஷப்படுத்தும். குடும்பத்துல விருந்து, கேளிக்கைன்னு நடக்கறதுக்கும் வாய்ப்பு உண்டு. மத்தவங்க உதவியும் உங்களுக்குத் தடையில்லாம கிடைக்கும்.

கும்ப ராசிக்காரரான தொழிலதிபர் வசந்த குமாருக்கு செல்வாக்கு ஓங்குமாம். திறமையும் பளிச்சிடும்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்க செல்வாக்கும் திறமையும் பளிச்சிடும் வாரம். எந்தக் காரியமானாலும் சுலபமா முடியறதுக்கான சந்தர்ப்பங்கள் தானாவே கூடி வரும்னா பார்த்துக்கங்களேன்! போட்டி, பந்தய விஷயங்களும் ஓகோதான்! மத்தவங்க, மூக்கு மேல விரல் வைச்சு ஆச்சரியப்படும் படியான காரியங்களைச் செஞ்சு காட்டுவீங்க. ஆனாலும் கூட அலைச்சல் அதிகமாத்தான் இருக்கும். பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் உடல் ஆரோக்கியத்திலும் எச்சரிக்கையா இருக்கணும் நீங்க.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

வாரக் கடைசில சில நன்மைகளுக்குச் சான்ஸ் இருக்குன்னாலும் முன் பகுதி அத்தனை சிறப்பா இல்லீங்க. கொடுக்கல் வாங்கல் விஷயத்துல ரொம்பவே எச்சரிக்கையா இருக்கணும். பிக்பாக்கெட் போன்று ஏதாவது பொருள் இழப்பு நேரலாம். புது முயற்சிகள் எதுவுமே இந்த வாரம் வேண்டாம். பேச்சுல கொஞ்சம் காரம் சேர்த்தீங்கன்னாக் கூட அது வீண் சண்டையில போய் முடிஞ்சிடும். ●

காலேஜ் கார்னர்:

நெல்லை தூய யோவான் கல்லூரி மாணவ மாணவியரிடம் 'நீங்கள் நடிகர், நடிகையானால்...' என்று கேட்டோம். உடனே கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு ரெக்கை கட்டிப் பறந்தார்கள்:

1. லிவிங்ஸ்டன்:(இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்)

என்னைத் தேடி வரும் ரசிகர்களுக்கெல்லாம் மாலை போடுவேன். இந்த முகத்தையும் ஹீரோ ஆக்கியது அவர்கள்தானே!

2. ஜெயந்தி சடகோபன் (முதலாமாண்டு எகனாமிக்ஸ்)

சினிமா பெண்களின் கேரக்டரை de-moralize பண்ணுபவர்களை எதிர்ப்பேன்.

3. சண்முகராஜ்: (இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்)

நன்றாகப் பணம் சம்பாதிப்பேன். அதிலொரு பங்கை நலிந்த கலைஞர்களுக்காகப் பகிர்ந்து கொடுப்பேன்.

4. ஆல்வின் பாஸ்: (இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்)

ஆஸ்கார் அவார்ட் வாங்கும் ஒரே இந்திய நடிகனாக நான்தான் இருப்பேன். ஆனால் படங்களில் எனக்கு மூன்று ஹீரோயின் வேண்டும்.

5. சுரேஷ்குமார்: (தாவரவியல் இரண்டாமாண்டு)

கலாசார சீர்கேட்டுக்கு வழி விட மாட்டேன். நாகரீக வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் படங்களிலேயே நடிப்பேன்.

6. சண்முக ராஜா: (இரண்டாமாண்டு எகனாமிக்ஸ்)

நான் கதாநாயகனாக மட்டுமே நடிப்பேன். ஆபாசக் காட்சிகள் என் படங்களில் இருக்காது. ஒருவனுக்கு ஒருத்தி எனும் தமிழ்ப் பண்பாடு என் படங்களில் எதிரொலிக்கும்.

7. காந்திமதி வேலன்: (இரண்டாமாண்டு விலங்கியல்)

கலைப் படங்கள் மட்டும் எடுப்பேன். நான் நடிக்கும் படத்தை நானே இயக்குவேன். அப்போதுதான் என் உணர்வுகளுக்கு வடிகால் இருக்கும்.

8. ஜெயப்ரகாஷ்: (இரண்டாமாண்டு எகனாமிக்ஸ்)

வருமான வரியை ஒழுங்காகக் கட்டுவேன். தேசப்பற்றை ஊட்டும் படங்களில் நடிப்பேன்.

9. ப்ரியா (முதலாமாண்டு எகனாமிக்ஸ்)

பணத்துக்காக மட்டுமே


8


7


6


5


4


1


2


3

ரசிகருக்

நடிக்க மாட்டேன். எனது காரெக்டர் மிகவும் முக்கியம். அரசியலுக்குப் போவதற்கு சினிமாவை ஒரு பாலமாகப் பிரயோகிக்க மாட்டேன்.

10. ஜூலி: (இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்)

எனது நடை, உடை, பாவனையில் அதிகம் கவனம் செலுத்துவேன். விஜய்க்கு விரலை வெட்டின ரசிகர் போன்றவர்களைத் தவிர்ப்பேன். அதற்கு ஒரு வழி, ரசிகர் மன்றமே இல்லாமல் இருப்பதுதான்.

11. ஜான் மனோகரன்: (இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்)

பொது வாழ்விலும் சினிமாவிலும் ஒரே மாதிரி இருப்பேன். சமூக சீர்திருத்தக் கதைகளிலேயே நடிக்கப் பெரிதும் முயல்வேன்.

12. பிஸ்மி (இரண்டாமாண்டு தாவரவியல்):

இயல்பான ரோல்களில் நடிக்க விரும்புகிறேன். இயல்பானது என்றால் மலையாளப் படங்களில் வரும் ரோல்களைப் போல, அதிக மேக்கப் இல்லாமல், யதார்த்தமாக.

13. எஸ். குமார்: (முதலாமாண்டு எகனாமிக்ஸ்)

நான் நடிக்கும் படப்பிடிப்பு இந்தியாவில்தான் நடக்க வேண்டும். நம் நாட்டில் இல்லாத அழகா? அதுபோல லோ-பட்ஜெட் படங்களில் மட்டுமே நடிப்பேன்.

14. இஸ்ரேல் ரத்னகுமார்: (இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்)

சமூக சீர்த்திருத்தப் படங்களில் மட்டும் நடித்து, அதுபோல நிஜ வாழ்விலும் ஹீரோவாவேன்.

15. ஜெரால்ட் ஜேகமணி: (இரண்டாமாண்டு எகனாமிக்ஸ்)

சினிமாவில் நடித்து, கஷ்டப்பட்ட நிலையில் இருக்கிறவர்களுக்கு உதவி செய்வேன்.

16. எ. ரத்னகுமார்: (இரண்டாமாண்டு இலக்கியம்)


நான் முதலில் நன்றாக நடிப்பேன். ஏனெனில் சிலர் நடிக்கிறேன் என்று பயம் காட்டுகிறார்கள். கதைக்கு முக்கியத்துவம் கொடுப்பேன்.



9



12




15



10



13



16



11



14



17



18



19



22



21



ரனைல போடுவேன்!


23

24

25

26

27

28


29

30

17. வாசுதேவன் (இரண்டாமாண்டு கணிதம்)

கதைத் தேர்வு செய்யும்போது 'சி' சென்டர் வரை கலெக்ஷன் வரும் கதையைத் தேர்ந்தெடுத்து நடிப்பேன். எம்.ஜி.ஆர் மாதிரி வரணும்.

18. ராஜன் (முதலாமாண்டு எகனாமிக்ஸ்)

பாப்புலர் நடிகனாகி விடுவேன். சம்பளம் குறைவாக வாங்குவேன்.

19. பசீரா (இரண்டாமாண்டு தாவரவியல்)

பணத்துக்காக எப்படியும் நடிக்க மாட்டேன். கருத்தாழம் இல்லாத கதாபாத்திரங்களில் நடித்து என் இமேஜைக் கெடுத்துக் கொள்ள மாட்டேன்.

20. ஷேக்ஸ்பியர்: (முதலாமாண்டு எகனாமிக்ஸ்)

காமெடி நடிகராகத்தான் ஆவேன். அப்போதுதான் சிரிக்கவும் வைக்க முடியும். சிந்திக்கவும் வைக்க முடியும்.

21. சாந்தகுமார்: (இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்)

காதலுக்கு மரியாதை தரும் கதாபாத்திரங்களிலேயே நடிப்பேன்.

22. பரீதா ராணி: (இரண்டாமாண்டு தாவரவியல்)

கோடி கொடுத்தாலும் பணக்காரியாக நடிக்கவே மாட்டேன். முதியோர் இல்லம் அமைப்பேன். தேசப் பற்றைப் பரப்புவேன்.

23. சி. மரியதாஸ்: (முதலாமாண்டு எகனாமிக்ஸ்)

என்ன கேரக்டர் ஆனாலும் செய்வேன். பாரபட்சம் ஏதுமில்லை. ஆனால் ஜாதியை மட்டும் உள்ளே வர விட மாட்டேன்.

24. விசாலாட்சி: (இரண்டாமாண்டு விலங்கியல்)

நான் க்ளாமராக மட்டுமே நடிப்பேன். புரட்சிகரமான வேடங்களும் காமெடி வேடங்களும் ஓ.கே. பணம் நிறைய சம்பாதிக்கணும். அதை வைத்து அரசியல் கட்சி ஒன்றில் சேர்வேன். நியாயமான வழிகளில் செல்வேன்!

25. ஜோன்ஸ்: (இரண்டாமாண்டு விலங்கியல்)

யதார்த்தமான சினிமாவில் மட்டும் நடிப்பேன். இந்திய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் படங்களில் நடிப்பேன்.

26. மனர்சே நவமணி: (இரண்டாமாண்டு இலக்கியம்)

சிக்கனமான பட்ஜெட் படங்களில், நாட்டின் பொருளாதார சிக்கல்களைச் சொல்லும் படங்களில் நடிப்பேன். நல்ல கருத்துக்களை சினிமாவில் சொன்னால் ரொம்ப தூரம் பரவும் இல்லையா?

27. பெரோஸ் பாத்திமா: (முதலாமாண்டு ஆங்கில இலக்கியம்)

ரேவதி போல நடிப்பேன். அரசியல்வாதி ஆவேன். மக்களை ஈர்த்து விடுவேன்.

28. லெனின்: (முதலாமாண்டு இலக்கியம்)

சமூகத்தைச் சீர்திருத்தும் கதாபாத்திரங்களில் நடிப்பேன். மக்களின் நல வாழ்வுக்காகப் பணம் செலவு செய்வேன்.

29. கண்ணன்: (முதலாமாண்டு இலக்கியம்)

கீழ்த்தரமான எண்ணங்களையும் வக்ரங்களையும் தூண்டி விடும் காட்சிகளில் ஒரு போதும் நடிக்க மாட்டேன்.

30. பாலாதேவி: (முதலாமாண்டு எகனாமிக்ஸ்)

குடும்பத்தையும் நன்றாகப் பராமரிப்பேன். ஏனெனில், அநேகமாக எல்லா நடிகைகளும் குடும்ப வாழ்க்கையில் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

–தமயந்தி

படங்கள்: ஆண்டனிராஜ்

புலிவாலைப் பிடித்த கமல்!

அட்டகாசமாகப் போனார்கள். ஆளுக்கொரு பக்கமாகத் திரும்பி இருக்கிறார்கள். 'மருதநாயக'த்தின் படப்பிடிப்பு காரைக்குடியிலும் கேரளாவின் சாலக்குடியிலும் ஜரூராய் நடந்ததென்னவோ நிஜம்தான். ஆனால், கமல் டென்ஷனாகிப் பரபரப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் படத்தில் பணியாற்றிய முக்கிய டெக்னீஷியன்கள் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று சென்னை திரும்பியிருக்கிறார்கள். அடுத்த ஷெட்யூலுக்கு ஆட்களைத் தேடும் பணியில் கமல் இப்போது தீவிரம். புலிவாலைப் பிடித்த கதையாய் கமல் இருக்கிறாராம்.

● சொந்த நடனக் குழுவை வைத்துக் கொண்டு வெளி நாட்டில் நடன நிகழ்ச்சிகள் நடத்திக்



'மனம் விரும்புதே'

கொண்டிருந்த விசித்ரா நடனக் குழுவிற்குத் தீனி போட முடியாமல் பெரிய கும்பிடு போட்டு இழுத்து மூடிவிட்டார்.

● சில வருட இடைவெளிக்குப் பின் நடிகர் சிவச்சந்திரன் டைரக்ஷனில் இறங்கியிருக்கிறார். 'என் உயிர்க் கண்ணம்மா' மூலம் சிவச்சந்திரனை இயக்குனராக அறிமுகப்படுத்திய அதே நிறுவனம் 'மனம்' விரும்புதே உன்னை' படத்தின் மூலம் மீண்டும் இயக்கும் வாய்ப்பை அளித்திருக்கிறது.

● 'வேட்டிய மடிச்சுக் கட்டு' படத்திற்குப் பின் வேதனையாகிப் போன பாக்யராஜ், மீண்டும் படவேலைகளில் மூழ்கியிருக்கிறார். வெறும் டைரக்ஷன் மட்டும்தான் பாக்யராஜ். நடிப்பவர்கள் பிரபுதேவா, ராதிகா, ரகுவரன்.

● தனது அடுத்தப் படத்தின் பாடல் கம்போஸிங்கிற்காக ஏ.ஆர். ரகுமானோடு பிரான்ஸ் போய் திரும்பியிருக்கிறார் இயக்குனர் ஷங்கர்.

● அடுத்த மாதம் தமது அடுத்தப் படத்திற்கான பூஜையை ராகவேந்திரா கல்யாண மண்டபத்தில் நடத்துகிறார் ரஜினி. அழைப்பு பாலசந்தர் ஒருவருக்கு மட்டுமே. மற்றும் பட சம்பந்தப்பட்ட டெக்னீஷியன்களுக்கு. சிம்பிளான பூஜையாம்.

● நித்யஸ்ரீயைத் தொடர்ந்து சௌம்யாவும் இளையராஜாவின் இசையில் பின்னணிப் பாடகியாகியிருக்கிறார். பாடியிருக்கும் படம் அகத்தியனின் 'காதல் கவிதை'. இவரோடு சேர்ந்து பாடியிருப்பவர் புஷ்பவனம் குப்புசாமி. ◎

— மஹேந்த்



"எனக்கு சொந்த மண் கேரளா. பிறந்தது கோயம்புத்தூரில். படித்தது பெங்களூரில். திருமணமான பின் தமிழ்நாடு தவிர மும்பை, பெங்களூர், டெல்லி என ஒரு ரவுண்டு முடித்து விட்டு மறுபடி சென்னைக்கே வந்து, சொந்த வீட்டில் குடியேறி விட்டோம்'' என்கிறார் டி.என். சேஷனின் மறுபாதியான ஜெயலட்சுமி சேஷன். சுருக்கமாக ஜெயா சேஷன்.

"அறுபது வயதா உங்களுக்கு?'' என்று கேட்டால், "ஆமாம்! எனக்கும், அவருக்கும் நாலு வயசுதான் வித்தியாசம். ஆனால் அவர் கொஞ்சம் வயசானாற் போலத் தோற்றமளிப்பார்'' என்கிறார்.

திருமதி சேஷனின் பிறந்த வீட்டை எடுத்துக் கொண்டால், பி.ஹெச்.டிகள் மயம்! அப்பா கிருஷ்ணன் சயன்டிஸ்ட். பெங்களூர், இந்திய அறிவியல் கழகத்தில் சர்.சி.வி. ராமனுக்குக் கீழே பணி புரிந்தார். அம்மா நாராயணி. ஜெயா சேஷனின் கூடப் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள்; இரண்டு சகோதரர்கள். இவர்தான் பெரியவர். இன்னமும் அப்பா (வயது 86) அம்மா (76 வயது) பெங்களூரில் வசித்து வருகிறார்கள்.

பெங்களூரில் படிக்கிறபோது, பள்ளியிலும் சரி, கல்லூரியிலும் சரி நெருங்கிய தோழி, எழுத்தாளர் வாஸந்தி. படிக்கிறபோது, பாடம் தவிர பாட்டு, வீணை, டான்ஸ் என்று ஒன்றை விட்டு வைக்கவில்லை. இவை தவிர கைவேலைகள் நிறையக் கற்றுக் கொண்டார்.

"நான் இன்டர் மீடியட் படிக்கிறபோதே இவரது ஜாதகம் வந்தது. ஆனால் அவருடைய ஜாதகப்படி குழந்தை பாக்கியம் இல்லை என்று தெரிய வந்ததால், இந்த வரன் வேண்டாம் என்று எங்கள் வீட்டில் சொல்லி விட்டார்கள். அதன்பின் என் படிப்பு தொடர்ந்தது. டிகிரி முடித்த பிறகு, மறுபடி வரன் பார்க்கும் படலம் ஆரம்பித்தது. இதற்கிடையே, என் ஜாதகத்திலும் குழந்தை பாக்கியமில்லை என்பது தெரிய வந்தது. எனவே மறுபடி, சேஷனின் ஜாதகத்தையே பார்த்தால் என்ன என்று தோன்ற, அவருக்கும் எந்த பெண்ணும் அமையாதது தெரிந்தது.

"பெங்களூரில் என்னைப் பெண் பார்க்கத் தம் குடும்பத்தினருடன் வந்தார். பாரம்பரிய முறைப்படி நான் வீணை வாசித்துக் காட்டினேன். ஆனால், சேஷன் – அவர் பக்கத்தில் அவரைப் போலவே இருந்த அவரது சகோதரர் இரண்டு பேரில் யார் மாப்பிள்ளை என்றே முதலில் தெரியவில்லை! இவரிடம் 'பெண்ணிடம் ஏதாவது பேச வேண்டுமா?' என்று கேட்டபோதுகூட, 'இரண்டு நிமிடம் பேசி, என்ன பெரிசாய் ஒருவரைப் பற்றித் தெரிந்து கொண்டு விட முடியும்? எனவே பேச வேண்டிய அவசியமில்லை' என்று சொல்லி விட்டார்.

"விடை பெறுகிறபோதுகூட, 'அநேகமாய் முடிந்து விடும்; எதற்கும் வீட்டுக்குப் போய்



ஆலோசனை செய்துவிட்டு, டெலிபோன் செய்கிறேன்' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டுப் போனார் இவரது அப்பா.

"பெண் பார்த்தது 58ம் வருடம் டிசம்பரில். 59ம் வருடம் பிப்ரவரியில் கல்யாணம். அப்போது இவர் கிராமப்புற வளர்ச்சித் துறையில் அண்டர் செகரட்டரி. சில மாதங்களிலேயே பிரமோஷன் வந்தது'' என்று முன் கதை சுருக்கம் சொல்கிறார் ஜெயா.

"தமிழ்நாடு அரசுப் பணியிலிருந்த போது, ஒரு வருடம் அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக் கழகத்துக்கு மாஸ்டர் ஆஃப் பப்ளிக் அட்மினிஸ்டிரேஷன் படிக்க இவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார்கள். நானும் கூடவே போனேன். அங்கே

அவர் பாத்திரம் தேய்த்தால் பளிச்!

கொடுக்கப்பட்ட அலவன்ஸில் குடித்தனம் செய்வது சிரமமாக இருந்ததால், நானும் வேலைக்குப் போகலாம் என்று தோன்றியது. எனக்கு டைப்பிங் தெரியாது. வேலை கிடைப்பது சிரமமாக இருந்தது. கடைசியில் பல்கலைக் கழக லைப்ரரியில் புத்தகங்களை அழகாய், ஒழுங்காய் அடுக்கி வைக்கும் வேலை கிடைத்தது. தினம் நாலு மணி நேர வேலை. மணிக்கு இரண்டு டாலர் ஊதியம்! சிறுகச் சிறுக சேமித்து, ஊர் சுற்றிப் பார்க்கப்



போவோம். இரவு நேரத்தில் பயணம் செய்வதன் மூலம் ஓட்டலில் தங்கும் செலவை மிச்சப் படுத்துவோம்!

''அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் படிப்பு முடித்ததும் அணு சக்தி விஞ்ஞானி விக்ரம் சாராபாயின் அழைப்பின் பேரில் மும்பையில் அணுசக்தித் துறையில் பொறுப் பேற்றுக் கொண்டார். நேரத்தை எத்தனை சிரத்தையுடன் பயன்படுத்த வேண்டும், அலுவலக சகாக்களை எப்படி நடத்த வேண்டும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும், துளியும் கோபப்படாமல், பொறுமையுடன் இருப்பது' என்றெல்லாம் விக்ரம் சாராபாயிடம் தான் கற்றுக் கொள்ள வேண்டும்!

''என் வாழ்க்கையிலேயே மிக 'போரா'ன காலகட்டம் எது என்றால், இவர் ஓ.என்.ஜி.சி.யில் பணி புரிந்த நாட்களைத்தான் சொல்ல வேண்டும். இவர் ஓ.என்.ஜி.சி.யின் பல்வேறு ப்ராஜக்ட்களுக்கும் டூரிலேயே இருப்பார். ஓ.என்.ஜி.சி தலைமையகமான டேராடூனில், நான் தனியாக இருப்பது உசிதமில்லை என்று, டெல்லியின் ஓ.என்.ஜி.சி விருந்தினர் மாளிகையில்தான் வசித்தேன். காப்பி, டீ, சாப்பாடு எல்லாம் வந்து விடும். நான் முழுக்க ஒருவேலையும் கிடையாது. சில சமயம் தனிமையில் பைத்தியம் பிடித்தாற்போல உட்கார்ந்திருப்பேன்!''

"சினிமா பார்ப்பீர்களா?''

''கடந்த பல வருடங்களாகவே இவருக்கு பலத்த செக்யூரிடி என்பதால், தியேட்டர் பக்கம் போனது இல்லை. ஆனால், டெல்லி தமிழ்ச் சங்கம் திரையிடுகிற தமிழ்ப் படங்கள் பார்த்தது உண்டு. ரோஜா, அஞ்சலி... இப்படிச் சில....

''ராஜீவ்காந்திக்கு இவரை ரொம்பப் பிடிக்கும். இவர் போனதும் 'The fat fellow has come. Give him chocolates' என்பார். காரணம் இவருக்கு சாக்லேட் ரொம்பப் பிடிக்கும்.''

''வெளியுலகிற்கு டி.என். சேஷன் என்றால் ஒரு டெரர். வீட்டில் எப்படி?''

''ரொம்ப மென்மையான மனசு அவருக்கு. ஆனால் எதிலும் பர்ஃபெக்ஷன் எதிர்பார்க்கிறவர். அப்படி இல்லாவிட்டால் அசாத்தியக் கோபம் வந்து விடும். வீட்டிலும் அப்படித்தான். சமையல், வீட்டைச் சுத்தம் செய்வது, பாத்திரம் தேய்ப்பது என்று எதானாலும் எனக்கு உதவி செய்வார். பாத்திரம் தேய்த்தால்கூட, என்னை விட அவர் தேய்த்தால் பளிச்சென்று இருக்கும்.''

சந்திப்பு : **பாரதிமௌலி**
படம் : **ஸ்ரீஹரி**

கோபிசெட்டிப் பாளையத்தில் 'அழகர்சாமி' படப்பிடிப்புக்கு வந்திருந்தார் சத்யராஜ். ஜாலியாகக் கொஞ்சம் பேசலாம் என்று போனால் பேச்சு படா சீரியஸாகிவிட்டது!

"எம்.ஜி.ஆர் பாணி நடிப்பைப் பல படங்களில் நீங்கள் கையாண்டதாலேயே உங்களின் படங்கள் நிறைய தோல்வியைத் தழுவின. அதன்பின் அனேகப் பட வாய்ப்புகள் கூட 'திசை மாறிப்' போயின என்ற குற்றச் சாட்டுக்கு உங்கள் பதில் என்ன?"

"எம்.ஜி.ஆர் மாதிரி நடித்தது என்னுடைய தவறு அல்ல.. அடிப் படையில் எந்தவொரு மனுஷனும் inspiration இல்லாம நடிக்க முடியாது. நான் அடிப் படையில் எம்.ஜி.ஆர் ரசிகன். அவரோட படங்கள் அடிக்கடி, அடுத்தடுத்து பார்த்தத னால் அதனோட பாதிப்புகள் இருக்கலாம். தோல்விக்கெல்லாம் அது காரணமில்லை."

"படங்களில் நீங்கள் அடிக்கும் அரசியல் கமெண்ட்ஸ், உங்களை ஒரு வெற்றிகரமான 'சடையர்' ஆர்ட்டிஸ்ட்டாக அடை யாளம் காட்டுகிறது. உங்களுக்கென்று தனிப்பட்ட அரசியல் பார்வை...? அரசியல் பிரவேசம் ஏதும்....?"

"அரசியலெல்லாம் நமக்கு



அரசியலா

வேணாம்ப்பா! ஆனா, படங் களைப் பொறுத்தவரைக்கும் ஆரம்பக் காலங்களிலிருந்தே எடுத்துட்டீங்கன்னா - அரசு செய்கிற தவறுகளை சுட்டிக் காட்டுகிற படங்களில் நிறைய நடிச்சிருக்கேன். அப்போது - அந்தக் காலகட்டத்துல எந்த அரசு இருக்கோ அதுக்கு எதிர்ப்புக் காட்டற மாதிரியே அதன் கருத்து இருக்கும். உதாரணத்துக்கு நான் ஒரு எம்.ஜி.ஆர் ரசிகன். அவர் அரசு இருந்தப்பவே 'பாலைவன ரோஜாக் கள்', 'கடமை, கண்ணியம், கட்டுப் பாடு' எல்லாம் நடிச்சேன். அது அரசுக்கு எதிரான படமே ஒழிய ஒரு தனிக் கட்சிக்கோ, தனித் தலை வனுக்கோ எதிரான படம் அல்ல. இப்போதும் கூட அரசுக்கு எதிரான படம் நடிச்சா அது இந்த அரசு செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதாகவே அமையும். 'தாய் மாமன்' படத்துல 'ஜெ' கவர்ன் மெண்ட்டைத் தாக்குவதாக ஒரு சுட்டிக் காட்டல் உள்ளது. ஒவ் வொரு கால கட்டத்திலும்



வேணாம்பா!

அப்படி அரசியல் விழிப்புணர்வு உள்ள படங்கள் அவசியம் தேவை என்பது என் கருத்து...''

"இத்தனை வலுவான கருத்து உள்ள நீங்கள் அரசியலுக்கே வரலாமே?''

"இல்லை. நான் நேரடி அரசியலுக்கு வந்தால் உண்மையான சத்யராஜுக்கு உண்டான ஒரு சுதந்திரத்தை நிறைய இழக்க வேண்டி வரும். உதாரணமா எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. நான் ஒரு அரசியல் கட்சியில் சேர்ந்து 'எலக்ஷன்ல' நிற்கிறேன்னு வச்சுக்குங்க... ஒரு இடத்துக்கு வோட்டுக் கேட்டுப் போறேன். பெண்கள் ஆரத்தி எடுத்து 'பொட்டு' வைப்பாங்க. அதை நான் சகிச்சுக்கணும். அதுல எனக்கு துளியும் உடன்பாடில்லை. நான் ஏன் என் சுதந்திரத்தை - சிந்தனையை விட்டுக் கொடுக்கணும்? பத்திரிகைகள், புத்தகங்கள், டீவி மீடியாக்கள் மூலமாகவே அதைச் செய்யலாமே. எனது கருத்துகள் அப்படி சொல்லப்படும் பொழுது - பிரபல நடிகனா இருக்கிறதால ஜனங்கள்கிட்டே அது ரொம்ப சுலபமாப் போய்ச் சேர்ந்துடும். இப்ப நிறைய 'திருட்டு சாமியார்க' இருக்கிறாங்கன்னா - அவங்க எல்லாம் ஏன் ஃபேமஸ் ஆகறாங்கன்னா... பெரிய பெரிய ஜட்ஜ்க, டாக்டர்க, வக்கில்க அவங்க கால்ல போய் விழுறதுனாலதான். அதே நான் அதிக - பண வசதி, உடல் நல வசதியோட இருக்கேன். இந்த நிலையில நான் பெரியாரோட கொள்கைகளைப் பேசும்போது ஒரு சராசரி மனுஷன், 'அட, பரவாயில்லப்பா.. சத்யராஜ் வந்து கடவுள் இல்லேங்கறான்... நம்பாதேங்கறான். ஆனா அவன் பணக்காரனா நல்லாத்தானே இருக்கான்.. அதனால மனுஷனோட முன்னேற்றத்துக்கு உழைப்பு மட்டுந்தான் வேணும்.. மூட நம்பிக்கை தேவையில்லை...'ங்கற மாதிரி ஒரு தாக்கம் ஏற்படும். அதனாலதான் அவற்றை பத்திரிகைகள் மற்றும் மீடியாக்கள் வாயிலாக நான் வெளிப்படுத்திகிறேன். அதன் பின்னணியில் என்னிடம் எவ்வளவோ பேர் வந்து, 'சார் உங்க கட்டுரையைப் படிச்சேன்; மூடநம்பிக்கைகளை விட்டொழிச்சுட்டேன்னு' சொல்லியிருக்காங்க. நாலு படம் வெற்றியடைவதை விட இப்படி நாலு பேர் விழிப்புணர்ச்சியடைந்து வந்து சொல்றது; கடிதம் எழுதுறது ரொம்ப சந்தோஷமா இருக்கு...!''

"அரசியலில் 'ஆரத்திப் பொட்டு' இடுவதற்குக் கூட 'காம்ப்ரமைஸ்' செய்து கொள்ள முடியாது எனச் சொல்லும் நீங்கள்... சினிமாவில் மட்டும் எப்படி அதை 'காம்ப்ரமைஸ்' செய்து கொள்கிறீர்கள்? அது சரிதானா?''

"சினிமாவில் எனக்கு உடன்பாடில்லாத விஷயங்கள் நிறைய உண்டு. எனக்கு உடன்படாத கருத்துக்கள் உள்ள படங்களில் நடிப்பதும், பாடல்கள் பாடுவதும்... அது சினிமாவில் தவிர்க்க முடியாத விஷயம். சுருக்கமா சொல்லப் போனா, நான் நடிச்ச பிரபலமான தமிழ்ப்பாடல் 'செந்தமிழ் நாட்டுத் தமிழச்சியே; சேலையுடுத்தத் தயங்கறியே...' அந்தக் கருத்துக்கு நான் எதிரானவன். அது பெண்ணோட சுதந்திரம். அவங்க ஜீன்ஸ் போட்டா, சேலையுடுத்தலைன்னா இவன்களுக்கென்ன...? இவன் மட்டும் வேஷ்டிய விட்டுட்டு பேண்ட் போட்டுட்டு சுத்திட்டு இருக்

— சத்யராஜ்

கானே! என் சிந்தனைக்கும் கருத்துக்கும் எதிர்ப்பான பாடல் என்றாலும் கதையின்படி அந்தக் கேரக்டர் பாட வேண்டிய சூழலில் இருக்கிறேனே... வேறு வழி?"

"அப்படியென்றால் ரசிகர் மன்றங்கள் எதற்கு?"

"அவை அரசியல் ரீதியில் அல்ல. சினிமா ரசிகர்கள் அன்பானவர்கள். ரசிகர் மன்றங்கள் இன்றைய காலகட்டத்தில் சமுதாயக் கண்ணோட்டத்துடனேயே இயங்குகின்றன. அது எந்த அளவுக்கு எங்களுக்கு உபயோகமா இருக்குன்னா, 'ஒரு குக்கிராமத்துல இருந்து எங்க கிட்ட ஓர் உதவி கேட்டு கடிதம் வருதுன்னா - இருதய ஆபரேஷன் - புற்று நோய் சிகிச்சைன்னு ஏதாவது வந்தா அது உண்மையா பொய்யான்னு தெரிஞ்சுக்க என் ரசிகர்கள் ரொம்ப உதவியா இருக்காங்க. இது ஒரு உதாரணந்தான்... இது மாதிரி இன்னும் சொல்லலாம்."

"ஒரே ஒரு படம் டைரக்ட் செஞ்சீங்க... அதுக்குப் பின்னால் விட்டுட்டீங்களா என்ன...?"

"டைரக்ட் செய்யும் ஆசை இன்னும் நிறையவே இருக்கு. அந்தப் படத்தில் நான் என்ன தவறு செய்தேன்னும் எனக்குத் தெரியும். அதனால அந்தத் தவறு எதுவும் இல்லாம அடுத்தப் படத்தை டைரக்ட் செய்ய இருக்கேன்...!"

"அந்தப் படத்தில் அப்படியென்ன சுய விமர்சனம் செய்து கொண்டீர்கள்?"

"அதுல என்னன்னா, ஒருத்தன் டைரக்ட் பண்ணப் போகையில அவன் தன்னோட டைரக்ஷன் திறமையைத் தான் வெளிக் கொண்டு வர முயற்சித்திருக்கணும். அதுவே நோக்கமா இருந்திருக்கணும். அதில் அப்படியில்லாம 'நடிகன் சத்யராஜைக்' கொண்டு 'ஸ்கிரிப்ட்' அமைச்சேன். அது தப்பாயிடுச்சி. இனி நான் டைரக்ட் செய்யப் போற படத்துக்கு நல்ல கதாசிரியர் கிட்டே நல்ல கதை கேட்டு வாங்கி டைரக்ட் செய்யறதா இருக்கேன்."

"பாரதிராஜா காம்பினேஷனில் உருவான மாதிரியான கேரக்டர் ரோல்கள் - இயல்பான பாத்திரங்கள் (கடலோரக் கவிதைகள், வேதம் புதிது) இன்னும் உங்களுக்கு அமையவில்லையே...?"



• செந்தமிழ் நாட்டுத் தமிழச்சியே : இந்தப் பாடலுக்கு நான் எதிரி!

பொன்னாடை எதற்கு?

காஞ்சி முனிவரின் ஜெயந்தி விழா நடந்து கொண்டிருந்தது அயோத்யா மண்டபத்தில். ரொம்பப் பிரமாதமாகவும் உருக்கமாகவும் பேசினார் அந்தப் பிரமுகர். கேட்டுக் கொண்டிருந்த அத்தனைபேருக்கும் வியப்பு! பரமாச்சார்யார் மேல் இவருக்கு இத்தனை மதிப்பா?!

அவருக்குப் பொன்னாடை போர்த்த வந்தபோது, "இந்தப் பொன்னாடையால் என்ன பயன்? பெரியவரின் 'தெய்வத்தின் குரல்' நூலை அன்பளிப்பாக அளித்தால் எவ்வளவோ உபயோகம் அல்லவா?" என்று கூறினார்.

இதைக் கேட்ட இன்னொரு வி.ஐ.பி. நெகிழ்ந்து போய், தனிப்பட்ட முறையில் 'தெய்வத்தின் குரல்' ஆறு பாகங்களையும் வாங்கி அவருக்கு அனுப்பி வைத்தார்!

அனுப்பியவர் - பத்மா சுப்பிரமணியம். யாருக்கு தெரியுமா? அப்துஸ் சமது!

தகவல் : வானதி சோமு



ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் 64-வது ஆசார்யாள் அவர்களின்

வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவம்

(ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் பராத்பர குரு)

22.10.1998 வியாழக் கிழமை
வடகோடி பிருந்தாவனம், கும்பகோணம் — 612 001.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்த 64-வது ஆச்சார்யாளான ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சரணர்களின் வார்ஷிக ஆராதனை இவ்வருஷம் கிருத்திகா சுக்ல த்விதீயா (22.10.98) வியாழக்கிழமையன்று கும்பகோணத்திலுள்ள அன்னாரது அவதார கிரஹத்தில் 32 வேதவித்துக்களைக் கொண்டு நடத்துவதற்கு ஸ்ரீ மஹா சந்நிதானங்கள் அனுக்ரஹித்திருக்கிறார்கள். ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி மஹராஜ் அவர்களால் மூன்று தினங்களில் பகவத்குணம் & பஜனை நடத்தப்படுகிறது.

இப்புனிதமான ஆராதனையை நடத்த லக்ஷக்கணக்காக பணம் தேவைப்படுவது பக்தகோடிகள் நன்கு அறிந்ததே.

பக்தகோடிகளின் பொருளுதவியாலேயே செய்யப்படும் இந்த மஹத்தான கைங்கர்யத்தில் எல்லா அன்பர்களும் நேரிடையாக கலந்து கொண்டு எல்லா அம்சங்களிலும் ஒத்துழைத்து திரவ்ய உபகாரம் செய்து இப்புனிதமான ஆராதனையை விமரிசையாக நடத்திக் கொடுத்து ஸ்ரீ மஹாபெரியவர்களின் பரிபூர்ண அனுக்ரஹத்திற்குப் பாத்திரர் களாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

T.S. குருமூர்த்தி
(Retd. Chief Cashier, UCO Bank)
Trustee & Convener
30/5, K.B. Dasan Road, Chennai - 600 018.

"மந்த்ரி ரத்னம்"
A.R. சேஷய்யா சாஸ்திரி
மானேஜிங் டிரஸ்டி
(முன்னாள் ஸ்ரீ காரியம் & ஏஜண்ட்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்)

குறிப்பு: இந்தப் புனிதமான வைபவத்தில் கலந்து கொள்ளும் அன்பர்களுக்கு அந்த மஹாபெரியவர்களின் அருளால் குடும்பத்தில் அமைதி, சந்துஷ்டி, பூர்ணமான லக்ஷ்மி கடாக்ஷம் ஸகலமும் சித்திக்கும்.

நன்கொடையாளர்கள் தங்களது முகவரியை தெளிவாக எழுதினால் ஆராதனைக்கு பிறகு பிரஸாதம் அனுப்ப அனுகூலமாக இருக்கும்.

நன்கொடை "குலபதி" K.G. கிருஷ்ண மூர்த்தி, 24 டபீர் நடுதெரு, கும்பகோணம் — 612001.

DD/ Cheque வடகோடி பிருந்தாவனம் டிரஸ்டு பெயருக்கு a/c payee cross செய்து அனுப்ப வேண்டும்.



கர்நாடக சங்கீதம் என்றாலே காததூரம் ஓடுகிறவர்களைப் பிடித்து இழுத்து உட்கார வைக்கிற முயற்சியை 'ராகம் சங்கீதம்' மோகன் வைத்யாவும், 'சுகராக்' சுதர்சனும் இணைந்து செய்திருக்கிறார்கள். ஆலந்தூர் பைன் ஆர்ட்ஸூம், ஸ்வீட்லெட்ஸ் நிறுவனமும் இணைந்து வழங்கிய 'ராகம் சுகராகம்' நிகழ்ச்சி சென்னையிலுள்ள ராமாராவ் கலா மண்டபத்தில் நடந்தது. இங்குதான் இருவரும் தங்கள் பரிசோதனையைத் தொடங்கினார்கள்.

வயலின், மிருதங்கம், கடம், தம்புரா என்று கர்நாடக இசைக்கான வாத்தியங்களுடன் ஒருபுறம் மோகன் வைத்யா குழுவினர். மறுபுறம், கீ போர்ட், ட்ரம்ஸ், தபேலா, ட்ரம்பெட் என சுதர்சனின் ஆர்கெஸ்ட்ரா.

மோகன் வைத்யா குழுவிலிருந்து, நரசிம்மன் காபி ராகத்தில் 'செந்தமிழ்த் தேன் மொழியாள்' பாட்டின் பல்லவியைப் பாட, சுதர்சன் 'அன்பே! அன்பே! கொல்லாதே' என்று அதே ராகத்தை லேட்டஸ்டாய்ப் பிடிக்க, நிகழ்ச்சி சூடு பிடித்தது! சில பாடல்களுக்கு, மோகன் வைத்யா குழுவிலிருந்து இரண்டு பேர் பரத நாட்டியத்தில் அபிநயமும் பிடித்தது புதுமை!

அது ஏதோ ஸ்பெஷல் எபெக்ட்ஸாம். ஒவ்வொரு பாட்டின் போதும், அரங்கத்தை இருட்டாக்கி, கலர்கலராய் விளக்குகள் தழுவ, தலைக்கு மேல் ரஜினி, விஜய், ஐஸ்வர்யாராய் படங்களை ஸ்லைடு போட்டுக் காட்டிக் கொண்டிருந்தார்கள். மோகன் வைத்யா அடிக்கடி ''ஃபுல்லைட், ஃபுல்லைட்'' என்று ஒலிஒளி அமைப்பாளரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

கீரவாணி ராகத்தில் அமைந்த, ''தேவி நீயே துணை! மீனலோசனி!'' என்ற மோகன் வைத்யா குழுவினரின் பாடலுக்கு சுதர்சன் குழு பாடிய சினிமாப் பாடல், ''தில்ருபா! தில்ருபா! காதல் நிலவே தில்ருபா.'' இதுவும் கீரவாணிதானாம்.

தியாகராஜ சுவாமியின் 'மனவியால கிஞ்சராவும்', 'எந்தன் நெஞ்சில் நீங்காத தென்றல் நீதானா' என்ற சினிமாப் பாடலும் நளினகாந்தி என்ற ஒரே ராகம்தான் என்றாலும், இரண்டையும் கலந்து பாடுவதைக் கேட்கக் கொஞ்சம் கஷ்டமாய்த்தான் இருந்தது! ●

– கே. பாலசுப்ரமணியன்

படம் : கே. முரளீதரன்

''நீங்கள் குறிப்பிடும் படங்கள்ல எந்த அளவு பேர் கிடைச்சுதோ அதே அளவு 'வால்டர் வெற்றி வேலிலும்' 'அமைதிப் படையிலும்', 'பூவிழி வாசலிலேயும்' கிடைச்சுதே...?''

''இலக்கிய ஆர்வம் உண்டா? ஏதும் எழுதும் எண்ணம் வந்ததுண்டா?''

''கவிதைகள், கதைகளின் ரசிகன் நான். ஆரம்பக் காலங்களில் கண்ணதாசனை அப்படியே சுவாசித்திருக்கிறேன். பெரியாரிய கருத்துக்கள் ஈர்த்த பின்னால் அவரைப் பற்றின வாசிப்புடன் கார்ல் மார்க்ஸையும் படித்திருக்கிறேன். சமீபத்தில் ஓஷோவின் புத்தகங்கள் மிகவும் ஈர்த்துள்ளன. ஒருவேளை நான் எழுத ஆசைப்பட்டால்கூட - அதற்கு யாராலும் தூண்டப்பட்டால் கூட, அதன் பின்னணியில் எழுதும் போது – நான் படித்ததன் கார்பன் காப்பியாகத்தான் என் எழுத்து வந்து சேரும். நான் படித்த எழுத்துக்களின் தாக்கமே அதில் அதிகம் இருக்கும். அவர்களின் சிந்தனையை மீறி புதிதாக ஒரு சிந்தனை எனக்கென்று உதயமாகி எழுதினால்தான் அது என்னுடையதாக இருக்கும். அதனால நான் எழுதிப் படிக்கறதைவிட அதுக்கு பெரியாருடைய – பெரியாரைப் பற்றின எழுத்துக்களையே வாங்கிப் படிச்சிக்கலாம்னு அந்த எண்ணத்தை அடியோட விட்டுட்டேன்.''

''குடும்பத்தில் நீங்கள் வில்லனா? கதாநாயகனா?''

''குடும்பத்துல மட்டுமில்ல – மொத்த வாழ்க்கையில் கூட கதாநாயகன் ரோல் தான். என்னைப் பொறுத்த வரைக்கும் தனி மனித சுதந்திரத்துல ரொம்ப ஜாக்கிரதையா இருப்பேன். குழந்தைகள், மனைவி உட்பட கருத்துத் திணிப்பு, சிந்தனைத் திணிப்பு என்கிட்ட எப்பவுமே இருக்காது. என் மனைவி என் படத்தை வெளிப்படையா விமர்சனம் செய்வாங்க. நல்லா இருந்தா பாராட்டு... மோசமா இருந்தா போச்சு... ஒரே கேலி கிண்டல் மயமா இருக்கும்....!'' ●

பேட்டி, படம் : **கா.சு. வேலாயுதன்**



ஆட்டம், பாட்டு, கொண்டாட்டம்!

'இது என்ன, சென்னைதானா?' என்று (ரொம்ப வலிக்காமல்) ஒரு தடவை கிள்ளிப் பார்த்துக் கொள்ளத் தோன்றுகிறது.

எதிரே, கறுப்பு நிற டிரஸ்ஸில் இளைஞர்களும், லேவண்டர், பிங்க் நிறங்களில் பெண்களுமாக, டான்ஸ் மாஸ்டர் பிரசன்னகுமாரின் ஒன்-டு-த்ரீக்கு உற்சாகமாய் வளைந்து நெளிந்து நடனம் (கம்-எக்ஸர்சைஸ்?) பண்ணினார்கள்.

எல்லாரும் மாடர்ன் டான்ஸ் கற்றுக் கொள்ள வந்திருக்கும் இளமைத் துள்ளல் துடிக்கிற பொடியன்கள், பொடிசுகள், அப்புறம் இளசுகள்.


Hits from the ultimate dance collection ன் அதிரடி ரிதம் (மனோகர் அய்யர்/மெர்லின் டிசௌசா, மீனா மிஸ்திரி, பாபா சேகல், இத்யாதி) தொம் தொம் என்று சத்தமான சங்கீதமாக ஹாலில் பரவி, அவர்களை ஆட்டி வைத்தது.

தியாகராயநகர் சல்லா மால் கட்டடத்தின் ஆறாவது மாடிக்கு காப்ஸ்யூல் லிஃப்டில் ஏறி வந்தால், வினைல் ஒட்டிய சுத்தமான மரத்தரையில் இந்த இளமை போடுகிற ஆட்டம் பிரம்மாண்ட கண்ணாடிச் சுவர்களில் பிரதிபலிக்கிறது.

"ஸ்விங்கர்ஸில் தற்சமயம் 200 பேர் கற்றுக் கொள்ளுகிறார்கள். 6 வயது முதல் 40 வயது வரை...!" என்கிறார் சினிமா கோரியோகிராஃபர் பி. முரளி. (ஆனால் சொல்லித் தருகிற நடன வகைகளில் சினிமா டச் நல்ல வேளை இல்லை!)

டான்ஸ் சொல்லிக் கொடுக்கிற பிரசன்ன குமார், ஆண்மையின் சகல லட்சணங்களும் தெறிக்க, அந்த ஏர்கண்டிஷன்ட் ஹாலில், ஒரு வகுப்பை முடித்து விட்டு, "ஆர் யு டயர்ட்?" என்று கேட்ட போது "நோ!" என்று கோரஸ்ஸாக முழங்கின பொடிசுகள்.

சௌகார்



பேட்டையிலிருந்து குஜராத்தி, மார்வாரி பையன்கள் - பெண்கள்தாம் அதிகம். ஆனால் பெரும்பாலும் மிடில் கிளாஸ், அப்பர் மிடில் கிளாஸ் முகங்கள். அண்ணா நகர், அடையாறு, தரமணியி லிருந்து கூட வருகிற மாடர்ன் டான்ஸ் விரும்பிகள்!

மூன்று மாதம் பயிற்சி. வாரம் இரண்டு நாள் கிளாஸ். மாதம் எட்டு கிளாஸ்கள். காலை 7 முதல் 8 வரை முதல் வகுப்பு. பிறகு, மாலை 5 டு 6; 6 டு 7; 7 டு 8.

"காலைல எட்டுல இருந்து ஒன்பது ஒரு



• பயிற்சியில் பொடிசுகள்

கிளாஸ் ஆரம்பிக்கப் போகிறோம். டிமாண்ட் இருக்கு!" என்கிறார் அம்ருதா ராம். 'ஸ்விங்கர்ஸ்' பார்ட்னர்களில் இன்னொருவர். டீவியில் பிரபலமான முகம்.

டான்ஸ் டிரஸ் இங்கேதான் வாங்கிக் கொள்ள வேண்டும். பாங்காக்கிலிருந்து தருவிக்கப்படுகிறதாம். லண்டனில் தயாரிக்கப்பட்ட ஷூக்களை மாதிரியாக வைத்து, பாண்டிச்சேரியிலேயே (அப்பாடா!) பிரத்தியேகமாகத் தயாரித்துக் கொடுக்கிறார்கள்.

பிரசன்னா, பம்பாய் டான்ஸ் மாஸ்டர் ஷ்யாமக் தாவரின் நேர் சிடர். ('தில் தோ பாகல் ஹை'க்கு கோரியோகிராஃபிக்காக நேஷனல் அவார்டு வாங்கினாரே, அவரேதான்!)

ஜாஸ், ராப், ஃபங்க்கி, பல்லாட், ஆஃப்ரோ ஜாஸ், லம்பாடா, சா-சா-சா, மாம்போ, சால்ஸா, ராக் அண்ட் ரோல், ஃபாக்ஸ்ட்ராட் என்று எத்தனை டான்ஸ் வகைகள் உண்டோ அத்தனையிலும் உடம்பை நெளிக்கவும், பாதங்கள் தாளம் போடவும் ஏற்ற பயிற்சி வகைகள்.

'கதக்'க்கும் குஜராத்தி டாண்டியாவும் தொடங்குகிற பிளான் இருக்கிறதாம்.

"ஹெல்த் பாயின்ட் ஆஃப் வியூவும் இதுல இருக்கு. அதனாலதான் நிறையப் பேர் இதுல வந்து சேரறாங்க!" என்கிறார் முரளி.

பால்ரூம் டான்ஸ் ஆடத் தெரிந்து கொள்ள சில பெரிசுகள் ஆசைப்படுகிறார்களாம். "ஸோ, கூடிய சீக்கிரம் அதுவும் ஆரம்பிச்சுடுவோம்!"

காத்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணி, "என் பேத்தி சந்தனா இங்க டான்ஸ் கத்துக்கறா... வீட்டுல போனாலும் இதே ஆட்டம்தான்!" என்கிறார்.

'த ஆஷ்ரம்' பள்ளியில் ஒரு வகுப்பு, மாடர்ன் டான்ஸ் பாடம் சொல்லித் தருகிறார்கள். உபயம்: ஸ்விங்கர்ஸ். 'சிஷ்யா'விலும் கூடிய விரைவில். (மாணவிகளில் பலர் 'சர்ச் பார்க்' என்றார்கள்!)

எதிராஜ், வைஷ்ணவா மாணவிகள் நிறையவே இருக்கிறார்கள். ('காலேஜ் ஃபெஸ்டிவலின்போது பிரமாதமாக ஆடலாம் இல்லியா?')

இளம் பிஸினஸ்மேன் சிவ பாலாஜிக்கு டான்ஸ் வெறும் உடற் பயிற்சியோ, பொழுது போக்கோ மட்டு மல்ல. மாடலிங்கில் ஒரு கண் இருக்கிறது என்கிறார்.

பாபி, கேர்ல், டாக்டர் ஜான்ஸ், சாம்பா என்று 'டான்ஸ் ஆல்பம்' இசை ஹாலில் துள்ள, இங்கே வளைந்து - குதித்துக் கும்மாள நடனம் ஆடுகிறது இளைஞர் கூட்டம்.

டெய்ல் பீஸ்:

1. 21 வயது ஜான் பிரிட்டோ 'இன்ஸைட் ஸ்டஃப்' டான்ஸ் கம்பெனி நடத்துகிறாராம். 500 ஸ்ட்யூடன்ட்ஸாம்.

2. ரஷ்யன் கல்சரல் சென்டரிலும் கோகிலா என்பவர் மாடர்ன் டான்ஸ் சொல்லித் தருகிறாராம்!

— சாருகேசி

படங்கள் : **பிரவீண்குமார்**

அதிதி வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டு ஒரு பசுவைக் கறக்கிற நேரம் காத்திருக்க வேண்டும் என்று சொன்னதில் உள் அர்த்தம் என்ன...?

வீட்டிலே பசு இருக்க வேண்டும். நித்யம் பால் கறக்க வேண்டும். கோ சம்ரக்ஷணம் பண்ண வேண்டும்... இதெல்லாமும் அந்த நியமம் மூலம் உணர்த்தப்படுகிறது.

ஆகவே நிதாகர், அதிதி யாரேனும் வருகிறார்களா என்று பார்த்தபடி நின்றார். அவர் நின்று கொண்டிருந்த நேரம் ரிபு வந்தார். வருபவர் ஆசார்யர் என்பது தெரியவில்லை அவருக்கு.

"ஸ்வாமி! மஹா தேஜஸ்வியாய் இருக்கிறீர். என் கிரகத்தில் எழுந்தருள வேண்டும். இன்றைக்கு எங்கள் கிரகத்தில் அமுது செய்து எங்களை அனுக்கிரஹிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறார்.

இவரும் 'ததாஸ்து' என்றார். "வரேன்" என்று உள்ளே வந்துவிட்டார்!

உள்ளே வந்தவுடனே "என்ன பண்ணியிருக்கிறது கிரகத்திலே...?" என்று கேட்கிறார்.

அன்றைக்குப் பண்ணியிருக்கிற தளிகையைச் சொல்கிறார்கள்...

"இதெல்லாம் எனக்குப் போதாது!" என்கிறார். "எனக்குப் பருப்பு, மோர்க் குழம்பு வேண்டும். வடை, சித்ரான்னங்கள் எல்லாம் வேண்டும். பாயசம் வேண்டும். விசேஷமாக இதெல்லாம் பண்ணினால்தான் நான் சாப்பிடுவேன்" என்கிறார்.

திடீரென்று 2.30 மணிக்கு ஒருத்தர் வந்து பண்ணி வைத்திருக்கிற சமையலையெல்லாம் விட்டு விட்டு வேறே பண்ணிக் கொடுக்கச் சொல்லிக் கேட்டால் அது சுலபமான காரியமா...?

உடனே நிதாகர் உள்ளே வந்து, "இது யாராலே ஆக வேண்டுமோ, அங்கே போய் ஸ்தோத்திரம் பண்ணுகிறார்.

"ஹே! ஹே! சாலினி... உன்னைப் போலே மங்கள தேவதை உண்டா...? நீ எத்தனையோ தேவதைகளையெல்லாம் ஆராதிப்பவள். இன்றைய தினம் வந்திருக்கிற அதிதி எப்படிப்பட்டவர் தெரியுமா...? அவர் மிகவும் உயர்த்தி. இது இதுவெல்லாம் வேண்டும் என்று அவர் கேட்கிறார். அப்படிப்பட்டவருக்குக் கொடுக்க நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா...?" என்கிறார் மனைவியிடம்.

அதனால்தான் சாஸ்திரம் சொல்கிறது:

'எப்போதும் புன்முறுவலோடு, பவ்யமாக, நயமாக சாவதானமாகப் பேசினால், விசேஷமான காரியங்கள் எல்லாம் சுலபமாகப் பண்ணிக் கொள்ளலாம், நடத்திக் கொள்ளலாம். அப்படியில்லாமல் கெடுபிடியாகப் பேசினால் ஒரு காரியமும் நடக்காது...' என்று சொல்லி விட்டது



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

சாஸ்திரம்.

பத்னி குரல் ஏறினால் பார்த்தா வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும். பார்த்தா குரல் ஏறினால் பத்னி வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும்! - இப்படி விட்டுக் கொடுத்தால்தான் அந்த கிரகத்திலே சுபம் - மங்களம் இருக்கும்.

சீதா தேவி ராமனைப் பார்த்து என்ன சொன்னாள்...? ''எனக் கொன்றுமில்லை. நான் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டேன். என் அப்பாதான் உம்மைத் தப்பாக நினைத்துக் கொள்வார். காட்டுக்கு உம்மோடு வந்தால் சிங்கம் இருக்கும், புலி இருக்கும் என்று சொல்கிறீர்களே... புலி சிங்கத்திடமிருந்து என்னைக் காப்பாற்ற முடியாத அல்ப வீரரா தாங்கள்...? உங்களை நான் தப்பாக நினைக்க மாட்டேன்.

உங்களுக்குக் கன்னிகாதானம் பண்ணிய என் அப்பாதான் தப்பாக நினைப்பார்... 'புருஷ வேஷம் போட்டுக் கொண்ட ஸ்த்ரீயோ என்று நினைப்பார்...'

பகவான் பார்த்



தான்... 'என்ன அநியாயம்! பௌருஷ ஹீனன் என்று சொல்லி விட்டாளே...' என்று அவனுக்கு எவ்வளவு கோபம் வந்திருக்க வேண்டும்! ஆனால் ஏதாவது பதிலுக்குச் சொன்னானா அவன்...? ஒன்றுமே சொல்லாமல் வாயை மூடிக் கொண்டு இருந்து விட்டான். "காட்டுக்கு வா!" என்று தன்னோடு அழைத்துப் போய் விட்டான்.

ராமாயணத்திலே பரமாத்மா எத்தனையோ தர்மத்தைக் காட்டுகிறான். அதிலே குடும்பத்தை எப்படி நடத்த வேண்டும் என்கிற சாமான்ய லௌகிக தர்மமும் ஒன்று...!

அந்த தர்மத்துக்கு ஏற்பதான் நிதாகர் "ஹே! ஹே! சாலினி! உன்னைப் போல் உண்டா! மங்கள தேவதையே' என்று ஸ்தோத்திரம் பண்ணுகிறார். பண்ணின உடனேயே கிடுகிடுவென்று வேகம் வந்து அவள் காரியங்கள் நடத்துகிறாள்.

ரிபு கேட்டதெல்லாம் மொத்தமும் பண்ணியாயிற்று. அவரும் வந்து உட்கார்ந்து விட்டார். எல்லாம் பரிமாறப்பட்டது. நன்றாகச் சாப்பிட்டார். கடைசியிலே கட்டி கட்டியாகத் தயிர் பரிமாறப்படுகிறது. தயிரை நன்றாகப் பிசைந்து சாப்பிடுகிறார்.

வாயை மூடிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார் நிதாகர்... அப்படியே பேசாமல் சும்மா இருந்திருக்கலாம் அல்லவா...? அப்படியிராமல், கை கட்டி அவரைப் பார்த்துக் கேட்கிறார்: "சுவாமி உமக்குத் திருப்தி ஏற்பட்டதா...? பசி நீங்கியதா? தாகம் நீங்கியதா?" என்று கேட்கிறார்.

உடனே அவர், "யாருக்குப் பசி? எனக்குப் பசி இல்லை! யார் சாப்பிட்டார்கள்? நான் சாப்பிடவில்லை! யாருக்கும் தாகம்...? எனக்குத் தாகமில்லையே!" என்றார்!

கேட்டுக் கொண்டிருந்த நிதாகர் உள்ளே போய்ப் பார்த்தார். ஒரு பதார்த்தம் மிச்சமில்லை! மொத்தமும் இவருக்கே பரிமாறியாயிற்று. அவ்வளவையும் சாப்பிட்டு விட்டு அவர் 'நான் சாப்பிடவில்லை...' என்றால் என்ன பொருள்?...

'இது எப்படிப் பொருந்தும்?' என்று ரிபுவிடமே கேட்கிறார் நிதாகர்.

உடனே அவர் "நான் சாப்பிடவில்லை என்று அழுத்திச் சொல்கிறார். வந்திருப்பவர் தன்னுடைய ஆசார்யர் என்று அப்போது தெரிந்ததாம் நிதாகருக்கு!

அவயவம் இல்லாதது ஆத்மா! சரீரத்துக்குத்தான் அவயங்கள். இரண்டு தகடுகளைச் சேர்த்து ஒரு குடம் பண்ணுகிறோம்! பிரித்தால் குடம் போய் விடுகிறது! ஐந்து பூதங்களினுடைய சேர்த்தி இந்தச் சரீரம். அது போய் விட்டால் இந்தச் சரீரம் ஏது...?

அதனால்தான் பரமாத்மாவுக்கு நித்யம் அர்ச்சனை பண்ணுகிறபோது பூத சுத்தி க்ரமம் என்று ஒன்று செய்யப்படுகிறது.

நமது இந்த சரீரத்தாலே பகவானை

அருள்வாக்கு

வேலோபகாரமாகச் செய்யக் கூடிய அநேகப் பணிகளில் ஸத்பாத்ரத்துக்கு வித்யையை போதிப்பதற்கு ஸமமாக எதையும் சொல்ல முடியாது என்று நம் முன்னோர் அபிப்ராயப்பட்டனர். 'வித்யாதானம்', 'வித்யாதானம்' என்று இதை மிகவும் விசேஷித்துச் சொல்லியிருக்கிறது.



'தானம்' என்ற பதத்தைப் போட்டதாலேயே, கற்றுக் கொடுக்கிற ஆசார்யர் வித்யார்த்தியிடமிருந்து எந்த த்ரவ்ய லாபமும் எதிர்பார்க்கக் கூடாது என்று ஏற்படுகிறது.

மநுஸ்ம்ருதியில் இதைப் பற்றிச் சொல்லும்போது, "தானங்களிலேயே சிறப்பு வாய்ந்தவற்றுக்கு அதிதானம் என்று பேர். கோதானம், பூதானம், வித்யாதானம் ஆகிய மூன்றும் அதிதானங்கள். அன்ன தானமும் உயர்வானது. வயிற்றுக்கு அன்னம் போடுவதைவிட அறிவுக்கு அன்னமாக வித்யாதானம் செய்வது சிறப்புடையது. வித்யைகளில் பல இருக்கின்றன. இவற்றில் எதை தானம்

பூஜை பண்ண முடியாது.

'ஆகாசத்தை ஆகாசத்திலே கலக்கிறேன் இதிலே இருக்கிற வாயுவை வாயுவிலே கலக்கிறேன்; ம்ருண்மயமான சக்தியை மண்ணிலே கலக்கிறேன்... பஞ்சபூதமான சரீரம் போய்விட்டது இப்போது...'

என்று சொல்லி அம்ருத ப்ரோக்ஷணம் பண்ணி, அம்ருதமயமான சரீரத்தை நான் அடைந்து அப்புறம் நாம் பகவானை அர்ச்சனை செய்ய வேண்டும். - இந்த பூத சுத்தி கிரமத்தை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மந்திர ரூபமாக, இந்த உடலை இல்லை என்று பண்ணி, அப்ராக்ருதமான உயர்ந்த திருமேனியை அடைந்து பகவானை அர்ச்சனை பண்ண வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

ஆத்ம வஸ்துவே அணுதான்! அதற்குக் கண் வாய் மூக்கு - இதெல்லாம் கிடையாது. பசி, தாகம் கிடையாது. சரீரத்துக்குத்தான் இதெல்லாம்! சரீரத்துக்குத்தான் பசி, தாகம் ஏற்படுகிறது. மனசிலே விகாரம் ஏற்படுகிறது. ஆத்மாவுக்கு தாகம் உண்டா? ஆத்மா சாப்பிடுமா?... இதனால்தான் ரிபு 'நான் சாப்பிடவில்லை, எனக்குத் தாகமில்லை' என்று பேசினார்.

அதற்கப்புறம் அவர் சொல்கிறார்.

ஒரு புல்லாங்குழல் வித்வான் அழகாக வாசிக்கிறார். சிறு விரல்கள் தடவிப் பரிமாற,

> செய்வதுமே விசேஷந்தானென்றாலும், வித்யைகளுக்குள்ளேயே தலை சிறந்ததாக உள்ள ஆத்ம வித்யையான ப்ரஹ்ம வித்யையை தானம் செய்தால் அதன் சிறப்பைச் சொல்லி முடியாது. ப்ரஹ்ம வித்யா தானம் செய்பவனுக்கு தேவலோகமான ஸ்வர்க்கம் மட்டுமின்றி, ஸம்ஸார பந்தமே தீர்ந்து பரமாத்மாவோடு ஐக்யப்பட்டிருப்பதான மோக்ஷமும் கிட்டி விடுகிறது'' என்றெல்லாம் புகழ்ந்து சொல்லியிருக்கிறது.
>
> — ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



"இன்னிக்கு ரிலீஸான தமிழ்ப் படம் பார்த்துட்டு தியேட்டர்ல பாதி பேர் மயங்கி விழுந்துட்டாங்களாமே?"

"ஆமா! படத்துல ஃபைட் இல்லையாம். டூயட் இல்லையாம். கதை இருந்ததாம். அதான் அதிர்ச்சி ஆயிட்டாங்க."

— சென்னிமலை செந்தில்குமார்

செங்கண் கூட வாசிக்கிறார்! ஷட்ஜ, ரிஷப காந்தாராதி ஸ்வரங்களெல்லாம் வருகின்றன அதிலே.

இப்போது பாருங்கள்... வாயால் காற்றை ஊதுகிறாரே, அதிலே - அந்தக் காற்றிலே ஸரிகமபதநி என்பது உண்டோ? ஊதுகிற காற்றிலே உண்டோ? என்றால் கிடையாது! அந்தந்த த்வாரங்களுக்கு நேரே இவர் விரல்கள் பரிமாறுகின்றன. ஒரு இடத்திலே தூக்கினால் 'ஸ' என்று கேட்கிறது. இன்னொரு இடத்திலே 'க'... காற்றிலே ஸ ரி க கிடையாது; ஆனால் அந்தந்த துவாரத்தின் வழியாக வருகிறபோது வெவ்வேறு ரூபத்தை அது அடைகிறது.

அதுபோன்றுதான் எல்லா ஜீவனும் ஒன்றாக இருந்தாலும், பண்ணக்கூடிய புண்ய பாவத்துக்கு ஏற்ப ஒன்று மனிதன் என்றும் இன்னொன்று யானை என்றும் பிறக்கிறது -

எப்படி ஸ ரி க என்கிற ஸ்வரங்களில் பேதம் ஏற்படுகிறதோ அப்படி ஆகிருதியில் இத்தனை பேதங்கள் ஏற்படுகின்றன. ஆத்மா - த்வைதம் என்று இதற்குப் பெயர்.

(தொடரும்)

பொறுப்போ பொறுப்பு!

போலீஸ் அதிகாரியின் மனைவியையும் மகளையும் பணயக் கைதிகளாக்கி, அவர்களை விடுவிக்க வேண்டுமென்றால் ராணுவ ரகசியம் ஒன்றைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்கிறது ஒரு துரோகக் கும்பல். செய்வதறியாது அதிகாரி தற்கொலை செய்து கொள்ள, இது தொடர்பாகச் செயல்பட அர்ஜுனை நியமிக்கிறது சி.பி.ஐ. துப்பறிந்து, அவர்களை விடுவிக்கும் முயற்சியின்போது ஏற்படும் குண்டு வீச்சில் 'பணயக் கைதி அம்மா' இறந்துவிட, மகள் தபுவைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அர்ஜுனுக்கு. நடுவே தகப்பனை இழந்த எதிர் வீட்டுக்காரரின் மூன்று வாரிசுகளைக் காக்க வேண்டிய பொறுப்பும் வருகிறது. கடைசியில் ராணுவ ரகசியம் கொடியவர்கள் கைக்குப் போக விடாது தடுக்கும் பொறுப்பு. (எல்லா பொறுப்புகளையும் ஆக்‌ஷன் கிங் பொறுப்பாகச் செய்து முடிக்கிறார் என்பதைத் தனியே சொல்ல வேண்டாம்!)



'டூப்' இல்லை!

அசத்துகிறார் அர்ஜுன் என்றெல்லாம் சொல்ல முடியாவிட்டாலும் மொட்டை மாடியில் நடக்கும் சண்டைக் காட்சி கவை. "டூப் இல்லை, நானேதான்" என்பதை நிரூபிப்பதுபோல் அங்கங்கே ஸ்லோமோஷன் மற்றும் ஃப்ரீஸ் ஷாட் உத்திகளைப் பயன்படுத்துகிறார்.

தோல்வி!

தபுவிடம் என்னமோ தப்பு. மாச்சீஸ் போன்ற படங்களில் அற்புதமாக நடிப்புத் திறமையைக் காட்டியவர் தமிழில் மட்டும் ஏன் இப்படிப் பட்டும் படாமலும்? சில இடங்களில் மேக்கப் கோளாறு வேறு, பளிச்சென்று தெரிகிறது.

அர்ஜுனிடம் பொறுப்பை அளிக்கும் சி.பி.ஐ. தலைவராக விஜயகுமார். அர்ஜுனின் ஐடியாக்களைப் பாராட்டுவதைத்தவிர தானாக ஒரு துப்பும் கண்டுபிடிக்கக் காணோம்.

வெற்றி!

படத்தில் நிறைய ஓட்டைகள் இருந்தாலும், படம் முடிந்து விட்டது என்று எழுந்திருக்கும் எல் லோரும், தன் தேச துரோகி மகனையே கொன்று விட்டு ஒரு முஸ்லிம் பெரியவர் முழங்கும் பத்து நிமிடப் பேச்சை நின்று கேட் பது படத்திற்கு ஒரு விதத்தில் வெற்றி தான்.

துரோகம்!

ஆனால் "சட்டத்தில் ஓட்டைகள் இருப்பதால், அதற்கு மதிப்பு கொடுக்காமல் நாமே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தீர்வு காண்பதுதான் முறை" என்று முடிக்கிறார்கள். இது தேச பக்தி இல்லை; தேசத் துரோகம்! ●

— ஜி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)

கலைமகள் தீபாவளி மலர் அன்பளிப்பு

நிரந்தர வருமானம் வரக்கூடிய பண்ணை நிலம் வாங்கிப் பலனடையும் திட்டம்.

ரூ. 10,000 மதிப்புள்ள பண்ணை நிலத்திற்குச் சொந்தக்காரராகுங்கள்

67 ஆண்டுகளாக சிறந்த முறையில் வெளிவரும் பாரம்பரியம் மிக்க **கலைமகள்**
மற்றும் **இலக்கியப்பீடம்** காலாண்டிதழ்ப் பிரதிகள்
5 ஆண்டுகளுக்கு இலவசமாகப் பெறுவீர்.

☆ **கலைமகள் தீபாவளி மலர்**
5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.

☆ **கலைமகள் மாத இதழ்**
தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.

☆ **இலக்கியப் பீடம்** காலாண்டிதழ் 5 ஆண்டுகளுக்கு அனுப்பப்படும்.

அன்னை ஆர்ச்சர்ட்ஸ் நிறுவனத்தார் பழப் பண்ணைத் திட்டத்தை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்கள்.

பண்ணை நிலம் உங்கள் பெயரிலோ அல்லது நீங்கள் குறிப்பிடும் நபர் பெயரில் உடனடியாகப் பத்திரப் பதிவு செய்து தரப்படும்.

பண்ணை நிலத்தில் ஏற்றுமதித் தரம் வாய்ந்த உயர்தர மாமரக் கன்றுகள் நடப்பட்டு இலவசமாகப் பராமரிக்கப்படும்.

சிறந்த தோட்டக்கலை மற்றும் விவசாய, பொருளாதார நிபுணர்கள் ஆலோசனைப்படி இத் திட்டம் இயங்கும்.

பயிர்கள் ஆயுள் காப்பீடு செய்யப்படும்.

5 ஆண்டுகளுக்குப் பிறகு பண்ணை நிலம் மூலம் கணிசமான தொகை பலனாகப் பெற வழியுண்டு.

விவசாய வருமானத்திற்கு வருமான வரி கிடையாது.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு பண்ணை நிலம் தேவை இல்லை எனில் அன்றைய தேதி விலையில் மறு விற்பனை செய்ய அன்னை ஆர்ச்சர்ட்ஸ் உதவி செய்யும்.

பண்ணை நிலம் இலவசமாகப் பத்திரப் பதிவு செய்ய வேண்டிய நபரின் பெயர், தந்தை/கணவர் பெயர், வயது, முகவரி, தொலைபேசி எண் மற்றும்

தொடர்ந்து கலைமகள், இலக்கியப்பீடம் பிரதிகள் இலவசமாக அனுப்ப வேண்டிய பெயர், முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு 30.9.1998க்குள் ரூ. 10,000க்கான செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி

Annai Orchards Pvt. Ltd.,
C1, Bhagyam Palace, 12A, Puliyur First Lane,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024.
Phone: 481 84 35.

இந்த ஆண்டு கலைமகள் தீபாவளி மலரைப் பெற 30.9.98க்குள் ரூ. 10,000 அனுப்பவும்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

